வார இதழ்

# ஆதவன்

பவய வெளியீடு

ATHAVAN

ஒளி: 26

10.12.2000

விலை ரூபா 12.00

Registered as a Newspaper in Sri Lanka



## தமிழர் வரலாற்றில் ஆழப்பதிந்த மனித உரிமை மீறல்களை நினைவு கூருவோம்!

# நெஞ்சோடு நெஞ்சம்

## இலக்கணமாக இலக்கியம்

நாவலும் யதார்த்தமும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். நாவல் பிறந்துதான் இலக்கியத்தில் யதார்த்தவாதம் பிறந்தது. யதார்த்தவாதமே நாவலின் ஜீவநாடி தன்னுடைய முதாதையான காவியத்திலிருந்து நாவலை வேறுபடுத்துவதே இந்த யதார்த்தவாதம் தான்.

**கொஞ்சம் விவாதிப்போமா?**

காவியம் கடந்துபோன நிலவுடைமைச் சமுதாயத்தின் இலக்கிய வடிவம். அதில் வரும் கதை மாந்தர்கள் கற்பனை மாந்தர் ஆவர். ஒரு வரையறைக் குட்பட்டு, இலக்கணத்திற்குட் பட்டுக் காவியம் படைக்கப் படுகிறது. சிந்தாமணி முதல் ராமகதை வரை நிலவரம் இதுதான்.

காவிய இலக்கணம் கதை மாந்தர்களும் காவிய நாயகனும் எவ்வாறிருக்க வேண்டும் என்று வரையறை செய்கிறது. நடுப்பண்பு (மாஸ்ட பயஸ்) என ஒன்றைப் பற்றி அது போகிறது. காவிய மாந்தர் ஒவ்வொருவருக்கும் ஒரு நடுப்பண்பு உண்டு. ராவணனுக்குப் பல்வேறு பண்புகள் இருந்தாலும் அவனது நடுப்பண்பு.ஆணவமே. இலக்குவனுக்குச் சீற்றமே நடுப்பண்பு. அனுமனுக்குப் பணிவு நடுப்பண்பு. இத்தகைய நடுப்பண்பே. இக்காவிய மாந்தர்களை இயக்கும். காவியநாயகனோ நடுப்பண்பு ஏதுமற்ற, ஆனால் எல்லாவித கல்யாண குணங்களும் பொருந்தியவனாக இருப்பான். காவியங்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து பார்த்தால் கதை மாந்தர்கள் எல்லாம் காவிய நாயகன் எனும் சூரியனைச் சுற்றிவரும் கோள்களாகவே இயங்குவதைப் பார்க்கலாம்.

காளிதாசனின் நாடக மாந்தர்களம் இத்தகையவர்களே. காவியத்தின் நாயகன் வீரனாவும் அதே சமயம் காதலானகவும் திகழ வேண்டும் என்ற நாடக இலக்கணத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டவர்களே, விக்கிரமனும், அக்னிமித்ரனும், துஷ்யந்தனும்.

அவ்வளவு தூரம் போவானேன்? மக்கள் காப்பியம் என வருணிக்கப்படும் சிலம்பின் கதை என்ன? கண்ணகி வண்ணச் சீரடி கொண்டவள். காய்கறி நறுக்கியதால் சிவந்துபோன கரத்தைக் கொண்டவள். ஒன்றுமறியாப்பபேதை. பிறர் மனம் புகாத கற்பின் கனலி. ஆனால் ஒரே கணத்தில் கணவனுக்காக வழக்குரைக்கும் வீராங்கனையாக மாறிவிடுகிறாள். பாத்திரங்களின் படிமுறை வளர்ச்சி காவியப்படைப்புக்குத் தேவை இல்லை என்பதையே இது காட்டுகிறது.

### மீண்டும் வந்த சோளகம் என்ற நூலில் இருந்து

இதிலிருந்து நாம் பெறுவதென்ன? காவியம் என்பது யாதார்த்தத்தை விட்டு விலகிய கற்பனைப் படைப்பாகும். வேறு வகையிற்சொல்வதானால் காவியம் படைத்த கவிஞர்கள் யதார்த்தவாதம் பற்றி அறிய மாட்டார்கள். ஏனெனில் அந்நாளில் இலக்கியமென்பது யதர்த்தத்தைவிட்டு விலகிப் படைக்கப்பட்டதாகும். அப்போது யதார்த்தவாதம் பிறக்க வில்லை என்பதே உண்மை.

ஆனால் நாவலோ முழுக்க யதர்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் கதைமாந்தர்கள் சாமனியர்கள். வீர தீர சாகசங்கள் செய்பவர்கள் அல்லர். தவறுகள் செய்பவர்கள், மீள்பவர்கள். மீளாதவர்கள். வாழ்க்கைக்காகப் போராடுபவர்கள். ஒடுக்கப்பட்டவர்கள். அவர்கள் அதீத மனிதர்கள் அல்லர்.

**எனின் யதார்த்தவாதம் என்றால் என்ன?**

ஏங்கல்ஸின் கூற்று நாம் அறிந்ததே. வகைப்பிரிவான கதைமாந்தர்கள் வகைப்பிரிவான சூழ்நிலையில் உலவுவதைப் படம் பிடித்துக் காட்டுவதே யதர்த்தவாதம். சமூகம் பல்வேறு பிரிவுகளாக வர்க்கங்களாகப் பிரிந்து கிடப்பதை யதார்த்தவாதம் அங்கீகாரம் செய்கிறது. குறிப்பிட்டவர்க்கத்தை, வகைப்பிரிவைச் சார்ந்த மக்களின் பொதுவான குண நலன்களையும் அதே சமயம் அந்த வர்க்கத்தைச் சார்ந்த தனி மனிதர்களின் குணநலன்களையும் அவர்கள் வாழுகின்ற சூழலின் பொதுத்தன்மையும் தனித்தன்மையையும் அது படம் பிடித்துக் காட்டுகிறது.

உதாரணமாகத் தொழிலாளி வர்க்கத்துக்கு ஒட்டுமொத்தமான பொதுக் குணம் உண்டு. அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலைகளிலும் பொதுக் குணம் உண்டு. அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலைகளிலும் பொதுத்தன்மை உண்டு. சிந்தனையிலும் பொதுமை உண்டு. அதே சமயம் எல்லாத் தொழிலாளிகளும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் அல்லர். அவர்களிடையே தனித்தமை உண்டு.

ஒரு யதார்த்தவாதக் கலைஞன் பொதுவான இவ்வொற்றுமையையும் அதன் தனிப்பட்ட வேறுபாடுகளையும் உணர்ந்து கலையாக்கம் செய்கிறான். ஆயிரம் கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டாலும் அவர்களிடையே உள்ள வர்க்கநிலையின் பாற்பட்ட ஒற்றுமையையும் வேற்றுமையையும் அவன் படம் பிடித்துக் காட்டுவான். கதாபாத்திரங்கள் நகரும் சூழ்நிலையும் அவ்வாறே!

யதார்த்தவாதத்தை முழுமையாக உள்ளடக்கிய முதல் இலக்கிய வடிவம் நாவலே! இதில் ஐயமில்லை.

இருபதாம் நூற்றாண்டிலேயே தமிழ் இலக்கிய உலகில் நாவலும் அதனோடு உடனாக யதார்த்தவாதமும் தோன்றின. தமிழின் முதல்நாவலாக நாம் ஏற்றுக் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் பிரதாப முதலியார் சரித்திரம் முதல் செ.யோகநாதனின் கிட்டி வரைநாவல் இலக்கியம் ஆழக்காலப்பரப்பி பரிம்மாண்டமான ஆலமரமாகச் செழித்து வளர்ந்து வந்துள்ளது. அதில்தான் எத்தனை ஆயிரம் கிளைகள். விழுதுகள். இவைகளில் பல யதார்த்வாதத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் இலக்கியமாகப் பரிணாமம் பெற்றுள்ளதை நாம் காண்கிறோம்.

மிகுதி அடுத்த வாரம்

# வாசகர் குரல்

ஆசிரியருக்கு,
கவிஞர் வில்வரத்தினம் எழுதிய கடிதம் தொடர்பாக;

எனது எழுத்தை வெகுநுணுக்கமாகவே வாசித்து வரும் அவருக்கு நன்றி. நான் சிவபாதசுந்தரம் பற்றி எழுதிய பத்தியில் தவறேதுமில்லை. சர்ரியலிசம் பற்றி பாலா எழுதிய நூல் பற்றி நான் நன்கு அறிவேன். அதேதளத்தில் எஸ்.வி. ராசதுரைக்கு இன்னொரு நூல் எழுதுகின்ற எண்ணம் இருந்தது. பழந்தமிழ் இலக்கியமான மணி மேகலையில் தத்துவ நிலைப்பாடான சொற்கள் இருப்பதை சோ.சி.குறிப்பிட்டிருந்ததைத் தொடர்ந்தேஅவர் சோ.சி.யை சந்திக்க விரும்பினார். எனது பத்தியில் இதனாலேயே சர்ரியலிஸம் பற்றிய நூலை எழுத எனக் குறிப்பிட்டேன். இந்நூலை எஸ்.வி. ராசதுறை எழுதும் முயற்சியை பின்னர் ஏனோ தொடரவில்லை. கவிஞர் இந்த ஒரு விடயத்தை மட்டும் வைத்துக்கொண்டு சில தகவற்பிழை களை விட்டுள்ளேன் என்று எழுதியது ஆச்சரியமாயுள்ளது. அதோடு இப்பந்தி "யோகா" என்று நான் எழுதும் சுருக்கப் பெயரிலேயே வந்துள்ளது.

இன்றைக்கு புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இளந்தலைமுறையில் ஒரு பகுதியினரிடம் வளர்ந்துவருகிறது. எல்லாத்தளங்களிலும் ஆன விபரங்கள், தகவல்களை படித்தும் அறிந்தும், தெளிந்தும் இவர்களுக்கு சொல்லும் விருப்பத்தோடு நான் இயங்கிவருபவன். இதனால் ஒருபடைப்பாளன் என்ற விதத்திலே எனது ஆக்கங்களை எழுதுகின்ற நேரத்தையும் இழந்துபோகிறேன். என் மதிப்பான இதழொன்று -ஆதவன்-புத்தகப்பக்கங்கள், நேர்காணல், சில இலக்கியக் குறிப்புகளை எழுதக் கேட்டபோது நான் ஒத்துக்கொண்டதற்கான காரணம் இது மட்டுந்தான். இதற்காக நிறையவே படிக்கவேண்டிவரும் என்பதை வாதிட்டு நிறுவவேண்டியதில்லை, இது எனக்கு நிறைவையும் தருகிறது.

இருபது பக்கங்கள் வரை வரும் ஆதவனில் நான் 3 பக்கங்கள் வரையே எழுதுகிறேன். இதை ஒரு கை எழுத்தாதிக்கம் ஆக்கிர மிப்பு என்று கவிஞர் கூறுகிறபோது இவர் என்ன மனப்பான்மையோடு இதைச் சோல்கிறார் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

என் மனதிலே நிலைய இலக்கிய புதுப்புனைவுக் கனவுகள் உண்டு. இக்கனவுகளை நனவாக்க நிறையவே படிக்கவும் எழுதவும் வேண்டியுள்ளது. பதிப்பாளன் என்ற கடமை வேறு நேரத்தைப் பிடுங்கிக் கொள்கிறது. தமிழில் குழந்தை இலக்கியம், கலைக்களஞ்சியம் என்பனவற்றை சர்வதேச அளவில் உருவாக்கும் முயற்சிகள் இதனால் தாமதமடைகிறது. புதிதுபுதிதாக வரும் நூல்களைப் படிக்கவேண்டும் என்ற ஏக்கம், வேறு ஆக்கங்களுக்காக தகவல் புத்தகங்களைத் தேடுகையில் நேரந்தோலைந்து பெருமூச்சுகளை உதிரவைக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் இப்படியான கருத்துக்கள் வரும்போது மனதினுள் சோர்வு ஏற்படுகின்றது. ஆயினும் இது சில கணங்களே.

நான் வலிந்து போய் எழுதுவதற்கு தளம் தேடவேண்டிய நிலையில் உள்ளவன் அல்ல. என் முன்னோரிடமிருந்து கற்றதையும் தெரிந்து கொண்டதையும் என்தலைமுறைக்கும் பின்னோக்கும் எனக்குத் தளம் தரும் ஊடகங்கள் வாயிலாகச் சொல்கிறேன். எம்.ஏ.நுஃமான் தன் ஆற்றாமையுடனான நையாண்டியோடு நான் பல பத்திரிகைகளில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருப்பதாகச் சொன்னார். தம்மால் இயலாததற்கு பிறர் மேல் வயிற்றெரிச்சல் பட்டு ஆவதென்ன?

படிப்பாளியும் தனது துறையில் குறிப்பிடப்படுபவருமான கவிஞர் எனது நிலையை இப்போது உணர்ந்திருப்பார் என்பது என் நம்பிக்கை

செ.யோகநாதன்
202/1 காலிவீதி,
கல்கிசை.

# நாடு கடத்தல் தொடருமா?

## இதன் பின்னணி என்ன?

ஈழத்து அரசியலில் பரவலாககவே அறியப்பட்ட ஈழவேந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அங்கே வசிப்பதற்குரிய ஆவணங்கள் ஏதுமில்லாமல் இருந்ததுதான் நாடுகடத்தலுக்குரிய காரணம் என்று சொல்லப்படுகிறது. ஈழவேந்தன் இலங்கை அரசினால் மோசமாகத் துன்புறுத்தப்பட்டு சொத்துகள் யாவையும் இழந்து இலங்கையைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்த படிப்பாளி. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகியதும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறி தீவிர அரசியலுக்கு வந்தவர். ஈழத்தமிழரின் உரிமையை வலியுறுத்திப் பேசியும், அறிக்கைகளை வெளியிட்டும் செயலாற்றியவர். இவர் ஏற்கனவே பலமுறை தமிழக அரசினதும், மத்திய அரசினதும் உளவுத் துறையால் விசாரிக்கப்பட்டவர். கிட்டத்தட்ட நான்கு வருஷங்களின் முன் புலிகளுக்கு நிதி மருத்துவ உதவி புரிய முயன்றதாக குற்றஞ் சாட்டி, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களில் ஒருவர் ஈழவேந்தன். தமிழக முதல்வர் கருணாநிதி, தனது அரசியல் இருப்புக்கும் பதவிக்குமாக எதையுமே பலிகொடுக்கத்தயாரானவர் என்பதை மேற்படி நடவடிக்கையிலே நிரூபித்துக்காட்டினார்.

ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்ட வேளையில் கருணாநிதி தெளிவாக ஒரு விடயத்தைக் கூறியிருக்கிறார். விடுதலைப் புலிகளை ஆதரிக்கிற எவரையும் எந்த இயக்கத்தையும் நான் சகித்துக் கொள்ளமாட்டேன். தடைசெய்து விடுவேன் என்பது அவரின் உறுதியான குரல். தன்னுடைய ஆட்சியை வாஜ்பாய் கலைத்துவிடலாம் என்ற பயமா இதன் காரணம்? ஆனால் வாஜ்பாய் அரசே இப்போது நிலைதடுமாறுகிறது. பாபர்மசூதிக் குழப்பத்திற்கு அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, உமாபாரதி ஆகியோர் காரணஸ்தர் என இந்திய உளவுப் பிரிவு சி.பி.ஐ கூறி, இதனால் பெரிய பூகம்பமே இந்திய அரசியலில் வெடித்துள்ளது.

தமிழகத்தில் லட்சக்கணக்கான ஈழ அகதிகள் உள்ளனர். இவர்களில் அறுபதுவீதமானோர் முறையான பதிவுகள் இன்றி அங்கு வாழ்கின்றனர். அப்படியானால் ஈழவேந்தன் மட்டும் இந்தக் காரணம் ஒன்றிற்காக மட்டும் ஏன் இரவோடு இரவாக ரகசியமாக நாடு கடத்தப்பட்டார்? ஆனால் முன்னர் அவர் கைதுசெய்யப்பட்டபோது இதே குற்றத்திற்காக ஏன் அவர் நாடு கடத்தப்படவில்லை? தமிழக உளவுப் பிரிவுக்கு, இலங்கைப் போராளிகள், அவர்களின் நிலைமைபற்றி தகவல்கள் கொடுக்கின்ற ஈனத்தனமான ஈழத்துநபர்கள் சிலர் இருக்கின்றனர். இவர்களை வைத்தே பிராமண ஏடான இந்துவும் வேறுசில ஊடகங்களும், தமிழக அரசும் ஈழத்தமிழர் பற்றி மோசமான கருத்துக்களை வெளியிடுகின்றன. துவேஷம் கக்குகின்றன.

தமிழகத்தில், ஈழத்தமிழருக்கும் போராட்டத்துக்குமான ஆதரவு அலைபெருக்குகின்றது. இதே வேளை இந்திய அரசு இலங்கைக்கு செய்யும் இராணுவ உதவிகளும் அம்பலத்துக்கு வருகின்றன. இதற்கும் தமிழகத்தில் எதிர்ப்பு உருவாகிறது.

இவற்றுக்கு எதிராகவே இந்த நாடுகடத்தல், இதுஈழவேந்தனோடு நிற்கப் போவதில்லை. தொடரப் போகிறது. பல எதிர்விளைவுகள் தோன்றவும் போகின்றன என அரசியல் அவதானிகள் கூறுகின்றன.

## யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் விடுதலை

– யாழ் நிருபர் –

தென்மராட்சி மந்துவில் பகுதியில் கடந்த மாதம் 4ம் திகதி இடம்பெற்ற கிளைமோர் குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததையடுத்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மந்துவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நீர்வேலியில் தங்கியிருந்த இராசையா ஸ்ரீரங்கநாதன் எனும் 20 வயது மாணவன் தனது வீட்டில் தங்கியிருந்து தந்தையை பார்க்கச் சென்ற வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். அன்று முழுவதும் இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். 14 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவரது கைதையடுத்து யாழ் தொழிநுட்பக்கல்லூரி மாணவர்கள் முழுமையாக விரிவுரைகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் குதித்தனர். இவர்களிற்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் தமிழ்க்கட்சித்தலைவர் சிலரது ஆழுத்தங்களையும் அடுத்து சுமார் ஒரு மாதா காலத்தின் பின் கடந்த 4ம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் இவர் ஆஜர் படுத்தப்பட்டார்.

புலிகளுக்கு ஒத்துழைப்பினை மாணவன் வழங்கினான் எனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார் இதற்கு ஆதாரமாக பல பொருட்களையும் சமர்ப்பித்தனர். இவ்வாதாரங்களை நிராகரித்த நீதவான் இம்மாணவனை குற்றங்களிலிருந்து விடுவித்து விடுதலைசெய்தார்.

மேற்படி அநாவசியமான கைதால் தொழில்நுட்பக் கல்லூரியின் நூற்றுக்கணக்கான மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புப்போராட்டத்தினால் தமது வருடாந்த இறுதிப்பரீட்சையை தவற விட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அபிவிருத்திக்கான பணம் தண்ணீரில்


ஊழல் செயற்திறன் இன்மை என்பவற்றால் சென்ற ஆறு வருட காலங்களில் செலவழிக்கப்பட்ட 27, 314 கோடி ரூபாக்கள் வீனாக விரயமாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சென்ற ஆறு வருடங்களாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 40 வீதம் ஊழல்,செயற்தினின்மை போன்ற காரணங்களால் வீணாகிச் சென்றுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளின்படி 1995- தொடக்கம் 2000 ஆண்டுக்குள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் செலவிட்ட பணத்தின் அளவு 68, 286 கோடி ரூபாய்களாகும். அதில் 40 வீதம் என்பது 27,314 கோடி ரூபாய்களாகும்.

சென்ற 18ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படும்போது பரிபூரண மதிப்பீடுகள் 24 முன்வைப்பட்டு 4,211 கோடி ரூபாக்கள் பெற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் கருனாசேன கொடிதுவக்கு அவர்கள் அதில் 3000 கோடி ரூபாக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செலவழித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒதுக்கப்படும் பணங்களை சூறையாடுவதும் வீண்விரயம் செய்வதும் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றதெனக் குறிப்பிடும் கொடிதுவக்கு அவர்கள் இந்தச் செலவிற்காக சென்ற ஆறு வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு 1,14,196கோடி ரூபாக்களெனவும் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பணத்தால் குறைந்தபட்சம் விரயமாக்கப்பட்ட பணத்தின் அளவு 25 வீதம் ஆயின் ஊழல் செயற்திறனின்மை என்பவற்றின் காரணமாக விரயமாகியுள்ள பணம் 57 தொடக்கம் 63 கோடி ரூபாக்களென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## நூல்கள் அறிமுகம்

கலாநிதி ஏ.எஸ் சந்தராஜாவின் பாவனை பேசலன்றி (சிறுகதைதொகுப்பு) தமிழ் முழக்கம் வானொலிக்காக முக்கிய பிரமுகர்கள் வழங்கிய பேட்டிகளின் தொகுப்பு எனும் இரு நூல்களும் டிசம்பர் 9ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண கருத்தரங்கு மண்டபத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அறிமுக விழா பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில் ஆ.சிவநேசச்செல்வன் (பிரதம ஆசிரியர் தினக்குரல்) எஸ்.வன்னிய குலம் (பணிப்பாளர் ரூபவாஹினி தமிழ் பிரிவு) டொமினிக் ஜீவா (ஆசிரியர் மல்லிகை) திருமதி அன்னலஷ்மி ராஜதுரை (உதவி ஆசிரியர் வீரகேசரி) ஆகியோர் ஆய்வுகளை வழங்கவுள்ளனர் அதற்கான பதிலுரை கலாநிதி ஆ.சி.சுந்தராஜா வழங்கவுள்ளார்.

## ஈழத்தமிழர் அரசியல் வரலாறு கருத்தரங்கு

ஒஸ்வின் தொழிலாளர் பாடசாலை டிசம்பர் 11ம் திகதி திங்கள் மாலை 5.30 மணிக்கு 143 கியூ வீதி கொழும்பு 02ல் உள்ள அண்ணாமலை நினைவு மண்டபத்தில் ஈழத்தமிழர் அரசியல் வரலாறு என்ற தலைப்பில் விரிவுரையை ஏற்பாடு செய்துள்ளது. விரிவுரையை பத்திரிகையாளரும் ஆய்வாளருமான நல்லாயன் கன்னியர் மட ஆசிரியர் திரு. சி.அ.யோதிலிங்கம் அவர்கள் ஆற்றவுள்ளார்.

## விநோதன் குமாரசுவாமி நினைவுக் கலாநிகழ்வு

விநோதன் நினைவாலயம் தயாரித்து வழங்கும் விநோதன் குமாரசுவாமி சட்டத்தரணி அவர்களின் 5வது அண்டுநினைவுக் கலாநிகழ்வு டிசம்பர் 12ம் திகதி. ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# இந்தியா திடீரென இலங்கைக்கு வழங்கும் இராணுவ உதவி

# பெரும் சந்தேகத்தை கிளப்பியுள்ளது

இலங்கையின் இனநெருக்கடிக்கும் உள்நாட்டு மோதல்களுக்கும் தீர்வொன்றைக் காண்பதற்கு சர்வதேச நல்லெண்ண முயற்சிகள் ஓரளவிற்கு உடன்பாடு காணப்பட்டு கை கூடியிருக்கம் இன்றைய சூழ்நிலையில் இது தொடர்பாக இந்தியா மேற்கொண்டிருக்கும் புதிய காய்நகர்த்தல்கள் இலங்கையின் எதிர்காலம் குறித்தும் சமாதானம் தொடர்பாகவும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.



இலங்கையின் இனநெருக்கடியும் உள்நாட்டு மோதல்களும் ஆரம்பித்த 1983 தொடக்கம் இன்று வரை அதன் செல்வாக்கை நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்தி வந்த இந்தியா தனது அயல்நாடான இலங்கையின் உள்விவகாரம் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதையோ இல்லையேல் மேற்கத்தைய நாடுகளின் மத்தியஸ்த முயற்சிகளால் தீர்வொன்றைக் கண்டு சமாதானத்தை எட்டுவதையோ ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோபக்குவமற்ற இராஜதந்திர நடைமுறைகளையே இந்தியா தற்போது மேற்கொண்டுள்ளதாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த மாதம் வன்னிப் பகுதிக்கு சென்ற நோர்வேயின் விசேட தூதர் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது டன் பேச்சுவர்த்தைக்கு ஊடாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்கு இவ்வருட இறுதிக்குள் லண்டனில் ஆரம்பப் பேச்சுவார்த் தைகளை நடத்துவதற்கான ஒழுங்கு களை மேற்கொண்டமை.

அத்துடன் புலிகளின் மாவீரர் தினச் செய்தியில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயராக இருப்பதாகவும், நோர்வே முன்னெ டுக்கும் சமாதான முயற்சிகளை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரை அமைந்திருந்த மையும் இதுவரை காலமும் இனநெருக்கடி விவகாரத்தில் ஆதிக்கம் செலுத்திய இந்தியாவின் அணுகுமுறை தொடர்பாக பிரபாகரன் ஒருவார்த்தை தானும் குறிப்பிடாததும் இந்தியாவிற்கு எரிச்சலையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியிருக்க கூடுமென்றும் அரசியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா இலண்டன் சென்று முக்கிய அரசியல்வாதிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த வேளையில் இலங்கை யின் தலைநகர் கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய புலனாய்வுத் துறை உயரதிகாரிகள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பாக இலங்கை அரச அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

சுமார் இருவாரகாலம் இந்திய மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) உயரதிகாரிகளான எம்.என். தியாகராஜா, எஸ்.வி.சிவப்பிரகாசம், என்.மிஷ்ரா ஆகிய மூவரும் கொழும்பில் சிறைவைக்கப்பட்டுள்ள முக்கிய புலிகள் இயக்க உறுப்பினர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பெற்றுச் சென்றுள்ளதாகவும் முக்கிய தமிழ்க் கட்சியொன்றின் தலைவருடனும் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கெல்லாம் அப்பால் இலங்கைப் படையினருக்கு முன்னொரு போதுமில்லாதளவிற்கு இந்தியா இராணுவ உதவிகளை அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப் பாக இலங்கையின் கடற்படையை நவீனமயப் படுத்துவதற்கு வேண்டிய பயிற்சிகளையும் உதவிகளையும் இந்தியா பெருமளவில் அதிகரித் துள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்திய கரையோர ரோந்துக் கப்பலான (ஓ.பி.பி) "ஜஎன்எஸ்சர்யூ" என்ற ஹெலிக் கொப்டர் தாங்கிக் கப்பலை வழங்கியுள்ளதுடன் கேரளமாநிலம் கொச்சியிலுள்ள கடற்படைத் தளத்தில் 200 இலங்கைக் கடற்படையினருக்கு நவீனபயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இலங்கை கடற்படையினர் உயரதிகாரிகள் குழுவொன்று பம்பாய்க்கு விஜயம் மேற்கொண்டு மசாகோன் டொக்ஸ் லிமிட்டெட்டுக்கும், கல்கத்தாவிலுள்ள கார்டின் றீச் கப்பல் கட்டும் தளங்களில் புதிய கடற்படைக் கப்பல்கள் கொள்வனவு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.



இந்தியா வழங்கியுள்ள கடலோர பாதுகாப்பு ஹெலிகொப்டர் தாங்கிக் கப்பலே இலங்கையின் கடற்படையில் முதன்முதலாக விமானப்பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா திடீரென இலங்கையினருக்கு இவ்வாறான இராணுவ ரீதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளமையானது பல்வேறு மட்டங்களிலும் சந்தேகங்களை உருவக்கியுள்ளது. அதுமட்டுமன்றி இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இன்றைய தருணத்தில் பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பாக ஆராய வேண்டிய அவசியமென்ன என்ற கேள்விகளையும் பரவலாக எழுப்பியுள்ளது.

ஏனெனில் இவ்வருடம் நடுப்பகுதியில் இலங்கை அரச படைகளின் மிக நீண்டகால பழமை மிக்கதும் குடாநாட்டின் பிரதான கேந்திர பலம்பொருந்திய ஆனையிறவு படைத்தளத்தை வெற்றி கொண்ட புலிகள் தென்மராட்சியின் பல பகுதிகளை மீட்டெடுத்து யாழ்ப்பாண நகரத்தை அண்மித்த போது புலிகளின் தாக்குதல் வேகத்தை கட்டுப்படுத்த இலங்கை அரசு விடுத்த அவசர வேண்டுகோள்களை முற்று முழுதாக நிராகரித்து எந்தவொரு தரப்பிற்கும் இராணுவ உதவிகளை வழங்க முடியாது மனிதாபிமான உதவிகளை மட்டுமே வழங்க முடியுமென்ற கடும் போக்கில் இருந்த இந்தியாவின் நிலைப்பாட்டில் தற்போது பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ள தையே அவதானிக்க முடிகிறது.

இதைவிட கடந்தவாரம் இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இந்தியாவின் ஒருமைப் பாட்டிற்கும், இறைமைக்கும் அச்சுறுத்த லாக உள்ளதாலேயே புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், அனுதாபிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் அவ்வாறானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பான விடயத்தில் வாஜ்பாய் தலைமையிலான அரசு உறுதியாகவே செயற்படுமென்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த 17வருடங்களாக தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் வசித்தவரும் ஈழவிடு தலை முன்னணியின் தலைவர் ஈழவேந்தன் கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

சென்னை அரும்பாக்கத்திலுள்ள ஈழவேந்தரின் வீட்டுக்குச் சென்ற இந்திய உள்துறை அமைச்சின் அதிகாரிகளும், புலனாய்வுத்துறை அதிகாரிகளும் இந்தியாவில் தங்கியிருப்பதற்கான ஆவணங்கள் உள்ளதா என்று கேட்டு விசாரணை நடத்திய பின்னர் அன்றைய தினமே விமானம் மூலம் கொழும்புக்கு நாடு கடத்தியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தராக இருந்த ஈழவேந்தன் தந்தைசெல்வாவின் மறைவிற்கு பின்னர் அமிர்தலிங்கத்துடன் முரண்பட்டு கோவை மகேசன், டாக்டர் தருமலிங்கம் ஆகியோருடன் வெளியேறியவர் பின்னர் 1983இல் இந்தியாவிற்கு சென்று கடந்த வருடங்களாக சென்னையில் குடும்பத்தினருடன் வசித்து வருபவராவார்.

ஈழவேந்தன் திடீரென இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டதும் சாதாரண ஒரு விடயமல்ல. இந்தியா மேற்கொள்ளும் அண்மைய அதிரடி நடவடிக்கைகளின் ஓர் அம்சமேயென்றும், இந்தியாவில் இருந்து ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படுபவர்களுக்கு எச்சரிக்கையாகவே ஈழவேந்தனின் நாடு கடத்தல் சம்பவம் சுட்டிக் காட்டப்படுகிறது.

அதேநேரம் இந்திய அரசில் பிரதான பங்கு வகிக்கும் வைகோ, ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ஆகியோர் தீவிர புலி ஆதரவாளர்களாக இருந்த போதிலும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் எந்தவொரு செல் வாக்கும் செலுத்த முடியாத ஒரு போக் கையே இச்சம்பவங்கள் சுட்டிக்காட்டு கின்றன.

இலங்கையின் ஆயுத மோதல்களில் ஈடுபட்டிருக்கும் அரசபடைகள்- தமிழ்ப் போராளிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் ஆயுதங்களையும், அரசியல் செல்வாக்கை பிரயோகித்து எஜமானாகச் செயற்படும் இந்தியா சர்வதேச சமூக்தின் இணக்கத்துடன் இலங்கையின் இனநெருக்கடிக்கு தீர்வொன்று எட்டப்படுவதை தடுப் பதற்கான புதிய காய்நகர்த்தல்களே அண்மைக்கால நடவடிக்கைகளின் வெளிப்பாடாகவுள்ளன.

இந்தியாவின் இன்றைய மேலாதிக்க நிலைப்பாட்டின் அச்சுறுத்தல்கள் எதிர்கால இலங்கையின் ஒட்டுமொத்த நலன்களுக்கும் விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே உள்ளதென்பதை சகல தரப்பினரும் உணர்ந்து கொள்ளத் தவறினால் இனநெருக் கடிக்கும் உள்நாட்டு மோதல்களுக்கும் ஒரு போதும் தீர்வொன்றைக் காணமுடியாது.

**செந்தணலோன்**

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672, 851814
விநியோகப் பிரிவு - 842064
தொலைமடல் - 851814

### வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை வாசகருக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம் எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# சமாதான, பேச்சுவார்த்தை தொடர்பாக அரசின் உறுதியான கருத்து நிலைப்பாடு என்ன?

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையின் பின்பு சர்வதேச மட்டத்தில் இலங்கையில் நடைபெறும் கொடூர யுத்தத்திற்கு எதிரான சமாதான அழைப்புக்கான அலைகள் அடிக்கத் தொடங்கியுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசின் உறுதியான நிலைப்பாடு, கருத்துப்பற்றி சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அத்துடன் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது பற்றியும் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். உண்மையாக இதய சுத்தியுடன் கூறுவதானால் சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசு தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்பது அநேகரது கருத்தாகும். இருந்த போதிலும் புதிய அரசியல் யாப்பினூடாக அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளப் போவதாக அரசின் உயர்மட்ட பிரமுகர்கள் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். அத்துடன் நிபந்தனையற்ற சமாதான பேச்சு வார்த்தை பற்றி சிலர் குறைத்து மதிப்பிடுவதுடன் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை பிரதானமான தலையங்கமாகக் கொண்டுள்ளனர்.

இதற்கு முக்கிய காரணங்கள் நம்பிக்கையீனங்களாகும். அரசு பிரபாகரன் மீது முழுமையான நம்பிக்கை வைக்கவில்லை. கடந்த காலத்தில் நடைபெற்ற கடும் தாக்குதல்களும் அவரது அரசியல் நிலைப்பாடும் பேச்சுவார்த்தைகளுக்கான முறிவுமே இதற்கு காரணமென இவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அரசின் மீது முழுமையான நம்பிக்கை இல்லை. அரசின் பெருந் தேசியவாத போக்கும் கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களும் இதற்கு காரணம் என கூறப்படுகின்றது.

ஆனால் இவ்விதமான செயல் பாட்டின் மூலம் ஆக்கபூர்வமான ஒரு சமாதான நிலையினை எவரும் எட்ட முடியாது. கடந்த கால சம்பவங்களை நினைவில் வைத்துக் கொண்டு இரு சாராரும் பேச்சு வார்த்தையில் ஒரு மேசையின் முன் அமரமுடியாது. முதலில் நம்பிக்கையீனங்களை களையப்பட வேண்டும். அதற்கான ஒழுங்கான இரு சாராரும் ஏற்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும். அல்லது நாட்டு மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றக் கூடிய விதத்தில் கபடத்தனமாக இரு சாராரும் நடந்து கொண்டால் ஏற்படப் போவது சர்வநாசமாகும், எனவே முதலில் தளராத நம்பிக்கையை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான முதல் அடியை அரசு எடுத்து வைக்க வேண்டும்.

ஆசிரியர்.

# எதிர்காலத்தில் அரசு தாக்குப்பிடிக்குமா?

**விக்டர் ஐவன் எழுதுகிறார்**

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தமது அனைத்து குறைபாடுகளையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் மூடி மறைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைப் போல் தெரிய வருகின்றது.

இருந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படை அரசியல் பின்னணியொன்றை ஏற்படுத்திக் கொள்ளாமல் சமாதான பேச்சுவார்த்தைக்கு செல்ல முனைகின்றது.

தேர்தல் கபடத்தனங்களுக்கும் வன்முறைகளுக்கும் தொடர்பான எவருக்கும் பதவிகள் வழங்கப்போவதில்லையென ஜனாதிபதி கூறியிருந்த போதிலும் பதவிகள் வழங்கப்பட்டது அவைகளை முக்கிய தகைமைகளாகக் கொண்டவர்களுக்கு மாத்திரமே என்பது தெரியவருகிறது.

பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு மதுபான அனுமதிப் பத்திரம் வழங்கியதற்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ள எதிர்ப்புகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்காமல் இருக்கலாம், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி நிறைவேற்றுக் குழு அறிவித்துள்ளது. இருந்தாலும் இது பொதுமக்களை ஏமாற்றுவதற்கான முன்கொண்டு வரப்பட்ட ஒரு பொய்யான செய்தி மட்டுமேயாகும்.

பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களை மீளப் பெறமுடியாத நிலையே உள்ளது. அவ்வாறு செய்யப்படுமேயாயின் நாடு பூராவும் புதிதாகத் திறக்கப்பட்ட அனைத்து மதுபானக் கடைகளையும் மூட வேண்டி வரும். இருந்தாலும் இதுவரைக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களோடு கொண்டு நடாத்தப்படும் எந்தவொரு மதுபானக் கடையும் மூடியாதாக இல்லை. மூடப்படுமென எதிர்பார்க்கவும் முடியாது. அதிகமான மதுபான அனுமதிப்பத்திரங்கள அமைச்சர்களுக்கே் வழங்கப்பட்டுள்ளது ஐந்திலிருந்து ஏழு வரையிலான அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற அமைச்சர்களும் உள்ளனர். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு அனுமதிப்பத்திரமேனும் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப்பிரதிநிதிகளாகாத உயர் ஆலோசகர்களுக்கும் மதுபான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, ஜனாதிபதிக்காரியதரிசி செயலகத்தில் செயலாற்றும் சிலரும் மதுபான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ளனர்.

எந்தவொரு அமைச்சரும் பாராளுமன்ற அங்கத்தவரும் தமது பெயரில் கடைகளை கொண்டு நடாத்துவதில்லை சிலர் தனது மனைவியின் பெயரிலோ அல்லது குடும்ப உறவினர் பெயரிலோ மதுபான வியாபாரத்தினுள் நுழைந்துள்ளனர். இன்னும் சிலர் சில வியாபாரிகளுக்கு மதுபான அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்ததோடு இன்னும் சிலர் மாதாந்தம் ஒரு தொகை தமக்கு வருமானமாகக் கிடைக்கும் படியாக தேர்ந்தெடுத்துக் கொண்ட சில ஆதரவாளர்களுக்கு வழங்கும் முறையொன்றைத் கையாண்டுள்ளனர். பொதுவாகக் கொள்ளும் போது ஒரு சிலரைத் தவிர பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகமான அமைச்சர்களும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் எதோ ஒரு வகையில் மதுபான வியாபாரத்துடன் தொடர்பு கொண்டவர்களாகவே இருக்கின்றனர். சாதாரணமாக வெளிநாட்டு குடிவகைகள் விற்பனை செய்யும் மதுபானக் கடைகளில் போத்தல் அடிப்படையில் தவிர சில்லறை விற்பனை தடைசெய்யப்பட்டதாக இருந்த போதிலும் தற்போது சில்லறை விற்பனை நடைபெறாத ஒரு கடையையேனும் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாகும். அதிகமான மதுபானக் கடைகள் இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக கள்ளச் சாராயம் விற்பனை செய்யும் நிலைக்கு வந்துள்ளதோடு, பிரதேச மதுபானக் கடைகளோடு பிரதேச அரசியல் வாதிக்குள்ள தொடர்பின் காரணத்தால் இவ்வாறான சட்ட விரோதமான செயல்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்குப் பொலீஸார் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனநாயக அரசியல் ஒழுக்க நெறிகளுக்காக வேண்டி எதிர்க்கட்சிகள் வேண்டி நிற்கும் நான்கு ஆணைக்குழுக்கள் பற்றிய அரசின் கொள்கை விலகிச் செல்லும் கொள்கையொன்றாகவே இருக்கின்றது. அது போன்ற ஆணைக்குழுக்களின் தேவைபற்றி தாம் உணர்ந்து கொண்டிருப்பதாகவும், அந்தக் ஆணைக்குழுக்களை நியமிக்க புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றிக் கொள்ள ஒத்துழைப்பு வழங்கப்பட்டு இருக்குமேயாயின் தடங்களின்றி இவ்ஆணைக்குழுக்களை அமைத்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்குமெனவும் ஜனாதிபதி தமது கொள்கைப் பிரகடனத்தின் போது தெரிவித்திருந்தார்.

இந்த நான்கு விடயங்களுக்குமாக ஏதேனும் நான்கு ஆணைக்குழுக்களை ஏற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது. மிகவும் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்படும் அதிகாரத்தின் அளவும், அவைகளுக்குக் கிடைக்கும் சுயாதீனமும் இவ்வாணைக் குழுக்களுக்கு நபர்களைத் தெரிவு செய்யும் செயற்பாடுகளும் எவ்வாறு அமையும் என்பதே முக்கியமானதாகும்.

உத்தேச புதிய அரசியல் யாப்பினுள் உட்புகுத்தப்பட்டுள்ள எந்தஆணைக்குழுவும் இவ்வாறான பலம் கொண்ட அத்திவாரங்கள் உள்ளவையாக தெரிவதில்லை. மிகவும் முக்கியமான பதவிகளுக்கு நபர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிகளுக்கு அவ்வாறன கட்டுக்கடங்காத அதிகமான அதிகாரங்களை வழங்கப்படும்போது நியாயமாக செயற்பாடுகள் ஒப்புவிக்கப்படுவதாகவும் இல்லை. நவீன உலகம், மிக முக்கியமான பதவிகளுக்கு நபர்களைத் தெரிவு செய்யும் செயற்பாட்டை ஆட்சித்தலைவர்களின் விருப்பப்படி கட்டுப்படுத்த முடியாத வகையில் தெரிவு செய்ய முடியாத முறைகளை ஏற்படுத்திக் கொள்வது அதனாலேயேயாகும்.

மறுபுறதில் ஜனனாயக ரீதியான பாராளுமன்ற நாகரீகமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக தேவையான சில காரணங்களை நிறைவு செய்ய புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் வகையில் பிற்போடத்தேவையில்லை. துஷ்பிரயோகங்களற்ற நியாயமான தேர்தல் ஒன்றிற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தேவை பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கு முன்பே தேவையாக இருந்தது. ஜனாதிபதித் தேர்தலின் போது



நடைபெற்ற ஊழல் பற்றிய அனுபவங்களைக் கொண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவின் தேவை பற்றி ஐரோப்பிய சங்கம் அரசுக்கு வலியுறுத்தியிருந்த போதிலும், அரசாங்கம், அதனைப் பற்றிக் கவனம் கொள்ளவில்லை. ஜனாதிபதித் தேர்தலின்போது பெற்ற வெற்றியை மேலும் பாதுகாத்துக் கொள்வதற்காக பாராளுமன்றத் தேர்தலை எந்த முறையிலேனும் வெற்றி பெற வேண்டும் என அரசு கருதியது.

வீழ்ச்சி பெற்றுள்ள சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கான உபாய மார்க்கமாக அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முன்வந்திருந்த போதிலும், அதற்கேற்ற வகையில் ஆயத்தங்களில்லாமல், தேவையான பின்னணியை உருவாக்கிக் கொள்ளாமல் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தற்போதுள்ள சிக்கலான நிலையை மேலும் சிக்கலாக்கும். சமாதான பேச்சுவார்த்தைகள் பற்றிய போக்கு ஈ.பி.டி.பி கட்சியினால் திருப்தியற்ற தன்மையினை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளதோடு முஸ்லிம் காங்கிரசோடும், தேசிய ஐக்கிய முன்னணியோடும் ஏற்பட்டுள்ள சிக்கலை அரச் முழுமையாகத் தீர்த்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவதற்கில்லை. இந்த அனைத்து பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அதிகப்படியான நான்கு உறுப்பினர்களின் வாக்குகளினால் தம்மைப்பாதுகாத்துக் கொள்ளும் நிலையில் அரசு உள்ளது. அரசு சூறாவளிக் காற்றுக்களின்றி சாதாரணமான அரசியல் காற்றுக்குக் கூட தாக்குப் பிடிக்கும் நிலையில் இல்லை.

எதிர்கட்சி புதிய வருட ஆரம்பத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசை அசைக்கும் முதல் வேட்டாக அமைய உள்ளது. இதுவரைக்கும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் செயற்பட்ட நீதியரசரைப் பலிகொடுப்பதைதவிர அரசுக்கு வேறு எந்தவிதமான மாக்கங்களும் இல்லை. இருந்தாலும் அதனோடு இது வரையில் நீதிமன்றத்தில் அரசுக்கு கிடைத்த அரசு சார்பான பாதுகாப்பும் இதனோடு முடிவடைந்துவிடும்.



இலங்கையில் தேவதாசிகள் கொண்டு வரப்பட்டமைக்கான சான்றுகள் எவையும் இல்லை. எனினும் அவர்கள் இங்கு வந்து தங்கியமைக்கான அடையாளங்கள் இங்கு உள்ளன. இவர்களின் கலை நுட்பங்கள் சிங்கள புலவர்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தியமையை சிங்கள இலக்கியங்களில் காணக்கூடியதாக உள்ளன, அதே வேளை யாழ்ப்பாண இலக்கியங்களில் இவர்கள் வந்தமைக்கான சான்றுகள் இருந்ததாயினும் இவர்களை வர்ணிப்பதற்கு பாவிக்கப்பட்ட சொற்பதங்களை அவதானிக்கும் போது சீரழிந்து போன சமூக அந்தஸ்தை குறிப்பனவாய் இருந்தது. எனினும் சிங்கள புலவர்கள் மத்தியில் இவர்கள் எவ்வாறான தூற்றுகலுக்குமுள்ளாகவில்லை என்பதை இங்கு அழுத்திக் கூறலாம்.

# இலங்கையில் தேவதாசிகள்

**தேவதாசிகள் தொடர்பான இவ்வாய்வுக் கட்டுரை கலாநிதி செல்வி திருச்சந்திரனின் தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண் நிலை நோக்கு எனும் புத்தகத்திலிருந்து வாசகர்களுக்காக தொடர்சியாக தொகுத்து வழங்கப்படுகிறது.**

**தொகுப்பாசிரியர்**

எந்த வரலாற்றுத் தோற்றப்பாடுகளையும் அது தோன்றியது தொடர்பான வரையறுக்கப்பட்ட காலப்பகுதியை நமது எந்த வரலாற்று நூல்களுமே கூறவில்லை. ஏறத்தாழ, ஏறக்குறைய என்பன போன்ற சொற்பதங்களுக்குள்ளேயே வரலாற்று நூல்களின் காலக்கெடுக்கல் அமைந்துள்ளன. அதேபோல் தேவதாசிகள் தொடர்பான விடயத்திலும் அவர்கள் எப்போது இலங்கைக்கு கொண்டு வரப்பட்டார்கள் என்பது இன்னும் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. எனினும் சோழர் காலத்தில் தான் இவர்கள் கொண்டுவரப் பட்டிருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது. சில வேளைகளில் இது ஒரு பிரபலமான கோவில் சம்பந்தப்பட்ட விழாக்களில் நிகழ்ந்திருக்கலாம் அதுவும் இலங்கை அரசனின் வேண்டு கோளுக்கிணங்க இந்திய அரசர்கள் அதை உத்தியோக ரீதியாக அணுகியிருக்கலாம். மேலும் இலங்கையில் சைவ கோவில்களை கட்டுவதற்காக இந்தியாவிலிருந்து வந்த அரசர்கள் தம்மோடு தேவதாசிகளையும் கொண்டு வந்திருக்கலாம். இதன் மூலம் கோயில் சடங்குகளும், வழிபாட்டின் தேவைகளையும் பூர்த்தி செய்திருக்கலாம். இது சம்பந்தமாக எந்தவிதமான சாசன சான்றுகளோ இலக்கிய குறிப்புகளோ இல்லை. எனினும் இலங்கையின் தேவதாசிகள் முறை கோயிலையும் கோயில் சுற்றாடலைச் சுற்றியுமே இடம் பெற்றது.

இப்னுபாதுதா (1344 கி.பி) என்னும் மொறொக்கோ நாட்டுப் பிரயாணியின் கூற்றுப்படி. தேவிநுவரையில் உள்ள (தெந்தர) விஷ்ணு கோவிலில் நடந்த ஒரு வைபவத்தின் போது, ஐந்நூறு பெண்கள் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டதாக சொல்லப்படுகிறது. (சிவசாமி 1988 ; 52) கந்தளாயில் உள்ள விஜயராஜேஸ்வரன்மாத் சிவன் கோவிலில் ஏழு தேவதாசிகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது (சிவசாமி 1988 ; 51) 14ல் இருந்து 15ம் நூற்றாண்டு கால இடைப்பகுதியில் சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தேசியக் கவிதைகளில் பராக்கிரமபாகு அரசனின் மாளிகையில் ஆடிய நாட்டியப் பெண்கள் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் ஓரக் கண்களால் பார்த்தனர் எனவும் வர்ணிக்கப்படுகிறது. இதில் நாம் அவதானிக்க வேண்டியது என்னவெனில் தென்னிந்தியாவில் எவ்வாறு கோயில் மரபுக்கமைய சடங்குகளில் பங்குபற்றி அரசர்களை மகிழ்வித்தார்களோ அவ்வாறே இலங்கையிலும் செய்தனர். பிறரைக் கவரும் வண்ணம் தமிழ்ப் பெண்கள் தமிழ் மேளங்கள் கொட்டியும். சங்குகள் ஊதியும், மணிகள் ஒலித்தும் புகழ் இசைபாடியும் வந்தனர் என செலலிஹினி சந்தேசய கூறுகிறது. செலலிஹினி சந்தேசய மேலும் களனியிலுள்ள வீபீஷஸா தேவாலயத்திலுள்ள பெண்கள் பற்றியும், அவர்கள் ஆடும் போது அவர்கள் கைகளில் அசைவிற்கேற்ப கண்கள் போய்வருவது பற்றியும் குறிப்பிடுகிறது. இப்பிரஸ்தாபங்கள் ஆடற்கலையின் சில அம்சங்கள் பற்றியும் அதன் கலை நுட்பம் பற்றியும் அதற்கு எத்தகைய பயிற்சி தேவைப்பட்டிருக்கும் என்பது பற்றியும் சுட்டுவனவாய் உள்ளன. சோழத் தலைநகராய் இருந்த பொலநறுவையில் உள்ள வானவன்மாதவி சிவன் கோவிலில் உள்ள நந்தா விளக்கை அக்கோயிலில் தங்கியிருந்த தேவதாசிகளே ஏற்றினர் என்பதை சாசனச் சான்றுகள் காட்டுகின்றன (சிவசாமி 1988).

சோழர் காலத்தில் தேவதாசிகள் இருந்தமை பற்றிய குறிப்புகளில் இலங்கையில் சோழர் காலத்து நுண்கலைகள் இங்கு அறிமுகப்படுத் தப்பட்டது தொடர்பான இன்னும் பல வரலாற்றுத் தகவல்களைத் தருவதாக உள்ளன. வேற்று மதத்தை தழுவி வந்த ஒரு கலைவடிவத்துக்கு இலங்கையில் உள்ள சிங்கள அரசர்களால் கௌரவிக்கப்பட்டது. இது இலங்கைக் கலை வடிவங்களில் இந்து சமயம் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியமையை வெளிக்காட்டுகிறது.

பெண் வெறுப்பை காட்டுவது தொடர்பான இலக்கியங்கள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இவ்வாறாக இலக்கியங்களை தமிழ் பௌத்த புலவர்கள் பலர் படைத்திருந்தனர். எனினும் இவை. சிங்கள பௌத்த மத புலவர்களிடையே அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. தேவதாசிகள் பற்றிய குறிப்புகள் சிங்கள இலக்கியங்களில் இருந்ததாயினும் அவை இவர்களின் கலைத்திறமை பற்றியவையாகவே இருந்தன. தேவதாசிகள் சந்தேசய கவிஞர்களின் வெறுப்புக்குள்ளாகவில்லை.

தேவதாசிகள் கோயிலிலும், அரண்மனையிலும் காணப்பட்டார்கள் என்றும், அவர்களது நடனத்தின் வடிவம், நுட்பம் அவர்கள் உபயோகித்த கருவிகள் போன்றவை பற்றியும் சொல்லப்படுபவற்றைத்தவிர, தேவதாசி அமைப்புப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை. அவர்களை யார் பராமரித்தார்கள் அவர்களது வாழ்க்கை முறை. அவர்கள் சமூக அந்தஸ்து போன்ற விடயங்களுக்கு எந்தச் சான்றும் இருப்பதாய் தெரியவில்லை.

தேவதாசிகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமை தொடர்பான விடயங்களை நாம் மேலே அவதானித்தோம். ஆய்வாளரின் இந்நூலில் "யாழ்ப்பாணத்தில் பெண்கள்" தொடர்பான விடயம் சில முக்கிய தலைப்புகளின் கீழ் இந்நூலில் ஆய்வுசெய்து தரப்பட்டுள்ளது. அந்தவகையில் தேவதாசிகள் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு செயற்பட்டு வந்தனர் என்பதையும் அங்கு இவர்களது நிலை எவ்வாறு இருந்தது என்பதையும் இனி அவதானிப்போம்.

யாழ்ப்பாணத்தில் தேவதாசிகள் அரசர்களால் பராமரிக்கப்பட்டார்கள் என்ற ஒரு கருத்தை தவிர சிவசாமி என்பவர் முன்வைத்தாரே ஒழிய இதற்கான சான்றுகள், ஆதாரங்கள் எதனையும் அவர் தரவில்லை.

வையாபாடல், கைலாயமாலை போன்ற யாழ்ப்பாண இலக்கியங்கள், நடனம் பற்றியும் நடனமாடிய பெண்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இது முக்கியத்துவம் வாய்ந்த தகவலாகும். இதைவிட முக்கியமானவை என்னவெனில் இவை பற்றிக் குறிப்பிடும் சொற்பதங்களாகும். வையாபாடல் நடனமாடும் பெண்களை "நச்சுவிழி நாட்டியம் செய்வோர்" எனக் குறிப்பிடுகின்றது. நஞ்சுடைய கண்களோடு நாட்டியம் செய்வோர் என்று நடனமாடுவோரைக் குறிப்பிடும் போது, நடனமாடுபவர் பாம்புக்கு ஒப்பிடப்படுகின்றனர். "கரவு மனத்து கணிகையர்" என்றும் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய குறிப்புகள் தேவதாசிகளின் சீரழிந்து போன சமூக அந்தஸ்தைக் குறிப்பனவாய் உள்ளன. இத்தகைய சீரழிவுகள் அரசர்களால் இவர்கள் பராமரிக்கப்பட்ட காலத்திலேயே ஒத்துநிகழ்ந்ததா அல்லது வையாபாடல், கைலாயமாலை போன்றவை எழுதப்பட்ட காலத்தில் ஏற்பட்டதா என்பது பற்றித் தெரியவில்லை.

வண்ணார்பண்ணை, இணுவில், நல்லூர், மாவிட்டபுரம், அளவெட்டி போன்ற பிரதேசங்களை அண்டியுள்ள கோயில்களில் தேவதாசிகள் குடி[illegible]ததுபோக, கோயில் திருவிழாக்களின் போது இந்தியாவிலிருந்து விசேட தேவதாசிக் குழுக்கள் கோயில் முதலாளிமாராலும், வியாபாரிகளாலும் கொண்டுவரப்பட்டனர். அங்கதச்சுவை நிறைந்த கனகிபுராணம் என்னும் நூலை அக்காலத்தில் நாட்டியம் பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்த சுப்பையா என்பவர் வண்ணார் பண்ணை வைதீஸ்வரன் கோயிலில் இருந்த கனகி என்னும் தேவதாசியை மையமாகக் கொண்டு ப்ாடியுள்ளது. இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பின்னணியில் 10.10.1877 இலங்கை நேசன் என்னும் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்த தேவதாசிகள் அமைப்பு பற்றி எமக்கு எடுத்துக்காட்டு, ஒரு சுவையான சிறு வரலாற்றுச் சான்றாகும். ஆசிரியருக்கு எழுதும் கடித வடிவில் , ஒரு வாசகன், சஞ்சலசங்கதி என்ற தலைப்பில் எழுதியுள்ள விஷயம், ஒரு வேதனை தரும் சிறு செய்தியாயினும் முக்கியமான தகவலைத் தருகிறது. அது பற்றிய செய்தியை நாம் அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்.

சுதர்ஷினி

# புலிகளின் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையும்

## அரசின் மௌனமும், மோதல் தவிர்ப்பும்






இலங்கையில் தொடரும் போரை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை உருவாக்க கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு சுமுகமானதோர் தீர்வை எட்டிவிட வேண்டுமென சர்வதேச நாட்டுகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகையில் அந்த சமாதான முயற்சிகளை குழப்பும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டதோ என ஐயப்படும் வகையில் இராணுவ முஸ்தீபுகளும் படை நடவடிக்கைகளும் தீவிரமடைந்து வருகின்றன. வன்னிக்கு எரிக் சோல்ஹெய்ம் வருகை தந்து புலிகளின் தலைவருடன் பேச்சுக்கள் நடத்தி அந்தப் பேச்சுக்களின் விளைவாக இலங்கை அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாராயிருப்பதாக பிரபாகரன் அறிவித்து இரு வாரங்கள் கடந்தும் அரச தரப்பிலிருந்து பேச்சுக்களுக்கு சாதகமான பதில் கிடைக்காமல் சாவகச்சேரி பகுதியில் பாரிய படை நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டதன் மூலம் இலங்கை அரசின் போக்கில் சர்வதேசத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கை அரசின் அனுசரணையுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு வன்னிக்கு வந்து எரிக்சோல்ஹெய்ம் பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்திச் சென்றதும் சாவகச்சேரி பகுதியில் கினிகிர - 4 படை நடவடிக்கையை மேற்கொண்ட அரசு சர்வதேசம் முழுவதும் இந்தப் பேச்சுக்களுக்கு பிரபாகரன் என்னென்ன நிபந்தனைகளையெல்லாம் விதிக்கப்போகிறாரோ என எதிர்பார்த்திருந்த வேளையில், அரசுடன் பேச நிபந்தனைகள் எதனையும் விதிக்கப்போவதில்லை எனக் கூறியதன் மூலம் இலங்கையில் சமாதானத்திற்கு சாத்தியமான வாய்ப்புகள் உருவாகிவிட்டதாக சர்வதேச சமூகம் பாராட்டுக்கள் தெரிவித்திருந்தது. எனினும் பிரபாகரனின் பேச்சுக்களுக்கான சாதகமான பதிலை



அரசிடமிருந்து அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கையில் சாவகச்சேரியில் கினிகிர-5 படை நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் அரசுதனது இறுக்கமான நிலைப்பாட்டை உணர்த்த முற்படுவதுடன் பேச்சுக்களுக்கு முன்னர் அல்லது பேச்சுக்களின் போது யுத்த நிறுத்தமென்பது சாத்தியமற்றதொன்றென்பதை சூசகமாகத் தெரிவிக்கவும் அரசுமுற்படுகிறதோ என்ற எண்ணம் தோன்றியுள்ளது.

இதைவிட பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் புலிகள் எப்படியாவது மிக விரைவில் குடாநாட்டை மீளக் கைப்பற்றிவிடுவர் என்பதைஉறுதிபடக் கூறியிருந்ததற்கு பதிலளிக்கும் விதத்திலும் அரசு இந்தத் தாக்குதலுக்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கலாமோ என்ற ஐயப்பாட்டையும் தோற்றுவித்துள்ளது. நிபந்தனையற்ற விதத்தில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் பேசினால் பேச்சுக்கள் சுமுகமாயிருக்கு மென்பதை பிரபாகரன் வலியுறுத்தியிருந்தார். எனினும் நிபந்தனையற்ற பேச்சுக்கள், சுமுக நிலையை தோற்றுவிக்கும் மோதல் தவிர்ப்பை கருத்தில் கொள்ளாது இவற்றுக்கு நேர்மாறாக புதிய படைநடவடிக்கையொன்றை படையினர் சாவகச்சேரியில் மேற்கொண்டிருந்தனர். எனினும் அந்தப்படை நடவடிக்கை படையினருக்கு ஏற்படுத்திய சாதக பாதக நிலையை விடுத்து இவ்வாறான நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுக்களுக்கு எவ்வாறானதோர் சுமுக நிலையை தோற்றுவிக்குமென்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது இதைவிட பதிலுக்கு புலிகளும் பாரியதோர் தாக்குதலை நடாத்தும் பட்சத்தில் நிலைமை மேலும் மோசமாகலாமென்ற அச்சமும் அனைவரிடத்திலும் தோன்றியுள்ளது.

இதே நேரம் பேச்சுக்களின் போது பேரம்பேச்சுக்களை அதிகரிக்கும் விதத்தில் சில முக்கிய வெற்றிகளைப் பெற்று தங்கள் பலத்தை அதிகரித்துக் கொள்ளவும் அரசு முயலக்கூடும்.

மாவீரர் தின உரையில், புலிகள் எப்படியும் யாழ்.குடாநாட்டை விரைவில் கைப்பற்றி விடுவர் எனக் கூறியதை கருத்தில் கொண்டு, பேச்சுக்களுக்கு முன்னர் குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து புலிகளை அப்புறப்படுத்தி பிரபாகரனின் கூற்றை பலவீனப்படுத்திவிடலாமென படையினர் கருதுவதாகவும் தென்படுகிறது. அதே நேரம் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப்பேச்சுக்களுக்கு அமெரிக்கா பிரிட்டன் உட்பட பல்வேறு நாடுகளும் ஆதரவு வழங்கி வருகையில் இந்திய அரசு தற்போது எடுத்துள்ள நிலைப்பாடானது தங்களுக்கு சாதகமானதோர் சூழ்நிலையை ஏற்படுத்துவதாக இலங்கை அரசு கருதுகிறதோ என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. இலங்கைப்படையினருக்கு பாரிய கடலோர ரோந்துக்கப்பலை விற்பனை செய்ததும் இலங்கை கடற்படையினருக்கு பல்வேறு பயிற்சிகளையும் வழங்கி வருவதும் இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைவிட நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ள இந்த நேரத்தில், ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை நாடுகடத்த வேண்டுமென்ற விடயத்தில் இந்தியா உறுதியாகவிருப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்த உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளை சந்திக்க சி.பி.ஐ அதிகாரிகள் அங்கு சென்றுள்ளதாகவும் கூறியிருந்தார். இந்தியாவின் இந்த திடீர் நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில், 1983ம் ஆண்டு முதல் சென்னையில் வாழ்ந்து வந்த ஈழப்போராட்ட ஆதரவாளரான ஈழவேந்தன் என்பவரை இலங்கைக்கு திடீரென நாடுகடத்தி உள்துறை அமைச்சு தனது நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டை புலிகள் கைப்பற்றுவதென்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என இந்திய முன்னாள் படை அதிகாரிகள் பலரும் சுட்டிக் காட்டிய நிலையில் இந்தியாவின் இந்த நிலைப்பாடு பலருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலேயே தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தி வரும் இலங்கையின் கடும் போக்காளர்களுக்கு இந்தியாவின் புதிய நிலைப்பாடு தெம்பையும் அளித்துள்ளது. ஏற்கனவே இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பு குறித்தும் நோர்வேயின் ஒவ்வொரு நடவடிக்கை குறித்தும் இந்தியாவுக்கு தெரிவிக்கப்பட்டு வந்த நிலையிலும் அமெரிக்க, பிரிடிஷ் அமைச்சர்கள் கூட இவ்விடயம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகையில் இந்தியாவின் புதிய நிலைப்பாடு பலதரப்புகளிடையேயும் பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் புலிகளின் நிபந்தனையற்ற பேச்சுக்கள் என்ற சம்மதத்திற்கு பதிலளிக்காது இலங்கை அரசு மௌனம் சாதித்து வரும் நிலையில் பேச்சுக்களுக்காக மோதல் தவிர்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டுகிறது. எப்படியாவது பேச்சுக்களை குழப்ப வேண்டுமென செயற்படும் சக்திகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் யுத்தத்துடன் பேசுவது பேச்சுக்களின் போக்கை பாதித்து விடும் என்பதை சர்வதேச சமூகம் நன்குணர்ந்துள்ளது. இதனால் பேச்சுக்களுக்கு முன்னர் அல்லது பேச்சுக்களின் போதாவது மோதலை தளர்த்துவது தொடர்பான காலஎல்லையை தீர்மானிக்கும் முயற்சிகளில் ராஜதந்திரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்குச் சார்பாக இரு தரப்பும் தாக்குதல்களை படிப்படியாக குறைத்து அல்லது நிறுத்தி பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது அல்லது பேச்சுக்கள் நடைபெறும் போது மோதலை தளர்த்தி யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி விடும் தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகையில் படைநடவடிக்கைகள் மற்றும் மோதல்கள் நிலைமையை மேலும் மோசமாக்கி விடுமென்ற அச்சமும் ராஜதந்திரிகள் மத்தியில் நிலவுகிறது. எப்படியாவது மோதல் தவிர்ப்பை ஏற்படுத்தி அதனை யுத்த நிறுத்தமாக மாற்றி சர்வதேச கண்காணிப்பாளர்கள் மூலம் அதனை மீறுவோரை கண்காணிக்கலாமென்று நம்புகிறது.

இதற்கேற்ப இருதரப்பையும் ஒரு வழிக்கு கொண்டு வர முடியுமெனவும் கருதும் சர்வதேச சமூகம் இதற்காக மோதலில் ஈடுபடும் இருதரப்பிற்குமிடையில் புரிந்துணர்வை சர்வதேச அழுத்தமொன்றின் மூலம் ஏற்படுத்தலாமெனவும் அவர்கள் கருதுகின்றனர். எனினும் இதற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதோ தற்போது சர்வதேச சமூகம் முன் உள்ள பாரிய பிரச்சினையாகவுள்ளது. வெறுமனே பாரிய மோதல்களில் ஈடுபட்டு பேரழிவுகளைச் சந்தித்து பழிவாங்கும் உணர்வையே தக்கவைத்திருக்கும் இரு தரப்பையும் பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் ஒரு நிலைக்கு கொண்டு வருவதில் உள்ள சிக்கல்களையும் இந்த சர்வதேச சமூகம் நன்கறியும். எனினும் மிகவும் அவசியமானதோர் செயற்பாட்டுக்காக அவர்களால் இரு தரப்பையும் ஒரு வழிக்கு கொண்டுவருவது சாத்தியமற்றதோர் விடயமல்ல என்பதும் அனைவருமறிந்த விடயமே. இதனால் சர்வதேசத்தின் அழுத்தம் இரு தரப்பையும் ஓரிடத்திற்கு கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை என நம்பலாம்.

# யாழ். மாவட்ட வைத்திய சாலைகளின் பரிதாப நிலைகள்







அண்மையில் யாழ். குடா நாட்டில் பருவ மழை ஆரம்பித்த பின்னர் தொற்று நோய்களின் தாக்கம் மிக வேகமாக பரவி வருகின்றது. மலேரியா நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் அதிவேகமாகப் பரவி வருவதனாலும், தென் பகுதியை ஆட்டிப்படைத்த டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகளுடன் யாழ். வைத்தியசாலையில் சிறுவன் ஒருவன் அனுமதிக்கப்பட்டதை அடுத்தும் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை ஒன்று உருவாகியிருக்கிறது.

சமீப நாட்களில் மலேரியா நெருப்புக்காய்ச்சல் மற்றும் சாதாரண காய்ச்சல் நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைகளைப் பெருமளவான நோயாளர்கள் நாடியுள்ளனர். நூற்றுக் கணக்கிலான காய்ச்சல் நோயாளிகள் வைத்திய சாலைகளை நாடிவருகின்ற போதிலும் அவர்களுக்குரிய சிகிச்சைகளை உரிய வசதிகளுடன் வழங்க முடியாதிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் பல நூறு நோயாளர்களில் கணிசமானோர் ஆஸ்பத்திரி விடுதியில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டியிருப்பதாகவும் போதிய படுக்கை வசதிகளின்மை காரணமாக மோசமான நிலையில் இருப்போரை மட்டுமே விடுதிகளில் அனுமதிப்பதாகத் தெரிய வருகின்றது. படுக்கை வசதிகளின் மையால் குடா நாட்டிலுள்ள பல்வேறு வைத்திய சாலைகளிலும் நிலத்தில் பாய் விரித்து நோயாளர்கள் தங்கியிருக்கின்றனர்.

நோயாளர்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதால் வைத்திய சாலையிலுள்ள ஆளனியினர் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். போதிய வைத்தியர்கள் மற்றும் ஆளணியாளர் குடாநாட்டு வைத்திய சாலைகளில் இல்லாமையால் இந்நிலை தோன்றியிருக்கின்றது.

நோயாளர்களுக்குப் பூரண சிகிச்சைகளை வழங்க முடியாதிருக்கும் யாழ். குடா நாட்டு வைத்திய சாலைகளால் காய்ச்சல் நோய் பெருகுவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருக்கின்றது. நோய்களுக்குச் சிகிச்சைகளை மட்டுமே அவர்களால் வழங்கமுடிகின்றது. இந்த வகையிலான நோய்கள் பரவுவதற்குப் பிரதான காரணமாக இருப்பது நுளம்பு என்பது அனைவரும் அறிந்த விடயமே.

வழமையை விட இம்முறை நுளம்புகள் பல்கிப் பெருகிப் போயுள்ளன. பொதுமக்கள் இடம் பெயர்வுகள், துப்பரவு செய்யப்படாத காணிகள், கைவிடப்பட்டுள்ள வீடுகள் என்று நுளம்புகள் பெருகுவதற்குரிய வாய்ப்புகள் குடா நாட்டில் மிக அதிகமாகவே உள்ளன. இருந்த போதிலும் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது சுகாதாரத் திணைக்களத்தின் கடமையாகும்.

சுகாதாரத் திணைகக்கள அதிகாரிகள் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தம்மால் இயன்றளவு முயற்சி செய்கின்ற போதிலும் அர சாங்கத்தரப்பில் இருந்து இதற்குப் பூரணமான ஆதரவு இல்லை. நுளம்புகள், உற்பத்தியாகும் இடங்களைத் தெரிவு செய்து அங்கு "மலத்தியோன்" என்ற நாசினியைத் தெளிக்கும் வழமை உலகமெலாம் பின்பற்றப்பட்டு வருகின்றது.

தமிழர்கள் மட்டும் வாழ்கிறார்கள் என்ற ஒரே காரணத்தினால் மலத்தியோன் மருந்து வட பகுதிக்கு, அது அரச பட்டுப்பாட்டில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, போதியளவில் அனுப்பப்படுவதில்லை. தமது நுளம்பு எதிர்ப்பு நடவடிக்கைக்குத் தேவைப்படும் மலத்தியோன் மருந்தில் 30 அல்லது 40 சதவீதமே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் படுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் போது தனியார் மருந்தகங் களிலேயே மருந்துகளை வாங்கவேண்டிய நிலை. ஆனால் அங்கு பலமடங்கு உயர்ந்த விலை. சில வைத்தியசாலை நலன் புரிச் சங்கங்கள் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் போது தனியாரிடம் மருந்துகளை வாங்கி நோயாளருக்கு வழங்கியும் வருகின்றார்.

இப்போது தென்மராட்சி மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்துள்ள நிலையில் பளை சாவகச்சேரி, மாவட்ட மருத்துவ மனைகளும் வரணி, மட்டுவில் போன்ற மருந்தகங்களும் செயலிழந்து போயுள்ளன. இதனால் வடமராட்சி, வலிகாமம் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மக்கள் படையெடுக் கிறார்கள். மந்திகை மருத்துவமனை போன்ற சிலவற்றுக்கு நோயாளர்கள் வருவதை இரு மடங்காக அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் நோயாளர்கள் அதிகரித்த போதும் மருத்துவமனைக்கு வழங்கப்படும் மருந்துகள் அதிகரிக்கப்படவில்லை. தென்மராட்சி வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட மருந்துகளை மாற்றீடு செய்து கொள்ள பாதுகாப்பு அனுமதி கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையான மருந்துத் தட்டுப்பாடுகள் பலமாகவே இருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் தான் அண்மையில் யாழ். வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள் கூட்டாக கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியிருக்கின்றனர். பல துறையை சேர்ந்த வைத்திய நிபுணர்களுக்கு இருக்கும் பற்றாக்குறை யை நீக்கியும், வைத்தியசாலைக்குப் போதிய மருந்தப் பொருட்களை எடுத்துவருவதற்கு அனுமதிக்கும் படியும் இதற்குரிய பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையை நீக்கக் கோரியும் இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறான தடைகள், தாமதங்கள் மூலம் செயலிழக்கும் நிலைமை அடைந்துள்ள வைத்தியசாலையை சீராக இயங்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என்ற அந்த மகஜர் வலியுறுத்துகின்றது. பல்வேறு துறைகளையும் சேர்ந்த 17 மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதாகவும் உடனடியாக இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமாறு மகஜரில் கோரப்பட்டிருந்தது. இதையடுத்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நான், நீ என்று முந்திக் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத் துடன் இது பற்றிப் பேசியிருக்கின்றனர்.

இதற்கு முன்னதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்குட்பட்ட ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர் மற்றும் ஆளணிப்பற்றாக்குறைகள் குறித்து பணிப்பாளர் மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் 81 வைத்தியாக்ள் கடமையாற்ற வேண்டிய யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் 9 பேரே உள்ளதாகவும் 72 வெளிக்கள உத்தியோகத்தர்கள் சில குடும்ப நல சேவையாளர்கள் மற்றும் 4 சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக குடா நாட்டில் மருத்துவ விடுதிச் சீர்கேடுகளை அரசாங்கம் திரும்பிக் கூடப்பார்க்கவில்லை. இந்த நிலையில் கடந்த மாதம் யாழ். மாவட்டத்தில் நிலவும் மருத்துவத் தட்டுப்பாடுகள் குறித்து எம்.பி. ஒருவர் குறிப் பிட்டு உரையாற்றிய போது, அரசுக்கு விசுவாசமாக அரசில் இணைந்து செயற்படும் எம்.பி. ஒருவர் அங்கு எந்த மருந்துத் தட்டுப்பாடும் கிடையாது என்று முழங்கி தனது இராஜ விசுவாசத்தை வெளிப்படுத் தியிருக்கிறார்.

தமது அரச விசுவாசத்தை வெளிக்காட்ட மக்களின் மருத்துவ வசதிச் சீர்கேடுகளைப் பாராளுமன்றத்தில் பணயமாக வைக்கும் அளவுக்குத் தமிழ்க் கட்சிகளின் தரம் தாழ்ந்து போய் விட்டமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இதுவும் கூட அடக்குமுறை , பேரினவாதத்துக்குத் துணை போகும் செயலேயாகும்.

இந்த நிலையில் கடந்த 1ம், 2ம் திகதிகளில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்வை ஒட்டி புலிகளும் அரச படையினரும் யுத்த நிறுத்தம் செய்ய இணங்கியிருந்தனர். ஆனால் குடா நாட்டில் அன்று வழமைக்கு மாறாக சோதனைக் கெடுபிடிகள் காணப்பட்டன. முன்னர் பேருந்துகளில் செல்லும் பயணிகளை சோதனையிடாத முகாம்களிலும் கூட தரையில் இறங்கி நடக்கப் பணிக்கப்பட்டனர். போலியோ சொட்டு மருந்து கொடுக்க குழந்தைகளைக் கொண்டு சென்ற தாய்மார்கள் சிலரும் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாகியதை அவதானித்தபலர் யுத்த நிறுத்தத்தின் "அவல நிலையை" எண்ணி வேதனைப்பட்டதையும் காணமுடிந்தது.

இதனால் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கையில் அதை பயன்படுத்த முடியாதிருப்பதாகவும், அதிகமாக நோய்த் தாக்கம் காணப்படும் பகுதிகளில் மட்டுமே மலத்தியோன் மருந்து தெளிக்கப்படுவதாக்வும் அந்த சுகாதாரத் திணைக்கள அதிகாரி தெரிவித்திருந்தார். மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களை முழுமையாகக் கட்டுப்படுத்தக் கூடிய வசதிகள் இருந்தும் அர சாங்கம் தமிழ் மக்களின் பிரதேசங்கள் மீது விதித்துள்ள மருந்துக் கட்டுப்பாடுகள் காரண மாக இப்பணியைச் சீராகச் செய்ய முடியாதிருக் கின்றது.

அரசாங்கம் நோய்த் தடுப்பு மருந்துகளைப் போதியளவிலும் உரிய காலப்பகுதியிலும் அனுப்பி வைக்காததால் தான் இன்று யாழ்ப்பாணத்தில் நோய்த் தாக்கம் அதிகரித்திருக்கின்றது. யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் டெங்கு காய்ச்சலால் பாதிப்படைந்திருக்கலாம் என வைத்திய நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். ஆனால் அதை உறுதி செய்வதற்குரிய மருத்துவப் பரிசோதனை வசதிகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் கிடையாது.

இதனால் இரத்தப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அறிக்கை கிடைத்து சிகிச்சைகளை ஆரம்பிப்பதற்கிடையில் நோயாளியின் நிலை மோசமடையலாம். அதைவிட டெங்கு போன்ற ஆபத்தான நோய்களுக்குப் பாவிக்கப்படும் மருந்துப் பொருட்களோ சிகிச்சை வசதிகளோ யாழ்ப்பாணத்தில் இல்லை என்ற அதிர்ச்சியான தகவலையும் சுகாதார அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

தற்போது தென்னிலங்கையில் இருந்து நோய்க் காவிகள் குடாநாட்டிற்குள் பிரவேசிக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதால் டெங்கு நோய் இங்கு பெருகுவதற்குரிய வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரியவருகிறது. ஆனால் இதைத் தடுக்க முற்றாகக் கட்டுப்படுத்தக் கூடிய வசதிகள் அதுவும் சுகாதாரத் திணைக்களத்திடம் கிடையாது. மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து விழிப்புணர்வை மட்டுமே தம்மால் ஏற்படுத்த முடியும் என்று தமது கையறு நிலையை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பொறுத்தவரையில் அது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்று பெயரள வில் மட்டும் கூறப்படுகின்றதே தவிர அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குரிய எந்த அடிப்படை வசதியும் யாழ். மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். வைத்தியசாலை களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை அனுப்புவதில் திட்டமிட்ட தடைகளும் தாமதங்களும் ஏற்படுத்தப் படுகின்றன.

பொதுவாக ஒவ்வோர் ஆண்டுக்கும் தேவையான மருந்தப் பொருட்களின் பட்டியலை சுகாதாரத் திணைக்களம் தயாரித்து அனுப்புகின்ற போதிலும் அரசு அதில் அரைப்பகுதியையோ அல்லது அதற்கும் குறை வானளவு மருந்துகளையோ தான் கடந்த பல வருடங்களாக அனுப்பி வருகின்றது. நான்கு காலாண்டுகளாகப் பிரித்து அனுப்பப்படும் போது பெரும்பாலும் இறுதிக் காலாண்டுக்குரிய மருந்துகள் முழுமையாகவே வெட்டப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நான்காவது காலாண்டுக்குரிய இறுதி மாதத்தில் தான் 3வது காலாண்டின் ஒதுக்கீட்டு மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான உயிர்காப்பு மருந்துகள் இதய, நீரிழிவு, இரத்த அழுத்த நோய்களுக்குரிய மருந்துகள் சத்திர சிகிச்சைக்குரிய மருந்துகள், உபகரணங்கள் போன்ற அத்தியாவசிய மருந்துகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பல சந்தர்ப்பங்களில் இத்தகைய அவசிய உயிர்காப்பு மருந்துகளின் கையிருப்பு முற்றாகத் தீர்ந்து போய் சிகிச்சைகள் சில நிறுத்தவேண்டிய அவல நிலை பல முறை ஏற்பட்டிருக்கின்றது. யாழ். போதனா வைத்தியசாலையின் நிலையை விட ஏனைய சிறிய அரச. வைத்தியசாலைகளின் நிலைமை தான் பரிதாபம்.

அரவின்

# நாம் ஆயுதமோகம் கொண்டவர்களுமல்ல, யுத்த வெறியர்களுமல்ல...

விடுதலைப் புலிகளின் செயல்பாடு அவர்களின் தொடர் போராட்டத்தாலும் இறுக்கமான கட்டமைப்பாலும் மற்றவர்களை வியக்கவைப்பது உண்மை தான். ஆனால் ஒரு இனத்தின் விடுதலைக்கு உதவக் கூடியது தனியே இறுக்கமான கட்டமைப்பும் தொடர் போராட்டங்களும் மட்டுமல்ல.

எந்த மக்களுக்காக போராடுகின்றோமோ அந்த மக்களின் பங்களிப்பு; நேச சக்திகளின் உதவி; சர்வதேச சமூகத்தின் ஆதரவு என நீண்டு கொண்டே போகும்.

ஈழவிடுதலைப் போராட்டம் முனைப்படைந்த 80களின் ஆரம்பத்தில் போராட்டத்திற்கான மக்கள் பங்களிப்பென்பது முழுமையாக இருந்ததை மறுக்க முடியாது. ஆனால் 80களின் பிற்பகுதிகளில் அந்தப்பங்களிப்பானது கேள்விக் குறியானது. இயக்கமோதல்கள், சகோதர படுகொலைகள் என எதிரியாலேயே செய்ய முடியாத செயல்களை செய்து சாதனை படைத்த புலிகளின் செயல் அவர்களின் இறுக்கமான கட்டுப்பாட்டு போக்கால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று என்பது தான் உண்மை நிலை.

எந்த எதிரிக்கெதிராக போராடப் புறப்பட்டார்களோ அந்த எதிரியுடனேயே அணிசேரவேண்டிய நிலைக்கு மற்றவர்கள் செல்ல அத்திவாரம் இட்ட வரலாற்று தவறுக்கு வித்திட்டவர்கள் விடுதலைப் புலிகளே.

அடுத்த நிகழ்வு அதைவிட மோசமானது. நேச சக்திகளின் உதவியுடன் எம் தேசத்தை மீட்க அல்லது எம்மக்களின் இறையாண்மையை மீட்டு அல்லது எம்மக்கள் எம் மண்ணில் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு உத்தரவாதம் தரக்கூடிய நேசசக்தியாக காணப்பட்ட இந்தியாவின் மீது சேறு பூசி நண்பனை எதிரியாக்கி எம் எதிரிக்கு அவர்களை நண்பனாக்கும் செயல்பாட்டை செய்தது மாபெரும்

**நட்டாமுட்டியன்**

வரலாற்று தவறாகியது.

ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை உத்தரவாதத்துடன் பெற்றுத் தர வந்த இந்தியாவை எதிர்த்து போராளிகளும் ஆயுதங்களும் தான் போராட்டத்தின் வெற்றியை தீர்மானிக்கும் என்ற தீர்க்கதரிசனமற்ற பார்வையால் கூடிக்கலக்க வேண்டியவர்களையே கொன்று குவித்த செயல் சொந்த மண்ணில் அதுவரை அகதிவாழ்வை அறிந்திராத வடக்கு- கிழக்கு மக்களுக்கு அந்த அனுபவத்தை பெற்றுக் கொடுத்தது.

எனது யுத்தத்தை இந்தியா நடத்துகிறது என ஏளனமாக ஜே.ஆர். கூறும் அளவிற்கு நிகழ்ச்சி நிரல் மாறியது. இந்திய மாநிலங்களுக்கு ஒத்ததாகவேனும் பெற்றிருக்க வேண்டிய மாகாண சபை இந்தியாவுடன் குத்தி முறிந்து கொண்டிருந்தவேளை குறைப்பிரசவமாக எதிரிக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. தமக்கு விரும்பியளவு மாற்றங்களை செய்து தமிழ் மக்களை ஏமாற்றும் செயலை செய்யும் துணிவை ஜே.ஆர்.க்கு இந்த நிகழ்வே வழங்கியது.


தமிழர்களின் அபிலாசைகள் பூரணப்படுத்தப்படும் வரை அவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க வந்த அமைதிப்படை இங்கு அமைதி குலைக்கும் படையாக்கப்பட்டு எதிரிக்கு எதிரி நண்பனாக புலிகளும் இலங்கை அரசும் இணைந்து இந்தியப் படைகளை வெளியேற்றி தம், இலக்குகளை அடைய முற்பட்டனர்.

அன்று தொடங்கிய அழிவின் உச்சக்கட்டம் தட்டிக் கேட்கக் கூட யாருமின்றி நாதியற்றவர்களாக்கப்பட்ட தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கோர யுத்தம் அகதி வாழ்வை நிரந்தரமாக்கியது.

தமக்கு கிடைத்த போர் வெற்றிகள் முழுப் போராட்டத்தின் வெற்றிகளாக மாற்றப்படும் என்ற போக்கைத் தவிர தம் போராட்டத்தின் ஆரம்ப நேசசக்தியாக கொண்ட இந்தியாவை பகைத்தமை ஏற்படுத்தக் கூடிய பாதக நிலையை பரிசீலிக்க அவர்கள் விரும்பவில்லை. உலகம் எங்கும் வாழும் புலம் பெயர்ந்த தமிழர் தந்த நிதியையும் சில நாடுகளின் போராட்டக்குழுக்களின் ஆதரவும், தங்கள் சர்வதேச வியாபார தொடர்புகளும் பெற்று விட்ட பெருமிதத்தில் தம் போராட்டத்தின் இறுதி வெற்றிக்கு இவை போதும் என்ற இறுமாப்பு ஆணையிறவு படைத்தள அழிப்பின் பெருவெற்றியால் உச்சி குளிர்ந்ததும் உண்மை தான்.

ஆனால் அடுத்து ஏற்பட்ட நிகழ்வுகள் தான் யதார்த்த நிலையை புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் உணர்த்திற்று. அரைப்பிறைவடிவில் யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்து கைப்பற்றிய போது முழு உலகமும் சந்திரிகாவின் பின் அணிதிரண்ட சம்பவம் சர்வதேச ஆதரவின் தேவையை உணர்த்திற்று. அந்த ஆதங்கம் மாவீரர் தின உரையில் தலைவரால் முக்கியத்துவமாக்கப்பட்டது. வெற்றியின் விளிம்பு வரை சென்றவர்களின் கண்களுக்கு சர்வதேச சமூகத்தின் விருப்பமும் விளங்கியது.

ஒரே விதமான நிகழ்ச்சித் திட்டம் இருவேறு விதமாக இங்கு அரங்







கேறியதை நாம் பார்த்தோம். ஒப்பரேசன் லிபரேசனில் இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முன்னேறிச் செல்கின்றனர். புலிகளிடமிருந்து யாழ்ப்பாணம் பறிபோய்விடும் நிலையில் இந்தியா வான்படையை உணவுப் பொட்டலம் போட அனுப்பி தன் மனிதாபிமான உதவியை வழங்குவது போல யாழ்ப்பாணம் இராணுவத்தின் கையில் விழாமல் காத்தது. அதுவரை ஜே.ஆர். அரசிற்கு பக்கபலமாக நின்ற அமெரிக்காவும் இஸ்ரேலும் மௌனம் சாதித்தன.

அதேபோலவே இம்முறை ஓயாத அலைகள் மூலம் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற அரைப்பிறை வடிவில் புலிகள் முன்னேறிச் செல்கின்றனர். இராணுவத்தின் பிடியில் இருந்து யாழ்ப்பாணம் பறிபோய் விடும் நிலையில் 30 ஆயிரம் இராணுவத்தினரை மனிதாபிமான அடிப்படையில் காக்க இந்திய கப்பல் படை தயாராகிறது. அமெரிக்க, சீன, இஸ்ரேல் அரசுகள் ஆயுதங்களுடன் ஓடிவருகின்றன. யாழ்ப்பாணப் புலி போராளிகளின் கையில் விழாமல் காக்கப்படுகிறது.

ஒரு தசாப்தத்துள் தலைகீழாக மாறிவிட்ட நிலையை அந்த யதார்த்த சூழலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழ விடுதலை போராட்டத்தில் சிங்கள பௌத்த பேரினவாதிகளை எதிர்த்து போராட்டத்தை தொடர்வதாக உரை நிகழ்த்திய பிரபாகரன் தான் உருவாக்கிய எதிரிகளுக்கு இன்னமும் நேசக்கரம் நீட்டவில்லை. பெருமாள் முதல் அரசில் பங்கேற்ற தமிழ் கட்சிவரை அவரது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளனர். இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் ஆதங்கத்துடனே நோக்க விளைகிறார்.

ஸ்ரீலங்கா அரசின் மீது அதன் தலைவி மீதுமான அவரது சந்தேகங்கள் நியாயமானதாக இருந்தாலும் அவர் மற்ற போராளிக் குழுக்களை அவர்களின் ஆதரவாளர்களை தன்மீது சந்தேகமற்றவர்களாக எண்ணத் தூண்டவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக யாழ். மண்ணை, அதன் உருத்துடைய மக்களைப் பற்றி பேசிய அவரால் அதே மண்ணில் தமிழ் மக்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் பற்றிய, அவர்களது மீள்வருகை பற்றிய எந்த செய்தியும் கோடிட்டுக் கூட காட்டப்படவில்லையே.

சிங்கள பௌத்த பேரினவாதத்தை நம்ப மறுக்கும் பிரபாகரன் தமிழ் இந்து பேரினவாத போக்கை முஸ்லிம் மக்களின் மீது திணிக்க முற்படுகின்றாரா? ஆக மொத்தத்தில் ஒன்றுமட்டும் மிக தெளிவாக தெரிகிறது. அன்று சுது மலையில் தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவிடம் எதிர்பார்ப்பதாக கூறிய பிரபாகரன் இன்று சர்வதேச சமூகத்திடம் எதிர்பார்ப்பதாக கூறுகிறார்.

இந்தியாவிடம் தம்மை தமிழர்களின் ஏக பிரதிநிதியாக ஏற்க வேண்டும் என்று கேட்டவர் இன்று சர்வதேச சமூகத்திடம் கேட்கிறார்.

சுமுகமாக சூழ்நிலை ஒன்றை உருவாக்க அரசின் மீது ஆளுமையை செலுத்த சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு எவ்வளவு தேவையோ அதைப் போன்றே புலிகளின் மீது செலுத்தப்படல் வேண்டும். சர்வதேச மனித விழுமியங்களை அரசு மட்டுமல்ல புலிகளும் மீறக்கூடாது. சகல பொருளாதார தடைகளையும் அரசு நீக்கும் அதேவேளை மக்கள் நலன் கருதி தரைவழிப்பாதை திறப்பிற்கும் புலிகள் உடன்பட வேண்டும். கட்டுப் பாடு, கட்டுப் பாடற்ற பகுதிகளில் அரசும் புலிகளும் தம்மால் நடைமுறைப்படுத்தப்படும் சகல பாஸ் முறைகளையும் ரத்துச் செய்ய வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தில் சிறைகளில் ,விசாரணை இன்றி வாழும் அப்பாவிகள் அனை வரும் விடுவிக்கப்படும் வேளை புலிகளும் தாங்கள் அடைத்துவைத் திருக்கும் மாற்றுக் கட்சி உறுப்பினர் களையும் விடுவிக்க வேண்டும்.

முழு உலகமுமே சந்திரிகா அரசின் பின் அணி திரண்டதாக ஆதங்கப்படும் பிரபாகரன் சர்வதேச சமூகத்தின் பார்வை எம்மீது அனுதாபத்தை ஏற்படுத்தக் கூடியதான செயல்பாட்டை செய்வதற்கு முன்வரவேண்டும்.

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர் தெளிவாக கூறியது போல் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களின் அபிலாசைகள் பூரணத்துவப் படுத்தப்படும் என்ற நிலைப்பாட்டைப் பற்றிய புலிகளின் செயல்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். இந்தியாவினால் தீர்வு திணிக்கப்பட்டதாக கூறி தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக மாறி நண்பனை எதிரியாக்கியது போல் தனி நாட்டு கோரிக்கைக்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவின் மையை புரிந்து கொண்டு கால அவகாசம் பெறுவதற்காக மட்டும் சமாதான சமிக்ஞைகளை தெரிவிக் காது சாத்தியமான அளவு சர்வதேச சமூகத்தின் உதவியுடன் ஒரு சமாதான சூழலை உருவாக்கி தமிழ் பேசும் மக்களிற்கு கிடைக்கக் கூடிய பூரணமான சுயாட்சியை பெற்றுக் கொள்ள கூடிய நடவடிக்கைகளில் இதய சுத்தியுடன் செயல் பட வேண்டும்.

"நாம் ஆயுதமோகம் கொண்டவர்களல்ல, யுத்த வெறியர்களுமல்ல" என கூறுவதால் மட்டும் நம்பிக்கை வந்து விடாது. புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்ற நிலைக்கு மாற்றீடானது என்ன என்பதை செயல்வடிவாக்க வேண்டும்.

# நோர்வேஜியர்களை வெளியேற்றுவோம்

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக நோர்வே அரசின் தலையீடு தொடர்பாக எதிர்ப்புக்களும், ஆர்ப்பாட்டங்களும் அரசியல் நடவடிக்கை பலவும் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வருகின்றது. சோசலிச முன்னோக்குடன் கூடிய மக்கள் விடுதலை முன்னணி இதனை கடுமையாக எதிர்ப்பதுடன் நோர்வே இந்தப் பிரச்சினையிலிருந்து விலகிக் கொள்ளும் வரை நோர்வே நாட்டுடன் எவ்விதமான தொடர்புகளையும் வைத்துக் கொள்வதில்லை என கூறியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற அங்கத்தவர் சிலருக்கு நோர்வே நாட்டில் சுற்றுலாவொன்றிற்காக விடுக்கப்பட்டிருந்த அழைப்பையும் நிராகரித்து நீண்ட கடிதமொன்றையும் எழுதியுள்ளனர். எமது நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளனர். அத்தோடு கடந்த பெப்ரவரி, ஏப்ரல் மாத கால கட்டங்களில் சிங்கள தேசிய வாதிகளினால் முன்வைக்கப்பட்டிருந்த அனைத்து வாதங்களையும் இக்கடிதத்தில் இணைத்திருந்தனர். நோர்வே நாட்டின் அரசியல் அமைப்பு எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்து கொண்டு தமது விமர்சனங்களை முன்வைப்பதற்கு பதிலாக நோர்வே நாடு இலங்கை விவகாரத்தில் தலையிடுவதை தவிர்த்துக் கொள்ளும் வரை தமது கட்சி நோர்வே நாட்டுடன் எவ்வித தொடர்புகளையும் வைத்துக் கொள்ளாது என தெரிவித்துள்ளது. இந்த அரசியல் நிலைப்பாட்டிற்கு அமைய இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தலையிடும் எந்தவொரு நாட்டுடனும் மக்கள் விடுதலை முன்னணி தொடர்புகளை வைத்துக் கொள்ளாது அந்த நாடுகளுக்கு இக்கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் விஜயம் செய்ய மாட்டார்கள் என எம்மால் கருத வேண்டியுள்ளது. முக்கியமாக இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் ஆரம்பத்தில் இருந்தே பூரண ஒத்துழைப்பை நல்கிய அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் கூட இவர்கள் செல்ல விரும்ப மாட்டார்கள்.

**சுனந்த தேசப்ரிய**

அனுபவங்களையும் நோர்வே அரசின் முயற்சிகளுக்கு உதவும் முகமாகவே பிரித்தானியா வட அயர்லாந்து தீர்வின் படிப்பினைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முன்வந்தது.

சிஹல உறுமய கட்சி இந்த விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணியை கடந்து சென்றுள்ளது. நோர்வேக்காரர்கள் உடனே வெளியேற வேண்டும் என இவர்கள் கூறுவதோடு நோர்வேயின் சமாதான தூதுவர் பிரபாகரனின் பிரதிநிதியெனவும் இலங்கையைப் பிரிப்பதே இவர்களின் இலக்கு எனவும் இவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் நோர்வேயுடனான அத்தனை இராஜதந்திர நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளதோடு சிஹல உறுமயவின் ஒரேயொரு பாராளுமன்ற அங்கத்தவரான திலக் கருணாரத்தினவிற்கு நோர்வே நாட்டிற்கான அழைப்பு வந்தால் அவர் என்ன முடிவை எடுப்பார் என்பது பற்றி எம்மால் நினைத்து பார்க்க முடியாதுள்ளது. சிலவேளை வியாபார நோக்குடன் அவர் அந்த நாட்டிற்கான விஜயத்தை மேற்கொள்ளலாம்.

இலங்கையை பிளவுபடுத்த முயற்சிக்கும் சர்வதேசிய ரீதியாக இந்த சூழ்ச்சியை தோற்கடிக்க அமெரிக்கா, இந்தியா, நோர்வே நாடுகளுடனான அனைத்து இராஜ தந்திர உறவுகளையும் நிறுத்திக் கொண்டு யுத்தத்தை முன்னெடுத்துச் சென்று புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்பது சிஹல உறுமயவின் நிலைப்பாடாகும்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் எதிரான மூன்றாவது மாற்றுக் கருத்தொன்று உண்டு, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தால் தீர்வு காணமுடியாது. இனங்களுக்கிடையேயான பிரச்சினை அரசியல் ரீதியானதாகும். அதனால் அரசியல் ரீதியான தீர்வே இதற்குத் தேவையானதாகும். யுத்தம் போலவே இந்தக் கருத்தும் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இருந்தாலும் இலங்கையின் பிரதான அரசியல் பிரவாகத்தின் அடிப்படை கருத்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதாகும். மக்கள் விடுதலை முன்னணி இனப்பிரச்சினைக்கு யுத்தத்தை தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையாகவே இக்கட்சி யுத்தத்திற்கு எதிரானதாகும். யுத்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என கூறும் கட்சி சிஹல உறுமய மட்டும் தான்.

அரசியல் தீர்வொன்றிற்காக இரு சாராரிடையேயும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும். இருந்தாலும் இருபது வருட காலமாக தொடரும் யுத்தத்தால் இரு பக்கத்தார் மத்தியிலும நம்பிக்கையீனம் நிலவுகின்றது. அதனால் மூன்றாம் தர மத்தியஸ்தமொன்று கட்டாய தேவையாக முன் நிற்கின்றது. அவ்வாறான மூன்றாம் தரப்பிற்கு சர்வதேச சமூகத்தினரின் ஏற்பும் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். ஐக்கிய நாடுகள் சங்கம் போன்ற அமைப்பொன்று முன்வருமேயாயின் மிகவும் நல்லதாக இருப்பினும் அது மிகவும் நீண்ட கடினமான செயற்பாடொன்றாகும். தற்போதைய சாத்தியமான நிலை எதுவாயின் சர்வதேச ஒத்துழைப்பை ஒன்று சேர்க்க முடியுமான ஒரு நல்ல முயற்சியை மேற்கொள்வதேயாகும். முக்கியமாக சர்வதேச வல்லரசான அமெரிக்காவினதும் வலய வல்லரசான இந்தியாவினதும் ஆதரவு இங்கு மிக முக்கியமானதொன்றாகின்றது.

தற்போதுள்ள நோர்வேஜிய மத்தியஸ்தத்திற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களும் கிடைக்கின்றது.

பின்னர் தேவையான பேச்சுவார்த்தைகளுக்கான பரந்த கொள்கை வகுப்பொன்றாகும். நோர்வேஜியப் பிரதிநிதி சோல்ஹய்ம் அந்தக் கொள்கை வகுப்புக்களை எல்.ரி.ரி. யினதும் அரசினதும் முன் வைத்தார். அதன் மூலம் இரண்டு கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. முதலாவது இலங்கையில் சுதந்திரமான இரண்டு ராஜ்ஜியங்கள் உருவாவதற்கு ஏற்ற சமுதாய அரசியல் வாய்ப்புக்கள் இல்லை என்பது. இரண்டாவது, இந்நாட்டு தமிழ் மக்களினது நியாயமான அரசியல் அபிலாஷைகள் நிறைவேறும் அரசியல் மறுசீரமைப்பொன்று தேவை என்பதுமாகும்.

நோர்வேஜியர்களை வெளியேற்றுவதற்கான கோஷங்களை எழுப்புவதையும், நோர்வே நாட்டுக்கான அழைப்பை நிராகரிப்பதையும் விட சர்வதேச சமுதாயத்தினரது ஒத்துழைப்போடு ஆரம்பமாகும் இந்தச் சமாதானத்துக்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பது மிகவும் மேலானதாகும். தமிழ் ஈழத்திற்கான சந்தர்ப்பங்கள் நாட்டில் இல்லை என்பதை சர்வதேச சமூகம் பிரபாகரனுக்கு எடுத்துரைத்துள்ளது. அதேபோன்று இலங்கை அரசுக்கும் யுத்தம் தீர்வொன்றல்ல என்பதை அறிவுறுத்தியுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் அரசும் புலிகளும் எடுக்கும் முடிவுகள் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கிய காரணங்களாக அமையவுள்ளன.



கலாநிதி

**விக்ரமபாகு கருணாரத்னா**

# பார்வையில்

"பேச்சு வார்த்தை செய்வதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. தமிழ் ஈழக் கோரிக்கையை புலிகள் கைவிட மாட்டார்கள்" என்பது அதி தீவிர சிங்கள சந்தர்ப்பவாதத் தலைவர்கள் அடிக்கடி கூறும் பேச்சாகும். "சுய பரிபாலன முறையைப் புலிகள் ஏற்காததால் அவை பற்றிப் பேசியும் பிரயோசனமில்லை. யுத்தத்தையே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" என்பதும் அவர்களது கருத்தாகும். இவைகளில் இருந்து தெரிய வருவது, அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசப்படுவதற்குக் காரணம் புலிகளேயன்றி வேறு காரணங்கள் இல்லை என்பதே உண்மை. தமிழ் மக்களிடையே சுய நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்அல்லது தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்வதற்கான உரிமை பற்றிய கொள்கை மேலெழுந்தது புலிகளின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டல்ல. புலிகள் அமைப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு, சுய நிர்வாக முறைகளைப் பற்றிப் பேசுவதற்கு எமக்கும் உரிமையுண்டு. அனைத்து தமிழ்த் தலைவர்களுக்கும் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிய குரல் மேலெழும்போது புலிகள் அமைப்பு உருவாகியிருக்கவும் இல்லை. இனங்களின் சுய நிர்ணய! உரிமைகள் பற்றி 1914ம் ஆண்டுகளுக்கு முன்பே லெனின் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். சுய நிர்ணய உரிமை, நிஜ பூமிபற்றிய கொள்கைகளை வகுத்தவர் பிரபாகரன் என சிங்களத் தலைவர்கள் நினைக்கின்றார்கள். அதனால் பிரபாகரனோடு இணக்கப்பாடுகளுக்கு வருவதற்கே தவிர வேறு விதமாக இவைகள் பற்றிப் பேசக் கூடாது. இதில் இன்னொரு பயங்கரமான பகுதியும் உண்டு. அது யாதெனில் புலிகள் அமைப்பு தமது பலத்தை கட்டியெழுப்பாது இருந்திருந்தால் இவைகள் சம்பந்தமாக கவனம் இவ்வளவு தூரம் சென்றிருக்காது என்பதேயாகும். எது எவ்வாறாயினும் புலிகள் போராட்டத்தை முன்னெடுத்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி பேசவேண்டி வந்திருக்கும். தமிழ் தேசியம் ஒன்று இங்கு கிளர்ந்தெழுந்துள்ளமை இதற்குக் காரணமாகும். நாங்கள் மாம் பழத்தைப் பறித்துச் சாப்பிடுவது எதற்காக? அது பழுத்து எங்களது தலைகளில் விழுந்து தலை பழுதடையும் என்பதற்காகவா? இல்லாவிட்டால் மாம்பழம் ஒரு சுவையான உணவு என்பதற்காகவா? தமிழ் சுய நிர்வாக முறையும் அவ்வாறானது தான். தமிழ் சுய நிர்வாகம் பற்றிய கவனம் அதிகமாகச் செல்ல வேண்டியது அது ஒரு முக்கியமான வளம் என்பதற்காகத்தான். தமிழ் மக்களின் செழிப்பு, முன்னேற்றம் இலங்கைக்கும், உலகிற்கும் நன்மையே பயக்கும் என்பதனால். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் ஆவேசம் கொண்டு யுத்தம் செய்யும் அளவிற்கு முன்னேறியதன் காரணத்தால் அல்ல. சில சிங்களப் பணக்கார அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் மாங்காய் தலையில் வீழ்ந்து வேதனையை ஏற்படுத்தும் என்ற பயத்தால் மாங்காய் சாப்பிட மரத்துக்கு ஏறும் மடையர்கள் போன்றே செயற்படுகின்றனர்.

அரசாங்க மேல்மட்டத் தலைவர்கள் இன்னும் நினைத்துக் கொண்டிருப்பது யுத்தத்தைத் தவிர வேறு தீர்வு இல்லை என்பதேயாகும். "பேச்சுவார்த்தை செய்வதில் தவறில்லை. யுத்தத்தையும் சரிவரக் கொண்டு செல்லல் வேண்டும்" என அவர்கள் கூறுகிறார்கள். ஐ.தே.கட்சியைத் தோற்கடித்து விட்டு தாம் அதிகாரத்திற்கு வந்ததும் யுத்தத்தின் காரணமாகத்தான் என நினைப்பவர்களும் உண்டு. அதனால் சமாதானத்திற்காக இரங்கினால் தமது நிலையில் சரிவு ஏற்படும் என இவர்கள் பயப்படுகின்றார்கள். ஜி.எல்.பீரிஸ் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பேசியதினாலேயே அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்பதை இவர்கள் மறந்துள்ளார்கள். அதேபோன்று சமாதானத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு அதிகமான வாக்குகள் பெற்றுக் கொண்டனர் என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

ரத்ணசிறி விக்ரமநாயக்கா யுத்தம் பற்றிப் பச்சையாகவே பேசிப் போட்டு விட்டு இப்போது எதுவும் பேசாதவர் போல் இருக்க முயல்கிறார். எவ்வளவு முயற்சி செய்தாலும் அவரது கொள்கையை மறைத்துக் கொள்ள முடியாது. இப்போது திடீரென டி.எம்.ஜயரத்னாவும் சமாதானம் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளார். அவர் சென்ற காலங்களில் இனத்துவேசக் கொள்கையுடனேயே இருந்தார். 1988ம் ஆண்டு மாகாண சபைகளுக்கு எதிராக தீவிரமாகப் பேசித்திரிந்தவர் டி.எம்.ஜயரத்னா அவர்கள். இப்போது மிக உயர்ந்த குரலில் சமாதானம் பற்றிப் பேசுகிறார். ஒரு நேரம் ரத்ணசிரியை பிரதம மந்திரிப் பதவியில் இருந்து தள்ளி விட்டு அந்த இடத்தைப் பிடிப்பதற்காக சிறந்த துரும்பு சமாதானம் என அவர் நினைப்பதாக இருக்க வேண்டும். இது எனது கருத்து.

இவைகள் அனைத்தின் மூலமும் தெரிய வருவது இவர்களது அரசியல் காற்று வீசும் திசையை நோக்கிலேயன்றி நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அல்ல என்பதேயாகும். உண்மையாகவே பணக்கார வகுப்புவாத அரசியல் இப்போது வங்குரோத்து அடையும் நிலையிலேயே உள்ளது. சிறிதளவிலேனும் அவர்களது கவனம் பிரச்சினைகளில் சென்றுள்ளதாகத் தெரிவதில்லை. இந்த நிலையில் வெளிநாட்டுச் சதுரங்க விளையாட்டில் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலை தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்கள் யாவற்றிற்கும் ஆரோக்கியமான தொன்றாகத் தெரிவதில்லை.

# யாழ். சைவ, வேளாள கருத்து நிலைக்குள்

# அகப்படாத தமிழர் பிரதேசங்கள்

**தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை**

**அரசியல் தொடர் 26**

- ஆதிசங்கரர்-

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஈழத்தமிழரின் தாயகமான வடக்கு-கிழக்கினை ஐந்து பண்பாட்டுப் பிரதேசங்களாக பிரிக்கின்றார். யாழ்ப்பாணப் பிரதேசம, வவுனியா-முல்லைத்தீவு அடங்கிய வன்னிப் பிரதேசம், மன்னார்ப் பிரதேசம், திருக்கோணமலைப் பிரதேசம், மட்டக்களப்புப் பிரதேசம் என்பனவே அவ் ஐந்துமாகும்.

தமிழர் அரசியலின் முதலாவது கட்டத்தில் அவ் அரசியலின் மையமாக கொழும்பும், யாழ்ப்பாணமும் மட்டும் நிலவியமையால் ஏனைய பிரதேசங்கள் தமிழர் அரசியலில் உள்ளீர்க்கப் படவில்லை. பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் அறிமுகப் படுத்தாததால் பிரதேச அரசியல் வளர்வதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை. வழங்கப் பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத் தவர்களே பெற்று வந்தனர். படித்த இலங்கையரை தெரிவு செய்வதற்கான வாக்குரிமையில் சொத்துடையவர்களுக்கும் கல்வி அறிவுடையவர்களுக்கும் மட்டும் வழங்கப்பட்டமையால் குடா நாட்டைத் தவிர்ந்த ஏனைய பிரதேசத்தினைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் வாக்குரிமையையும் பெறக் கூடிய நிலை இருக்கவில்லை.

எனினும் காலனித்துவ ஆட்சி யின் நவீனப்பாடுகள் அங்கும் வளர்ச்சிகளை உருவாக்கின. இவற்றில் இரு அம்சங்கள் முக்கியமானவையாகும். ஒன்று நகரங்கள் உருவாக்கப் பட்டமை. இரண்டாவது யாழ்ப் பாணத்தவர்கள் குடியேறியமை.

வவுனியா- முல்லைத்தீவு பகுதிகளை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசம் நீண்டகாலமாகவே ஒரு மூடுண்ட பிரதேசமாக இருந்தது. அதன் நில அமைப்பு காரணமாகவும், தொடர்புக் குறைவு காரணமாகவும் தனித் தனிக் கிராமங்களாக குடியிருப்புத் தொகுதிகளாக இயங்கும் ஒரு நிலைமை இருந்தது. ஆனால் அங்குள்ள நில வசதி காரணமாக மக்கள் மத்தியில் வசதியான வாழ்க்கை முறையொன்று நிலவிற்று. காலனித்துவ ஆட்சி முறையின் வளர்ச்சியும், அதனால் ஏற்பட்ட போக்குவரத்து வளர்ச்சியும் இவர்களுடைய உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தியதோடு நகரங்கள் உருவாகுவதற்கும் வழி வகுத்தன. வவுனியா, முல்லைத்தீவு என்பன முக்கிய நகரங்களாகவும் மாறின. யாழ்ப்பாணத்தவர்கள் வணிகர்களாகவும் விவசாயிகளாகவும், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இப்பிரதேசங்களின் நகரப் பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். நகர்ப்புறங்களில் பலமான ஆதிக்க சக்திகளாகவும் இவர்கள் விளங்கினர். பொதுவாக அரசாங்க உத்தியோகத் தர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் இடையில் நெருக்கமான கூட்டும் நிலவியிருந்தது. அவர்கள் தங்களுக் கென கோவில்களைக் கூட நகரங்களில் உருவாக்கினர். யாழ்ப்பாணப் பண்பாடு, கலாச்சாரங்கள் என்பன அங்கும்

> **வன்னியைப் போலவே இங்கும் மன்னார் மக்களில் மேல் நிலையில் இருந்தவர்களுக்கும், யாழ்ப்பாணத் தவர்களுக்கும் இடையில் யார் ஆதிக்க நிலையில் இருப்பது என்பது தொடர்பாக பிணக்குகள் ஏற்பட்டிருந்தன.**

மெல்ல ஊடுருவத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தவர் ஆதிக்க நிலையினால் வன்னி மக்களில் ஏற்கனவே மேல் நிலையில் இருந்தவர்களுக்கும் யாழ்ப்பாணத் தவர்களுக்கும் இடையில் முரண் பாடுகளும், வளர ஆரம்பித்தன. எனினும் வாக்குரிமை வழங்கப்படாததினால் அரசியல் தளத்தில் அது பெரிதாக வளர்ச்சி அடைய வில்லை. 1931இன் பின்னரே அரசியல் தளத்தில் அது வளர ஆரம்பித்தது. வன்னி அரசர்களின் மரபுவழிவந்த சிந்தனைகளும் யாழ். சைவ வேளாள கருத்து நிலைகளும் மக்களை வழிநடத்தின.

மன்னார் பிரதேசம் தமிழர்களையும், முஸ்லீம்களையும் கொண்டது. ஏறத்தாழ 2/3 பங்கினர் தமிழர்களாகவும், 1/3 பங்கினர் முஸ்லீம்களாகவும் காணப்பட்டனர். தமிழர்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்களாவர். அங்கு சைவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று குடியேறியவர்களே யாவர்.

கத்தோலிக்க பெரும்பான்மை காரணமாக கத்தோலிக்கரின் மேலாதிக்கம் காணப்பட்டது சமூகத்தின் வளர்ச்சியில் கத்தோலிக்க மதகுருமார்கள் பெரிதும் அக்கறை காட்டி வந்தனர். பாடசாலைகளை உருவாக்கி கல்விப் பணிகளிலும் ஈடுபட்டனர். சமூகத்தின் தலைமை இவர்களிடமே இருந்தது. விவசாய, மீன்பிடிப் பிரதேங்களாக இருந்தமையினால், உணவுப் பிரச்சினைகளும் பெரிதாக இருக்கவில்லை. யாழ்ப் பாணச் சைவர்களின் வருகையும், திருக்கேதீஸ்வரத்தின் புணருத்தாரணமும் சைவர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இடையே பிணக்குகளை ஏற்படுத்தியிருந்தன.

கருத்து நிலைகளைப் பொறுத்தவரை கத்தோலிக்க மதத்தின் அடிப்படையில் எழுந்த கருத்து நிலைகளே மேலாதிக்க நிலையில் இருந்தது. முஸ்லீம்கள் மத்தியில் இஸ்லாமிய அடிப்படையிலான கருத்து நிலைகளும் சைவர்கள் மத்தியில் யாழ். சைவ வேளாள கருத்து நிலைகளும் மேலாதிக்க நிலையில் இருந்தன.

வன்னியிலும் மன்னாரிலும் யாழ்ப்பாணத்தவர்கள் வாழ்ந்த போதும் யாழ்ப்பாணத்தில் கடைப் பிடிக்கின்ற சாதி இறுக்கத்தை அங்கு அவர்கள் மேற்கொள்ளவில்லை.

மன்னார் நகரப் பகுதியில் வர்த்தகர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையே நிலவிய கூட்டு காரணமாக யாழ்ப்பாணத் தவர்கள் ஆதிக்க நிலையிலேயே இருந்தனர். இவ் இரு பிரிவினரும் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

வன்னியைப் போலவே இங்கும் மன்னார் மக்களில் மேல் நிலையில் இருந்தவர்களுக்கும், யாழ்ப்பாணத் தவர்களுக்கும் இடையில் யார் ஆதிக்க நிலையில் இருப்பது என்பது தொடர்பாக பிணக்குகள் ஏற்பட்டிருந்தன.

உண்மையில் வன்னியிலும், மன்னாரிலும் அப்பிரதேசத்தின் சுதேசிகளினால் அரசியல் தளத்தில் யாழ்ப்பாணத்தவர்களின் ஆதிக்கத்தை நீண்ட காலமாக உடைக்க முடியவில்லை.

மன்னாரில் 1956இல் வி. ஏ. அழகக்கோன் தமிழரசுக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படும் வரை அரசியல் பிரதிநிதித்துவம் யாழ்ப்பாணத்தவரின் கைகளிலேயே இருந்தது. வன்னியில் 1960 வரை இந்நிலை நிலவியிருந்தது. அங்கு 1960ம் ஆண்டு தேர்தலிலேயே தா. சிவசிதம்பரம் தெரிவு செய்யப் பட்டார்.

திருகோணமலைப் பிரதேசத்தில் திருகோணமலை நகரத்தில் யாழ்ப்பாணத்தவர் ஆதிக்க நிலையில் இருந்தனர். மூதூர், தம்பலகாமம் கந்தளாய் போன்ற பிரதேசங்கள் பாரம்பரிய மரபுக் கிராமங்களாக விளங்கின. நகரத்தில் யாழ்ப்பாணத் தவர்களின் கருத்து நிலைகளும், ஏனைய இடங்களில் பாரம் பரியத்தின்படி மேல் நிலையில் உள்ள கருத்து நிலைகளும் மேலாதிக்க நிலையில் இருந்தன. அபிவிருத்திகளில் நகர்ப்புறம் கவனிக்கப்பட்டளவிற்கு ஏனைய பகுதிகளில் கவனத்திற்குட் பட்டன எனக் கூறமுடியாது.

தமிழ்ப் பிரதேசங்களில்

> **உண்மையில் வன்னியிலும், மன்னாரிலும் அப்பிரதேசத்தின் சுதேசிகளினால் அரசியல் தளத்தில் யாழ்ப்பாணத்தவர்களின் ஆதிக்கத்தை நீண்ட காலமாக உடைக்க முடியவில்லை.**

யாழ்ப்பாணத்திற்கு அடுத்த படியாக செயற் துடிப்புள்ள பிரதேசமாக விளங்கிய பிரதேசம் என்றால் அது மட்டக்களப்பு பிரதேசம் என்றே கூற வேண்டும். நகர்ப்புறத்தில் யாழ்ப் பாணத்தவர்கள் வர்த்தகர்களாகவும், அரச உத்தியோகத்தர்களாகவும் வசித்தாலும் மேலாதிக்க நிலையில் இருந்தார்கள் எனக்கூற முடியாது. பிற்காலங்களில் கிடைத்த அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கூட மட்டக் களப்பு வம்சாவழியினரே பெற்றிருந் தனர். 1956இல் தெரிவு செய்யப் பட்ட இராஜதுரையின் தந்தையார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட இராஜதுரையின் பிறப்பிடம் மட்டக்களப்பே!

மெதடிஸ்த மிஷனறி, கத்தோலிக்க திருச்சபை, இராமகிருஷ்ணமிஷன் என்பவற்றின் கல்விப் பணிகளினால் கல்வியும் வளர்ச்சி கண்டிருந்தது. யாழ். சைவ வேளாள கருத்து நிலைகளின் இறுக்கம் அங்கில்லாததினால் தாராண்மைக் கருத்துக்கள் இலகுவாக வளர்வதற்கும் வழி ஏற்பட்டிருந்தன. வளமான பூமியாக இருந்தபடியால் பொருளாதாரத்திலும் மேன் நிலையில் இருந்தது. மட்டக்களப்பு பிரதேசத்திற்கேயுரிய கலைகளும் வளர்ச்சி கண்டிருந்தன.

எனினும் சமூகமளவில் வேளாளரும், முக்குவரும், கரையாரும் மேலாதிக்க நிலையில் இருந்ததினால் தாழ்த்தப்பட்டவர்கள் புறக்கணிக் கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். கல்வி வளர்ச்சிக்கான அடிப்படைகளும் அவர்கள் மத்தியில் பெரிதளவிற்கு முன்னெடுக்கப் படவில்லை. இராமகிருஷ்ண மிஷனின் பாடசாலைகள் எதுவும் உயர் சாதியினரின் ஆதிக்கத்தினால் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதேசங்களில் உருவாக்கப்பட வில்லை என பேராசிரியர் மௌன குரு என்னுடன் பேசும் போது குறிப்பிட்டார்.

அரச உத்தியோகங்களில் யாழ்ப்பாணத்தவரின் ஆதிக்கம் காரணமாக யாழ்ப்பாணத்தவர் களுக்கு எதிரான உணர்வு மட்டக் களப்பிலும் வளர்ந்திருந்தது.

தொடரும்...

**இவ்விதழுக்கான உசாத்துணைகள்**

1. சிவத்தம்பி- கா "இலங்கைத் தமிழரது சமூகக் கட்டமைவின் சில அம்சங்கள்"
2. சிவத்தம்பி- கா "இலங்கைத் தமிழர் யார், எவர்?
3. பேராசிரியர் மௌன குருவுடன் தொலைபேசியில் உரையாடியவை.

# புதுத் தென்றல் தமிழ் மக்கள் வாழ்வில் வீசுமா?

"தனியே தன்னந் தனியே"
சொந்தங்களைப பிரிந்து பாஸ் இன்றி
தனியே தன்னந்தனியே வவுனியாவில்
மக்கள் அவதி.

சுயாதீன தொலைக்காட்சியில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் 1.30ற்கு புதுத் தென்றல் என்ற நிகழ்ச்சி தேவிஸ் குருகே கலையகத்தில் இருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

வாரம் தோறும் சனிக்கிழமைகளில் இந்நிகழ்ச்சி தொடரும் என அறிவித்தார்கள். நோக்கம் வடக்கு- கிழக்கிற்கு தெளிவான ஒளிபரப்பு சேவை செய்வதாம். ஆரம்ப நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ் அமைச்சர் நேரடியாக பங்குற்றார். (வடக்கு- கிழக்கில் என்றால் அவர் தொலைபேசியில் தான் வாழ்த்துவார்)

இன்றைய சூழலில் மக்கள் உடனடித்தேவை என்ன என்பதை உணர்ந்த அமைச்சர் எல்லா புனர்வாழ்வு புனரமைப்பு தமிழர் விவகார நடவடிக்கைகளையும் விட அதி முக்கியமான இந் நிகழ்ச்சியில் கலந்து பல மணித்தியாலங்கள் பங்கேற்றது அவரது பொறுப்புணர்வை பறைசாற்றியது. இன்னமும் வடக்கு- தெற்கு பயண ஒழுங்குகள் கெடுபிடிகள் தொடர்கின்றன. கடந்தவாரம் 1250 பேரை வரச் சொல்லி 700 பேரை மட்டுமே கப்பலில் ஏற்றினர். விமானபயண அனுமதி நேரத்திற்கு கிடைக்காமல் பலர் அலைகின்றனர். விமான பயண சீட்டு வழங்கும் நிலையத்தை பம்பலப்பிட்டிக்கு மாற்றிய சாதனை மட்டும் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் "தெளிவு இன்னமும் போதாது முன்னேற வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தமிழ் மக்களுக்கு பாவவிமோசனமாக அமையப் போகும் நிகழ்ச்சி நிரலை பார்த்து விட்டுத்தான் அமைச்சர் அதில் கலந்து கொண்டாரோ தெரியவில்லை.

மொரின் ஜனட்டின் பாட்டிற்கு இளம் பிள்ளைகள் அமைச்சர் முன் ஆடியது அட்டகாசம். மேகம் கறுக்குது மின்னல் அடிக்குது என பாடல் ஒலிக்க எம் மனதில் இனி அடைமழையல்லவா வரப்போகுது வடக்கில், வவுனியாவில் அகதி முகாம்களில் வாழும் மக்கள் படப்போகும் பாடு நிழலாடியது.

தனியே தன்னந்தனியே என்ற சங்கர் மகாதேவன் பாடலை பாடியவருக்கு ஒரு சபாஸ். ஆனால் சொந்தங்களை பிரிந்து சந்திக்க முடியாமல் பாஸ் இன்றி, பிணைவைக்க ஆளின்றி அவதிப்படும் வடக்கில், வன்னியில் சிறைக்கூடங்களில் காத்து காத்து நிற்பவர்கள் தான் நினைவிற்கு வந்தார்கள்.

கப்பலுக்கும் விமானத்திற்கும் கூட காத்து காத்துத்தான் நிற்கிறார்கள்.

"மேகம் கறுக்குது மின்னல் அடிக்குது"
வவுனியாவிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் அடை மழையில் மக்கள் ஒதுங்க இடமில்லாமல் தவிக்கின்றனர்.

எய்ட்ஸ் பற்றியும் டெங்கு நோய் பற்றியும் மக்களுக்கு விளக்கும் பணி தொடரப் போகிறதாம். எய்ட்ஸ் ஏற்பட தனிநபர் தவறுகளே காரணம். ஆனால் டெங்குவராமல் தடுக்க என்னதான் விளக்கினாலும் அகதி முகாம்களுக்கு நேரடியாக சென்று பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும் பட்டிகளில் மாடுகள் வாழ்வதை விட மோசமான சூழலில் மக்கள் வாழ்வது அமைச்சருக்கு நேரடி விஜயம் ரிஸ்க் என்பதால் அதிகாரிகளின் வாய் அளப்புகளை நம்பி தான் விடும் அறிக்கைகளால் திருப்திப்படும் திரிசங்குநிலை.

நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் தான். ஆனால் இன்று எமக்கு தேவை யுத்தமற்ற வாழ்வும் அகதிகள் புனர்வாழ்வும் தான் என்பது அமைச்சருக்கு தெரியாதா? அவர் மன இறுக்கம் முகத்தில் தெரிந்தது.

இந் நிகழ்ச்சியின் ஆரம்ப ஓட்டம் தான் சுவாரசியமானது. தந்தை செல்வா நினைவு தூபி, இடிந்த கட்டிடங்கள் பறக்கும் வெண்புறா இரை கொடுக்கும் தாய்க்கருவி உழவுயந்திரம் என யாழ்ப்பாணத்தை காட்டி பேய்க்காட்டிய விதம் நெருடினாலும் ஒரு யதார்த்தத்தை காட்ட இருமல்லர்கள் (ஜப்பானிய மாமிசமலைகள்) மோதுவதைக் காட்டியது சாலப் பொருத்தம்.

எந்த நிகழ்ச்சியையும் எம் மக்களிற்கு காட்டவிளைபவர்கள் ஒன்றை மட்டும் மறக்க கூடாது. திணிக்கப்பட்ட யுத்தத்திற்கு முன் அவர்களுக்கு தினம் நாலு தடவை ரயில்சேவை, இரவு பகல் பஸ் சேவை, தடையற்ற மின்சாரம், குறைவற்ற உற்பத்தி சந்தைப்படுத்தல்... அட படபஸ் கூட இருந்ததய்யா. இயக்கங்கள் வந்தும் இடையில் தம்முன்மோதியும் அடக்க முனைந்தவரிடம் சரணடைந்தும், துனைபோயும் தான் எல்லாம் தலைகீழானது.

இன்று ஏதோ பாட்டைக் கேட்டும், ஆடல் பார்த்தும் தம் துன்பங்களை மறந்து துள்ளிக்குதித்து இன்பமடைவர் என்ற நினைப்பிலா எல்லா வேலைகளையும் விட்டு இந்த நிகழ்ச்சியில் கலந்து பரவசமானார். வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழர் விவகார இந்து கலாச்சார அமைச்சர்.

**சூரியன்**

# வடக்கு கிழக்கு இலக்கிய விழா

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடா வருடம் நாடாத்தும் மூன்று நாள் இலக்கிய பெருவிழா இம்முறை திருமலை புனிதமரியாள் கல்லூரியில் கடந்தகால விழாக்களில் இருந்து பெரிதும் வேறுபடாதவகையில் வழமையான சீர்கேடுகளுடன் சிறப்பாக நடந்தேறியது. இம்முறை விழாவில் நாட்டார் இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகளும் அதனை ஒட்டிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. விழாவிற்கென யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் இருந்து விசேடமாக அழைக்கப்பட்ட பேராசிரியர்கள் நாட்டாரியல் தொடர்பான பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை வாசித்த ளித்தனர். மாலை நிகழ்ச்சிகளில் பலதரப்பட்ட கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணர்வகளால் மேடையேற்றப்பட்ட கூத்து, (நவீன பஸ்மாசுரன்) நாட்டார் இசைப்பாடல்கள், புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களால் வழங்கப்பட்ட அலை வாய்கரையில் நாடகம். புனித மரியாள் கல்லூரி மாணவர்களால் வழங்கப்பட்ட நடன நிகழ்ச்சி, போன்றன குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிகழ்ச்சிகளாகும். விழாவின் இறுதிநாள் நிகழ்வின் பதினொரு பல்துறைசார் கலைஞர்கள் ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவ்விருது கடந்த வருடம் பதினைந்து பெயருக்கு வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இந்த இலக்கிய விழா நோக்கும் போது வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் பிரிவு இதனை ஒரு நிர்வாக கடமையாக இருக்கிறதே அன்றி ஒரு சமுதாய பணியாக கருதுவதில்லை. பேராசிரியர்கள் தங்களது பண்டிதத்தனங்களை பறைசாற்றுவதும், இலக்கியத்தை பற்றி எதுவுமே தெரியாத வ.கி.மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் பிரிவினர் ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமைர்ந்து கொண்டு வெறுமனே தலையை ஆட்டிக் கொள்வதுமே ஒவ்வொரு விழாவிலும் தொடர்கிறது. உண்மையில் பண்பாட்டு அலுவல் பணிப்பாளர் (உதவி) எதிர்மனசிங்கம் உட்பட அப்பிரிவில் பணிபுரியும் எவருக்குமே இலக்கியத்தை பற்றிய அறிவோ, அக்கறையோ கிடையாது என்பது கசப்பான உண்மை. ஆனாலும் எல்லாம் தங்களுக்கு தெரியுமென்ற போலிமுக்காட்டை போட்டுக் கொண்டு இவர்கள் இலக்கியம் பற்றி விவாதிப்பதும், பேசுவதும் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. இது தவிர இலக்கிய விழா விடயங்களில் பிரதேசவாதப் போக்கு இருப்பதாவும் தெரிகிறது. இம்முறை கூட நாட்டார் இலக்கியம் தொடர்பான பல தகவல்களை கூறக் கூடியவர்கள் திருகோணமலையில் இருந்த போதும்

## ஓர் அலசல்

அவர்கள் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பிரதேசவாதப் போக்கிற்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாக இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். கலைநிகழ்ச்சிகளை தெரிவு செய்வதில் கூட திருகோணமலையில் இயங்கும் கலை மன்றங்கள் பொருட்படுத்தப் படுவதில்லை என்பதும் குறிப்பி டத்தக்கது. இத்தகைய பிரதேசவாதப் போக்குகள் ஓர் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கான அடையாளம் அல்ல. வ.கி. மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டு துறை அமைச்சு இலக்கிய விழாவினை ஒரு காத்திரமான பணியாக கருதியிருந்தால் திருகோணமலையில் இருக்கும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் அனைவருடனும் கலந்துரையாடி ஒரு பொதுவான ஆலோசனையின் பேரில் விழாவை நடாத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறான முயற்சிகள் ஒரு போதும் இடம்பெற்றதில்லை. அமைச்சை பொறுத்தவரையில் எப்படியாவது இலக்கிய விழா நடந்தால் போதுமானது.

இந்த விழா தொடர்பாக திருகோணமலையைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் கருத்து கூறுகையில், ஒரு சிலர் கூடி தங்களுக்குள் பேசுவதாக இலக்கிய விழா என்று நகைச்சுவையாக கேட்டவர், பண்பாட்டு அலுவல்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எவருமே எழுத்தாளர்கள். கலைஞர்ககளை மதிப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தங்களுக்கு கும்பிடுபோடுபவர்கள் தான் பெரிய எழுத்தாளர்கள் என்று ஆதங்கப்பட்டார். எதிர்காலத்தில் பண்பாட்டு அலுவல்கள் பிரிவு ஒரு தனியான திணைக்களமாக இயங்கப்போவதாக விழாவின் ஆரம்ப நாள் உரையில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் கூறியிருந்தார் எனினும் இதன் மூலம் எதை சாதிக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்தே நோக்க வேண்டும். (எதிர்மனசிங்கம் போன்றவர்கள் இருக்கும்வரை சுத்திச்சுத்தி சுப்பார கொல்லைக்குள் கதைதான் என்றும் சிலர் கூறுகின்றனர்).

இம்முறை இடம்பெற்ற இலக்கிய விழாவின் போதும் வருடாவருடம் இடம்பெறுவது போன்றே பலதரப்பட்ட மாற்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனவே பண்பாட்டு அலுவல்கள் பிரிவு இத்தகைய மாற்றுக்கருத்துக்களை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் சமுதாயத்திற்கு உதவும் வகையில் கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்வுகளை திட்டமிட்டு நடாத்துவது காலத்தின் தேவை. அவ்வாறில்லாது தங்களுக்கு எல்லாம் தெரியுமென்ற அடிப்படையில் நடந்து கொண்டால் இத்தகைய விழாக்கள் அனைத்தும் விழலுக்க இறைத்த நீராகும் என்பதே உண்மை.

**மாக்கியவல்லி**

# இந்திய அரசு அறிவித்த யுத்த நிறுத்தம்

# மீண்டும் தடை போடும் பாகிஸ்தான்

காஷ்மீரில் இந்தியா அரசு "ஒரு தரப்பாக" அறிவித்திருந்த யுத்தம் சமாதானப் பேச்சுக்களுக்கான வழியைத் திறக்குமா? இதற்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ள போதிலும் அடுத்த நகர்வை எப்படி மேற்கொள்வது என்பதில் இந்திய அரசு குழம்பிப் போயுள்ளது. பாகிஸ்தான் எடுத்துள்ள நிலைப் பாடுதான் அதற்குக் காரணம்!


இந்திய அரசு அறிவித்துள்ள இந்த யுத்த நிறுத்தம் பாகிஸ்தானின் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. ஆனால் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை வளர்ப்பதற்கான அடித்தளத்தை அது அமைக்குமா என்ற கேள்வியும் இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றது. யுத்த நிறுத்தம் தொடர்பாக பாகிஸ்தான் வெளிப்படுத்தியுள்ள பிரதிபலிப்புக்களே இந்தக் கேள்வி எழுவதற்குக் காரணம். பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் அப்துல் சத்தார், வெளியிட்டுள்ள நிலைப்பாட்டில் இரண்டு முரண்பட்ட அம்சங்கள் காணப்படுவதாக இந்தியா கருதுகின்றது.

இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், காலவரையறையற்றதாகவன்றி இது நிரந்தரமான ஒன்றாக இருக்கவும் வேண்டும் எனவும் பாகிஸ்தான் வலியுறுத்தியிருப்பது இரு நாட்டு உறவுகளைப் பொறுத்த வரையில் மிகவும் சாதகமான ஒரு நிலைப்பாடாகவே கருதப்படுகின்றது. மறுபுறத்தில் காஷ்மீரின் எதிர்காலம் தொடர்பான எந்தஒரு பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தானும் சம்பந்தப்பட வேண்டும் என அப்துல் சத்தார் தெரிவித்திருப்பது இந்தியாவைக் குழப்பிவிட்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் புனிதப் பெருநாளான ரம்ழானை முன்னிட்டு ஒரு மாத காலத்துக்கு இந்தியாவால் அறிவிக்கப்பட்ட இந்த ஒரு தரப்பான போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படலாம் என இந்திய அரசு திங்கட்கிழமை அறிவித்திருந்தது. காஷ்மீர் தீவிரவாதிகள் இந்த யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாத அதேவேளையில் தமது தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியிருக்கின்றார்கள். செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். யுத்த நிறுத்தத்தை இந்திய அரசு அறிவித்த பின்னர் இடம்பெற்றுள்ள மிகப் பெரிய தாக்குதலாக இது கருதப்படுகின்றது.

**யுத்த நிறுத்தத்தின் அடுத்த கட்டம்?**

யுத்த நிறுத்த அறிவிப்பை இந்திய அரசு வெளியிட்டுள்ள அதேவேளையில் பேச்சுக்களை இலக்காகக் கொண்ட அடுத்த கட்டத்துக்கான காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இதனை அடுத்த கட்டத்துக்கு எவ்வாறு நகர்த்துவது என்பதில் இந்தியாவிடம்



தெளிவான நிலைப்பாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

தீவிரவாத அமைப்புக்களும், பாகிஸ்தானும் எடுத்துள்ள நிலைப் பாடுகள் தான் இதற்குக் காரணம். காஷ்மீர் தீவிரவதிகள் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாத அதேவேளையில் பாகிஸ்தான் அதனை வரவேற்கும் வகையில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பது அரசியல் நோக்கங்களைக் கொண்ட ஒரு நடவடிக்கை என்றே கருதப்படுகின்றது. காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தம்மையும் உள்ளடக்கிய முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்பது தான் பாகிஸ்தானின் நிலைப்பாடு. இது இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்படவோ, பரிசீலனை செய்யப்படவோ முடியாத ஒரு கோரிக்கையாகத்தான் இருந்து வருகின்றது.

பாகிஸ்தானின் கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு, அடுத்த கட்டத்துக்குச் செல்வது சாத்தியமற்றது என்பது இந்தியாவுக்குத் தெரிந்ததுதான். காஷ்மீர் தீவிரவாத அமைப்புக்கள் அனேகமாக பாகிஸ்தான் விசுவாசிகளாகவே உள்ளன. தீவிரவாத அமைப்புக்களைப் பயன்படுத்தி இந்தியாவுடன் அவை ஒரு நிழல் யுத்தத்தையே நடத்தி வருவதாகவே கருதப்படுகின்றது. பாகிஸ்தானை முழுமையாகப் பகைத்துக்கொண்டு காஷ்மீரில் சமாதானத்தை ஏற்படுத்துவது சாத்தியமற்றது என்பது இந்திய அரசுக்குத் தெரியாததல்ல. இந்தியாவின் தயக்கத்துக்கு அதுதான் காரணம்.

யுத்த நிறுத்தத்தை சமாதானப் பேச்சுக்களுக்கான பாதையாக மாற்றிக் கொள்வதற்கு இந்திய அரசாங்கமும் காஷ்மீர் தீவிரவாதத் தலைவர்கள் சிலரும் நேருக்கு நேர் பேச்சுக்களை நடத்துவது அவசியம் என வலியுறுத்துகின்றார்- அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தானில் பிறந்தவரான மன்சூர் இஜாஸ். அமெரிக்காவில் காஷ்மீரின் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளராகக் கருதப்படும் இவர், இவ்வாறான பேச்சுவார்த்தை ஒன்றில் கலந்து கொள்ளும் போது, காஷ்மீர் தீவிரவாதிகள் பாகிஸ்தான் சென்று அந்நாட்டு அரசுடன் ஆலோசனை நடத்தித் திரும்புவதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றார். இது இந்தியாவால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு கோரிக்கை என்பதில் சந்தேகமில்லை. காஷ்மீர் தொடர்பான எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தான் சம்பந்தப்படுவது தமது இறையாண்மைக்கு விடப்படும் ஒரு சவாலாகவே இந்திய அரசு கருதுகின்றது.

**முத்தரப்புப் பேச்சுக்களை வலியுறுத்தும் பாகிஸ்தான்.**

யுத்த நிறுத்தம் முடிவுக்கு வருவதற்கு முன்பாக காஷ்மீரின் எதிர்காலம் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பித்துவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் அப்துல் சத்தார். ரம்ழான் காலத்தில் காஷ்மீர் தீவிரவாதத் தலைவர்கள் பாகிஸ்தான் வந்து ஆலோசனைகளை நடத்துவதற்கான அனுமதியை இந்திய அரசு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை முன்வைத்திருக்கின்றார். இது இந்தியா- பாகிஸ்தான்- காஷ்மீர் தீவிரவாதிகள் என்ற மூன்று தரப்பையும் உள்ளடக்கிய பேச்சுக்களுக்கு வழிவகுப்பதாக அமைய வேண்டும் என்றும் திட்டவட்டமான முறையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

பாகிஸ்தானின் இந்த நிலைப்பாடு இந்தியாவுக்கு எரிச்சலூட்டக் கூடியதாகவே இருக்கும். காஷ்மீரிலுள்ள அனைத்து தீவிரவாத அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தாம் திட்டமிட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் கூறுவது போல முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் என்பது அர்த்தமற்றது என நிராகரிக்கின்றது இந்திய அரசு. இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ரமிந்தர் சிங் ஜாஸல் இது தொடர்பாக வாஜ்பாய் அரசு திட்டவட்டமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை வலியுறுத்தியுருத்துகின்றார். இந்தியாவைப் பொறுத்த வரையில் பாகிஸ்தானையும் இப் பேச்சுக்களில் சம்பந்தப்படுத்துவது என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது.

காஷ்மீர் தொடர்பான பேச்சுக்களைப் பொறுத்த வரையில் முத்தரப்புப் பேச்சுக்கள் தான் அவசியம் என்பதை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் செவ்வாய்க் கிழமை மீண்டும் தெரிவித்திருக்கின்றார்கள். காஷ்மீரின் மிகவும் சக்திவாய்ந்த தீவிரவாத அமைப்பொன்று இவ்வருட ஆரம்பத்தில் யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்திருந்த போதிலும், பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் முறிவடைவதற்கு "பாகிஸ்தான்" தான் அப்போதும் காரணமாகியது. காஷ்மீர் தொடர்பான எந்தப் பேச்சுக்களிலும் பாகிஸ்தானும் சம்பந்தப்பட வேண்டும் என தீவிரவாதிகள் வலியுறுத்த அதனை இந்தியா மறுக்க யுத்த நிறுத்தமும் முறிவடைந்தது பழைய கதை! இதே கதைதான் இனியும் தொடரப் போகின்றதா?

**இந்திய பிரதமர் வாஜ்பாய் வெளியிட்ட நம்பிக்கை!**

காஷ்மீர் யுத்த நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட போது, இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் காணப்பட்ட நம்பிக்கைகள் இப்போது சிதைவடைந்து செல்வதையே காணக்கூடியதாக இருக்கின்றது. "போர் நிறுத்தத்தைச் செய்வதற்கு இந்தியா முன்வந்துள்ளமை முழுமையான வரவேற்பைப் பெறுவதுடன் காஷ்மீரில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும் அமையும்" என்பது தான் வாஜ்பாயின் கருத்தாக இருந்தது. காஷ்மீரில் வன்முறைகள் ஓயும் என்பதும்- எல்லைப் பகுதியூடாகவும், சர்வதேச எல்லைகளுக்குள்ளாலும் ஊடுருவல்கள் இதன் மூலம் தடுத்து நிறுத்தப்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.



காஷ்மீரின் ஒரு பகுதி இந்தியாவிடம் உள்ள அதே வேளையில் சுமார் மூன்றில் ஒரு பகுதி பாகிஸ் தானின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கின்றது. காஷ்மீர் பகுதிக்குள் ஆயுதபாணிகளான தீவிரவாதிகள் பாகிஸ்தான் அனுப்பிவருவதாக இந்தியா நீண்ட காலமாகவே குற்றஞ்சாட்டி வருகின்றது. இக்குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்து வரும் அதே வேளையில்- காஷ்மீர் தீவிரவாதிகளின் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை பாகிஸ்தான் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. காஷ்மீர் கிளர்ச்சிக் குழுக்களில் பெரும்பாலானவை பாகிஸ்தானையே தமது பின்தளமாகவும், தலைமையகமாகவும் கொண்டுள்ளன. அண்மையில் நடைபெற்ற கார்கில் போர் உட்பட இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான நான்கு எல்லை யுத்தங்களுக்கு காஷ்மீர் பிரச்சினையே காரணமாக இருந்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்கள் அனைத்தையும் தாம் நிறுத்திவைத்திருப்பதாக இந்தியா அறிவித்திருக்கின்ற போதிலும், தீவிரவாதிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையிலேயே படையினர் வைக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. படையினர் எதிர்பார்த்தது போல செவ்வாய் கிழமை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலானது இந்திய அரசின் போர் நிறுத்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தான் வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆனன்நாக் மாவட்டத்தில் தீவிரவாதிகள் இருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதல் சமாதானத்துக்காக இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு கிடைத்த பலத்த ஒரு அடி என்றே கருதப்படுகின்றது.

பாகிஸ்தானின் ஆதரவுடன் செயற்படும் சிறிய குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். யுத்த நிறுத்தம் வெற்றி பெற வேண்டுமானால் பேச்சுக்களில் பாகிஸ்தானும் பங்கேற்க வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை இந்தியாவுக்குக் கொடுப்பதுதான் இக்குழுவினரின் நோக்கமா அல்லது சமாதான முயற்சிகள் எதனையும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை இவர்கள் உணர்த்தியுள்ளார்களா என்பது தெரியவில்லை.

பெரும்பாலான தீவிரவாத அமைப்புக்கள் இந்தியாவின் நிலைப்பாட்டை எதிர்க்கின்ற போதிலும் காஷ்மீர் கூட்டமைப்பான ஹரியத் மாநாடு அமைப்பு இந்தியா அரசின் அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. டில்லியுடன் பேச்சுக்கு தாம் தயார் எனவும் இவ்வமைப்பு அறிவித்திருக்கின்றது. ஆனால், இவர்களது அழைப்பு மட்டும் சமாதானத்தை கொண்டு வருவதற்கு உதவப்போவதில்லை என்பதே உண்மை நிலையாகும்!

ரதன்

சிறு கதை

# அரவிந்தன்

விமல் குழந்தைவேல்



விசயம் கேள்விப்பட்டு ஒருமணி நேரத்திலேயே நான் அரவிந்தன் வீட்டில் இருந்திருக்க வேண்டும். ஆனால் விசயம் கேள்விப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் கடந்து நான் இன்னும் அசையாமல் இருந்த இடத்திலேயே இருக்கிறேன்.

இன்று பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்பாமல் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போக ஆயத்தமாகி விட்ட என் மனைவி என்னிடம் எத்தனையோ தடவை கேட்டு விட்டாள், இப்படியே யோசிச்சுக் கொண்டிருந்தால் எப்படிப்பா... நீங்களெல்லோ முதல் ஆளாய் நிற்க வேணும்... என்று.

என் மனைவிக்குத் தெரியும் இன்றைய பிள்ளைகளின் ஒரு நாள் பள்ளிக்கூடத்தை விட குடும்பத்தோடு அரவிந்தன் வீட்டுக்கு போவதே முக்கியமென்று. என்னைத் திருமணம் செய்வதற்கு முன்பே எனக்கும் அரவிந்தனுக்கு மிடையிலிருந்த நட்பு எப்படிப் பட்டதென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்.

நானும் அவளும் அரவிந்தனும் ஒரே வகுப்பில் தான் படித்தோம். நானும் அவளும் படித்த காலத்தில் நாங்கள் ஒருவரையொருவர் விரும்புகிற நேரத்தில் எனக்கும் அவளுக்கு மிடையில் காதல் தூது போனவனும் காதல் கடிதம் கொடுக்கல் வாங்கல் செய்தவனும் எங்கள் இரு வீட்டாருக்கும் தெரியாமல் எங்களை சந்திக்க வைத்தவனும் அரவிந்தன் தான்.

நான் கொடுத்தனுப்பிய முதல் காதல் கடிதத்தை கொடுத்த போது பயந்து நடுங்கியதை எங்களுக்கு திருமணம் முடிந்து மூன்று பிள்ளைகள் பிறந்த பின்பும் என் மனைவியிடம் சொல்லி அவளை கேலி செய்து சிரிப்பான் அரவிந்தன். நான் மட்டுமல்ல என் மனைவியும் அரவிந்தனை இது வரை தன் வகுப்பு தோழனாகவே நினைத்து பழகி வந்தாள். அப்படிப்பட்ட அரவிந்தன் இன்று...

எங்களுக்கு திருமணம் நடந்து இரண்டு வருடங்களிலேயே அரவிந்தனுக்கும் நடந்தது. காதல் திருமணம் இல்லையென்றாலும் அரவிந்தனின் மனைவியும் அவனை காதலித்தவன் போல் தான் அவனோடும் அவனின் ரசனைகளோடும் ஒத்துப் போனாள். இதனால் எனக்கு அரவிந்தன் சினேகிதன் போல் அவனின் மனைவி என் மனைவிக்குச் சினேகிதியானாள்.

அரவிந்தனுக்கும் என்னைப்போல மூன்று குழந்தைகள் தான். மூன்றும் இலங்கையில் இருக்கும்போது தான் பிறந்தது. ஊரில் இருக்கும் போது அரவிந்தன் குடும்பமும் என் குடும்பமும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளுவோம். சில குடும்பப் பிரச்சனைகள் அதற்கான தீர்வுகள் போன்றவற்றை நாங்கள் ஒருவருக்கொருவர் பேசி கலந்தாலோசித்து முடிவெடுத்து நடந்து கொள்ளுமளவுக்கு எங்களின் இரு குடும்ப உறவுகளும் எனக்கும் அரவிந்தனுக்குமிடையில் இருந்த நட்பும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. எவ்வளவு தான் என்னோடு நெருங்கி பழகியிருந்தாலும் இதுவரையில் அவன் என்னிடம் ஒரு சதம் கூட கடன் என்று கேட்டு கடமைப்பட்டவனில்லை. ஆனால் அவனிடத்தில் நான் பலமுறை கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கொரு கஷ்டமென்று கடன் கேட்டால் தன்னிடம் இல்லாவிட்டாலும் யாரிடமாவது கடன்பட்டாவது எனக்கு உதவும் அவன் ஒரு பொழுதேனும் என்னிடம் கடன் கேட்க மாட்டான் இதை நினைத்து அவனில் நான் சிலவேளை பொறாமையும் இவனை என்னிடம் எப்படியாவது கடன்பட வைக்க வேண்டும் என்ற சபதமும் எடுத்து அதிலெல்லாம் என்னை எத்தனையோ தடவை தோற்கடித்து விட்டவன் அரவிந்தன். அப்படிப்பட்டவன் இன்று...

அரவிந்தன் என் நண்பனாகக் கிடைப்பதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவன் நல்லவன். நாணயமானவன். கண்ணியமானவன். எப்படிப்பட்ட துரோகம் செய்தவர்களையும் கடிந்து பேசி மற்றவர்களின் மனதை புண்பட செய்ய தெரியாதவன். ஆனால் இதை செய்யக்கூடாது, இனி இவர்களோடு எந்த தொடர்பும் வைத்திருக்கக்கூடாதென்று அவன் தனக்குள் ஒருமுடிவெடுத்து விட்டானென்றால் அவனை அதன்பின்பு எவராலும் மாற்ற முயற்சிக்க முடியாத உறுதியான வைரமனம் கொண்டவன் அரவிந்தன். அப்படிப் பட்டவன் இன்று...

நான் குடும்பத்தோடு லண்டனுக்கு வந்து ஆறேழு வருடங்களுக்கு பின்புதான் அரவிந்தன் தன் பிள்ளைகளுடன் லண்டன் வந்து சேர்ந்தான்.

கொழும்பில் நல்ல உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தவனை அப்போது ஆட்சிக்கு வந்த புதிய கட்சியின் நடவடிக்கைகள் அரவிந்தனை வெளிநாட்டுக்கு புலம் பெயர வைத்து விட்டது.

அரவிந்தன் லண்டன் வந்து சேர்ந்த போது அவனின் மூத்த மகளுக்கு பன்னிரண்டு வயது. ஊரில் இருக்கும்போது என்தோழில் தொங்கிவிளையாடியவள் என் கைபிடித்து, நடைபழகியவள், என்னைத் தெரியுமா உனக்கு... என்று நான் அரவிந்தனின் மூத்த மகளிடம் கேட்டதும் அவள் தகப்பனின் முதுகுக்குப் பின்னால் வெட்கப்பட்டு ஒழிந்து கொண்டதும் எனக்கு இப்போது நினைவிருக்கின்றது.

லண்டன் வந்ததும் பாடசாலையில் சேர்ந்து விட்ட தன் மூன்று பிள்ளைகளும் இந்த நாட்டு பழக்க வழக்கத்தோடு ஆங்கிலபாஷையோடும் நின்று பிடிக்க முடியாமல் தினம் தினம் அழுது கொண்டு வருவதையும் அதிலும் அவனின் மூத்தமகள், இந்த நாடேவேண்டாமப்பா என்றும், எங்களையெல்லாம் ஊருக்கே கூட்டிக்கொண்டு போங்கோ என்றும் அழுவதாயும் அவன் சொன்ன போது எனது பிள்ளைகளை அரவிந்தனின் மூன்று பிள்ளைகளோடும் தொடர்ந்து மூன்று நாள் அவனின் வீட்டிலேயே தங்கவிட்ட பின்புதான் அரவிந்தனின் பிள்ளைகள் தங்கள் மனநிலையை மாற்ற முடிந்தது.

இப்போது அரவிந்தன் குடும்பம் லண்டன் வந்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டது. அவன் லண்டன் வந்து ஐந்து வருடங்களுக்கு நான் இருந்த கிழக்கு லண்டனில் தான் அவனும் இருந்தான். அதுவும் நான் இருந்த வீட்டிற்கு நடைதூரத்தில் தான் அவனின் வீடும் இருந்தது. அப்போதெல்லாம் ஒரு வாரத்துக்கு ஒருவர் வீடென்று நாங்கள் இருவரும் மாறிமாறி போய்வந்து கொண்டிருந்தோம். எனது வேலையில் திடீரென எனக்குக் கிடைத்த பதவி உயர்வும் அதனோடு சேர்ந்த இடமாற்றமும் காரணமாக நான் லண்டனுக்கு வெளியில் வீடொன்று வாங்கிக் கொண்டு சென்றதன் பின் நானும் அரவிந்தனும் சந்திப்பதென்பது மாதம் ஒருமுறையென்றே ஆகியிருந்தது.

கடந்த ஆறுமாதத்தில் நான் குடும்பத்துடன் பலதடவை அவனின் வீட்டுக்குப் போயும் அதன் பின்பு ஒரு தடவையேனும் அவன் என் வீட்டுக்கு வராததால் என் மனைவியின் கருத்துக்கு செவிமடுத்து நானும் அவனின் வீட்டுக்கு போவதை நிறுத்தியிருந்தேன். இதனால் எங்களுக்குள்ளிருந்த நட்பில் எந்தவித விரிசலும் ஏற்படவில்லை என்பதை எங்களுக்கிடையில் இருந்த தொலைபேசி தொடர்பு உணர்த்திக் கொண்டே தான் இருந்தது. அரவிந்தன் எப்போதும் எந்த சந்தர்ப்பத்திலும் யாருக்காகவும் எங்களின் நட்பை விட்டுக் கொடுக்க மாட்டான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இது நாள் வரையில் எனக்கு நண்பனாயிருந்த அரவிந்தன் இறந்து விட்டானாம்.

அரவிந்தன் இறந்து விட்டானாம். என்னால் நம்பமுடியவில்லை. நான் எப்படி நம்புவேன்.

என் பிள்ளைகளுக்கு முன்பு என் மனைவிக்கு முன்பு என் வாழ்வில் என்னோடு சேர்ந்து பழகிய என் நண்பன் இறந்து விட்டானாம் என்ற செய்தியை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. இன்று அதிகாலை சிணுங்கிய தொலைபேசி என் மனைவியிடம் அந்த செய்தியைத்தான் சொன்னதாம். அரவிந்தன் இறந்து விட்டானாம். என்னால் நம்பவே முடியவில்லை.

காலையில் நான்கு மணி இருக்கும். கீழே தொலைபேசி மணி அடிக்கின்றதென்று போய் பேசிவிட்டு வந்த என் மனைவி வெளிச்சத்தை அணைக்காமல் எனது அருகில் கனநேரமாய் இருந்த போது நான் தான் கேட்டேன் என்ன விசயம் யார் ரெலிபோன் பண்ணியதென்று. மீண்டும் மௌனமாகவே இருந்து விட்டு சொன்னாள். என்ன கொடுமையிது. அரவிந்தன் இறந்துவிட்டாராம்.

என் மனைவி சொன்னபோது ஏன் காதுகளையே நான் நம்பவில்லை. அரவிந்தன் இறந்து விட்டானா?... ஏன்?... எப்படி? நீ இப்படியொரு செய்தியை எப்படி என்னிடம் சொல்லுகின்றாய்... என்பது போல் என்மனைவியை பார்த்தேன்.

ஹார்ட் அர்ட்டாக்காம்... என்று விட்டு மேலும் அவளால் எதுவும் பேசமுடியாதவளாய் கீழே போய் தெரிந்தவர்களுக்கெல்லாம் தொலைபேசி மூலம் அரவிந்தன் இறந்த செய்தியை தெரிவித்துக் கொண்டிருந்தாள்.

விடிந்து எட்டு மணியாகி விட்டது. விசயம் கேள்விப்பட்டு நான்குமணி நேரமாகி விட்டது. பிள்ளைகளைப் பள்ளிக் கூடம் போக வேண்டாமென்று விட்டு அவர்களையும் கூட்டிக்கொண்டு அரவிந்தன் வீட்டுக்குப் போவதற்காக எனக்காக என் மனைவி காத்திருக்கின்றாள். நான் மட்டும் இன்னும் தயாராகவில்லை. அரவிந்தன் இல்லாத அந்த வீட்டுக்கு போக நான் விரும்பவில்லை. அவனில்லாத நிலையில் அவனின் மனைவியை எதிர்கொண்டு அவனின் கோலத்தைக் காண என் மனம் சம்மதிக்கவில்லை.

ஆடு... மாடு... கோழி போன்றவைகளும் உயிருள்ளவைகள் தான். அன்பாய் வளர்க்கும் அவைகளையே அடித்துண்ணும் மனிதன் தன்னில் ஒருவன் இறந்தால் மட்டும் அழுது புரண்டு ஒப்பாரி வைக்கின்றானே அது ஏன்?... சாகப்பிறந்தது தான் மானிடம் என்று தெரிந்திருந்தும் தன்னில் சகமனிதன் இறந்தால் மட்டும் ஏன் இந்த சமுதாயம் தாங்க முடியாமல் தவிக்கின்றது என்றெல்லாம் இதுவரையில் எனக்குள் இருந்த கேள்விக்கெல்லாம் அரவிந்தன் இறந்து விட்டானாம் என்ற செய்தி பதில் சொல்லி விட்டது.

இனியும் இருந்து பிரயோசனம் இல்லை வாங்க போகலாம் என்று என்னையும் பிள்ளைகளையும் கூட்டிச் சென்று காருக்குள் புகுத்தி விட்டு தானே காரை ஓட்டிச் செல்லுகின்றாள் என் மனைவி. காற்றிறக்கப்பட்ட பலூனைப் போல நான் இருக்கையில் கிடக்கின்றேன். என் சோகத்தில் பங்கு கொள்வது போல என் பிள்ளைகள் பின்னால் மௌனமாக இருக்கின்றார்கள். அரவிந்தன் அங்கிள் என்றால் அவர்களுக்கு நல்ல விருப்பம். அவனை யாருக்குத் தான் பிடிக்காது. குழந்தை போன்ற அவனின் இதயத்தின் மூச்சு நின்று விடக் கூடிய அளவுக்கு அவனின் நெஞ்சில் ஏறிநின்ற சுமை எதுவாக இருக்கும்.

அரவிந்தனை நான் கடைசியாகப் பார்த்தது போன மாதத்தின் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தான். எனது வீட்டுக்கு வந்து பலமாதங்களாகியும் ரெலிபோன் செய்வதையும் நிறுத்திக் கொண்ட அவன் போனமாதம் திடீரென்று போன் பண்ணி டேய் கோபாலா உன்னைப் பார்க்க வேணும் போல இருக்குடா குறை நினைக்காம ஒருக்கா வந்திட்டுப் போவன்டா... என்று சொன்னவுடன் முக்கியமான கல்யாண வீடொன்றுக்கு போக இருந்த அந்த ஞாயிற்றுக் கிழமையில் கல்யாண வீட்டுக்கு போகாமல் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு அரவிந்தன் வீட்டுக்குப் போனேன்.

என்னைக் கண்டதும் பலவருடங்கள் பிரிந்திருந்தவர்கள் போல ஓடிவந்து கட்டித் தழுவினான். என் மனைவி அரவிந்தன் மனைவியுடன் குசினிக்குள் சென்றுவிட பிள்ளைகள்மேலே போக நானும் அரவிந்தனும் நடு ஹாலுக்குள் தனித்திருந்தோம். வாவன் வெளியில சும்மா நடந்து விட்டு வருவம்... என்னைக் கூட்டிக் கொண்டு அரவிந்தன் கனதூரம் நடந்தான். போனபோதும் வந்த போதும் அரவிந்தன் நிறைய பேசினான். சில இடங்களில் அவன் என்ன சொல்ல நினைக்கின்றான் என்று புரியாமலும் ஏதோ சொல்ல எத்தனிக்கின்றான் என்பதும் அவனின் பேச்சிலிருந்து என்னால் உணர முடிந்தது.

டேய் கோபாலா... ஏன் பிறந்தேன் என்று யோசிக்கிறேனடா... என்றான். திரும்பவும் பிறக்கவேணும் திரும்பவும் நாம் ஒன்றாக படிக்கவேணும் போல இருக்குடா என்றான். நான் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்கள் கலங்கியது. என் கைகளைப் பிடித்து டேய் கோபாலா நான் ஏதும் பிழை செய்திருந்தால் அவைகளை மனசில வைச்சுக் கொள்ளாதேடா... என்றான். அவனின் பிடியிலிருந்து என்கைகளை விடுவித்துக் கொண்டு ஏண்டா அரவிந்தன் உனக்கு ஏதும் பிரச்சனையா என்றேன். அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். கண்களில் நீர் தேங்கி நின்றது. ஏனோ தெரியில்லைடா உன்னைப் பார்க்க வேணும் போலவும் உன்னோட இருந்து சாப்பிட வேணும் போலவும் இருக்குடா... என்றான். அன்றிரவு அவன் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டு வெளியில் வந்தபோது பின்னால் வந்த அரவிந்தன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான்.

திரும்பி வரும்போது அரவிந்தன் பற்றி எதுவும் என் மனைவியிடம் நான் எதுவும் பேசவில்லை. பிள்ளைகள் எல்லோரும் தூங்கிய பின்பு படுக்கையறையில் இருந்த என் மனைவி சொன்னாள்.

இந்த நாட்டுல பிறந்து வளர்ந்ததுகளெல்லாம் ஒழுங்கா இருக்கும் போது இடை நடுவில் வந்து இந்த பிள்ளைகள் மட்டும் ஏன் இப்படி நடக்குதுகளோ தெரியாது... என்ன சொல்லுகின்றாய் என்பது போல் எதுவும் புரியாமல் வெளிய போயிருந்த நேரம் அரவிந்தன்ட மனிசி என்னட்ட சொல்லி அழுதா...

அரவிந்தன்ட மூத்த மகளின்ட நடவடிக்கை கொஞ்சம் கூட சரியில்லையாம். ஆரோ ஒரு பெடியன விரும்புறன் எண்டு சொல்லிச்சிதாம். பெட்டை படிக்கிற நேரத்துல இதெல்லாம் கூடாதெண்டு தாயும் தகப்பனும் கண்டிச்சு சொல்லியிருக்கினம் போல., அடுத்த நாள் பள்ளிக்கூடம் போன பெட்டை திரும்பி வரயில்லையாம். அங்க இஞ்சையெண்டு தேடிப்

தொடர்ச்சி 18ம் பக்கம்

# வாசகர்களே இப்போது சிறந்த விமர்சகர்களாக எனக்குப், படுகின்றனர்.

## சுதாராஜ்

1970களில் எழுத்துலகிற்கு வந்தவர். இளமைக் கோலங்கள், பலாத்காரம், கொடுத்தல், ஒரு நாளில் மறைந்த இருமாலைப் பொழுதுகள், தெரியாத பக்கங்கள் இவரது ஆக்கங்கள்; தொகுதிகள், சாகித்ய மண்டலப் பரிசு, ஆனந்த விகடன் வைர விழாச் சிறுகதைப் பரிசு என கௌரவம் பெற்றவர். சிங்களத்தில் இவரது சிறுகதைத் தொகுதி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, "ராவய" பத்திரிகையால் பாராட்டப் பெற்றவர். மின் பொறியியலாளர், பலநாடுகளின் வாழ்வு அனுபவங்களை அறிந்தவர், உயிர்கள் யாவையும் நேசிக்கின்ற மானிடநேயமிக்க இவர் இப்போது சிறுவர் இலக்கியத்துக்கு அறிமுகமாகின்றர்.



**கடற்றுறைப் பொறியியலாளராகிய நீங்கள் இலக்கிய காரராக இருக்கிறீர்கள். தமிழில் ப. சிங்காரத்திற்கு அடுத்து நீங்களே இத்துறை சார்ந்தவர். உங்கள் இலக்கிய ஆர்வத்திற்கு காரணம் என்ன?**

தொழிற்றுறைக்கும் இலக்கிய ஆர்வத்துக்கும் ஏதும் தொடர்பில்லை என்பதை முதலிற் குறிப்பிட வேண்டும். ஆனால் தொழிற்றுறையிற் பெறும் அனுபவங்கள் ஓர் இலக்கியகாரனின் கையால் சிறந்த இலக்கியப் படைப்புக் களாக மிளிர முடியும். நான் மின் பொறியியலாளன். சந்தர்ப்ப வசமாக பாரிய கப்பலிற் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டியது. அதனாற் தான் கடல் வாழ்க்கை அனுபங்களும் கிட்டியது.

எனது இலக்கிய ஆர்வம் மிக இளம் வயதில் மாவைப் பருவத்திலேயே ஏற்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல



வேண்டும். அப்போது நான் யாழ் இந்துக் கல்லூரியிற் கற்றுக் கொண்டிருந்தேன். ஆசிரியர் தி. இ. மகாதேவி (தேவன்- யாழ்ப்பாணம்) அவர்கள், கல்லூரி சஞ்சிகையொன்றில், மாற்றலாகி விலகிப் போகும் இன்னோர் ஆசிரியரைப் பற்றிய பிரியாவிடைக் கட்டுரையொன்று எழுதியிருந்தார். அதை வாசித்த போது அந்த எழுத்தின் ஸ்டைல் (நடை அல்லது பாணி) என் மனதைத் தொட்டு ஒருவித ரசனையைத் தந்தது ஞாபகமிருக்கிறது. அது தான் எழுத்தின்பால் உண்டான முதலாவது ஈர்ப்பு என நினைக்கிறேன். எழுத்து நடையால் கவரப்பட்டதில் தொடர்ந்து வாசிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. பல சிறுவர் கதை ஏதாவது படிப்பினை அல்லது நீதிபோதனைகள் இருக்கும். அவைகளும் என் மனதைப் பாதித்துப் பண்படுத்தின. அவற்றின் வளர்ச்சிப்படி தான் எழுத்தாளனாகிய இன்றைய நிலை.

**உங்கள் படைப்பு மிக மென்மையாக, கூடிய வரை குடும்பத் தளம் சார்ந்த தாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?**

மென்மை என்பது இனிமையானது. மென்மை என்பது அரவணைத்து ஆதரிப்பது. மென்மை என்பது எல்லோரையும் எல்லாவற்றையும் நேசிப்பது. மென்மை என்பது விட்டுக்

> "மென்மை என்பது இனிமையானது, மென்மை என்பது அரவணைத்து ஆதரிப்பது, மென்மை என்பது எல்லோரையும் எல்லாவற்றையும் நேசிப்பது, மென்மை என்பது விட்டுக் கொடுப்பது. நாங்களெல்லாம் இந்த மென்மையுணர்வுக்கு மதிப்பளித்துக் கடைப்பிடித்தால் அது இனிமையான குடும்ப வாழ்வுக்கு அடிநாதமாக அமையும்"

கொடுப்பது. நாங்களெல்லாம் இந்த மென்மையுணர்வுக்கு மதிப்பளித்துக் கடைப்பிடித்தால், அது இனிமையான குடும்பவாழ்வுக்கு அடி நாதமாக அமையும். மனிதராகப் பிறந்த அனைவருமே ஏதோ ஒரு வகையில் குடும்ப வாழ்க்கைக்கு உட்பட்டவர்கள் தான். ஆனால், துரதிஷ்டவசமாக ஒவ்வொருவரினதும் சுயநலமான செயற்பாடு களினால் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்கள் சிதைவுகள் ஏற்படுகின்றன. குடும்பங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் போட்டி, பொறாமை, குரோதங்களை வளர்த்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாயிருக்கிறது. இது எனக்குக் கவலையளிக்கிறது. குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் வாழ்ந்து விட்டுப் போக வேண்டிய இந்த வாழ்க்கையை, ஏன் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் வாழமுடியாது என, சிந்திக்கிறேன். இதனாற்தான் எனது எழுத்துக்களில் மென்மையுணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்; குடும்பத்தளம் சார்ந்தும் எழுதுகிறேன். ஆனால் இந்த எல்லைக்கு வெளியேயும் என் எழுத்து விரிவடையும். எனது கதைகளைக் கூட அத்தாவது ,எழுத்து நடையை கூடியவரை மென்மையாக (எளிமையாக) கையாள்வதையே விரும்புகிறேன். எழுதப்படும் கதைகள் பலதரப்பட்ட வாசகர் மட்டத்தையும் சென்றடைவதற்கு இது முக்கியம் எனக் கருதுகிறேன். இதை விட பாரதி எமக்கு வகுத்த "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்பதை நான் நம்புகிறேன்.

**1971ல் இலக்கிய உலகில் பிரவேசித்தீர்கள். இதுவரை ஒரு நாவல், நான்கு சிறுகதைத் தொகுதிகளின் சொந்தக்காரர் ஆகிவிட்டீர்கள். உங்களின் இலக்கியக் கோட்பாடு?**

இக்கேள்விக்குரிய பதிலும் அநேகமாக இரண்டாவது கேள்வியிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. மற்றப்படி, உண்மையான இலக்கிய காரன் எவனுக்குமே முற்போக்கான கொள்கைகள் கோட்பாடுகளைத் தான் கொண்டிருப்பான். மற்றவர்களது துன்பங்களைக் கண்டு இரங்குதல் ஒடுக்கு முறைகளை மறுதலித்தல். கொடுமைகளைத் தாங்காது பொங்குதல், மற்றும் இவை போன்ற மன உணர்வுகளை வாசகர்களுக்கு உணர்வு பூர்வமாக புரியவைக்கும் (அல்லது தொற்ற வைக்கும்) முயற்சி தான் எனது எழுத்துக்கள்.

எனது ஒரு சிறுகதைத் தொகுப்புக்கு "கொடுத்தல்" எனப் பெயரிட்டேன். இப்படி ஒரு பெயரை வைத்த காரணம் என்ன என்று அப்போது பலர் விமர்சித்தார்கள். ஆனால் "கொடுத்தல்" என்ற அந்த சொல்லில் உள்ள உன்னதமான அர்த்தம் எவ்வளவு மகத்தானது? அதற்கு ஓர் இலக்கிய அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று கருதியே அவ்வாறு பெயரிட்டதற்குக் காரணம். பொதுவாகச் சொல்வதானால் மனித நேயம், பிராணிகளிடம் பரிவு, சுற்றுச் சூழல் நேசிப்பு ஆகியவற்றை எனது இலக்கியக் கோட்பாடாகக் கொள்ளலாம்.

**உங்களைப் பாதித்த, அல்லது வியக்கவைத்த படைப்பாளிகள் யார்?**

புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி மற்றும் ஆரம்ப கால ஜெயகாந்தன் ஆகியோர். அத்துடன் அவ்வப்போது சில அற்புதமான கதைகளைத் தரும் ஈழத்து எழுத்தாளர்களையும் இந்திய எழுத்தாளர் களையும் விரும்பி வாசிக்கிறேன். ஆனால் என்னை எப்போதும் பாதித்தது, புதிது புதிதாக எழுதச் செய்பவன் மகாகவி பாரதி தான். பாரதியின் எழுத்து எக்காலத்திற்கும் தமிழுக்குப் புதுமை தரும்.

**இலங்கையிலுள்ள திறனாய்வுப் போக்குப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

ஒரு காலத்தில் பேராசிரியர் கைலாசபதியின் நவீன காலத்திறனாய்வு முறையில் தமிழுலகு முழுவதும் மிக மாற்றங்கள் ஏற்பட்டன. அவரை பின் பற்றியும் விரிவுபடுத்தியும் புதிய விமர்சகர்கள் உருவானார்கள், இப்போது அந்த நிலை இல்லையென்று பல படைப்பாளிகள் கூறுவதை நான் ஒத்துக் கொள்கிறேன். இப்போதைய திறனாய்வுகாரர் தமக்கு வேண்டியவர்களைப் பற்றி படிக்காமலே சிறந்த படைப்பாளிகள் எனக் குறிப்பிடுவதையும், விருதுகள் பெறத் துணை போவதையும் காண முடிகிறது. இது போலவே திட்டமிட்டே தரமான படைப்பாளிகள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றனர். குழு மனப்பான்மையோடு படைப்பாளிகள் புகழ்ப்படுவது அருவருப்பாக உள்ளது. இன்னும் ஒரு வேடிக்கையென்ன வென்றால் சிறுகதை, கவிதைகள் எழுதத் தொடங்கி அது கைவராமற் போனவர்களே இன்று விமர்சகர்களாய் முடி சூடி இராச்சியம் நடத்துகின்றனர்.

என்னை ஒருவர் முழுமையாகப் படித்து விமர்சித்தால் அதை நான் ஏற்பேன். இல்லையென்றால் நான் அதைக் கருத்தில் எடுக்க மாட்டேன். எனது வாசகர்களே இப்போது சிறந்த விமர்சகர்களாக எனக்குப் படுகின்றனர்.

**என்ன இலக்கியக் கனவு; திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?**

குறிப்பிடத்தக்க சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். இனி நாவற் துறையில் சற்று கவனம் செலுத்த விரும்புகிறேன். அத்துடன் சிறுவர் இலக்கியம், இளைஞர் இலக்கியம் போன்றவற்றில் ஈடுபடும் எண்ணம் உள்ளது. நல்ல நூல்களை வெளியிடும் நோக்கத்தில் ஒரு பதிப்பகத்தை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளேன். இதன் மூலம் நூல் வெளியீட்டையும், புத்தக கலாச்சாரப் புதுமைகளையும் என்னாலான முறையில் இங்கு சிறப்பாகச் சாதிக்க விரும்புகிறேன்.

**நேர்காணல் -**
செ. யோகநாதன்
த. நடராசா




இந்திராணியின் ஒடிசலான தேகத்தில் நடுக்கம் ஊறிற்று. ரஞ்சனின் முகத்தைப் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றாள். மழுமழுப்பான கன்னத்தை வருடியபடி அவளை ஏறிட்டான் ரஞ்சன். மெல்ல மெல்லக் கோபம் வெளிப்பட்டது முகத்தில்.

"இன்றைக்கு யாரெல்லாம் வேலைக்கு வரேல்லை?"

குரல் அதட்டிற்று.

பதிலைச் சொன்னாள்.

அவளை உற்றுப் பார்த்தான் ரஞ்சன்.

"மாலினி எத்தனை நாளாக வேலைக்கு வரேல்லை..."

"இன்றையோடை ஏழுநாள் சேர்..."

"ஏன் வேலைக்கு வரேல்லை?

"சுகமில்லை சேர்..."

"உனக்கு எப்படித் தெரியும்..."

"இங்கை உள்ளவங்க ஆஸ்பத்திரியிலை போய்ப் பார்த்தாங்க சேர்..."

"நீ போய்ப் பார்த்தியா..."

"இல்லை.." குரலில் மேலும் கடுமை சேர, "ஏன்?" என்று கேட்டான்,

மௌனமாக நின்றாள் இந்திராணி.

"சொல்லு?"

"போகமுடியேல்லை சேர்..."

"குமாரோடை பொழுதைக் கழிச்சியா?"

அதிர்ந்து போனாள் அவள். உடலில் வேர்வை துளிர்ப்பதை உணர்ந்தாள். பதற்றமும் கோபமும் வெளிப்படாமல் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

"என்ன?"

"வீட்டிலை நிறைய வேலை இருந்தது. துணி தோய்க்க, வீடு துப்புரவாக்க ஒரே ஒரு நாள்..."

அவள் வார்த்தைகளை தன் சத்தத்தினால் முறித்தான்,

"வாயை மூடு... எனக்கு எல்லாந் தெரியும்..."

"இங்கை வேலை செய்கிற வங்க மூன்று நாட்களுக்கு மேல் வராமல் நின்றால் சரியான காரணங்காட்டி கடிதம் எழுத வேண்டும். கடிதம் வராவிட்டால் நீ அவர்களின் வீட்டுக்குப் போய் நிலைமைகளைப் பார்த்துவர வேண்டும். இது உனக்குத் தெரியாதா?"

மௌனமாக தலை குனிந்த படி நின்றாள்.

"சொல்லு..."

"தெரியும் சேர்..."

"மாலினி எப்படியான ஆள்?"

"நன்றாக வேலை செய்வா... சுறு சுறுப்பானவ..."

"அழகான, உயரமான, பெரிய உதடுகள் உள்ள அந்தப் பெண் தானே..."

"ஓம் சேர்..."

"ஒன்று செய்யலாம்..."

பேசாமலே நின்றாள்.

"டீ இன்டர்வெல் நேரம், கம்பனி வேனிலை அவளைப் போய்ப் பார்த்து விட்டு வரலாம்..."

"சரி சேர்..."

"என்னோட அவள் வீடு தெரிந்த யாராவது வரவேணும்..."

"அவ ஆஸ்பத்திரியிலை இருக்கிறா சேர்..."

மேசையில் மெல்லத் தட்டியவாறே, "எதுக்கும் அவளின் வீடுதெரிந்த பெண்ணைக் கூட்டிக் கொண்டு வா..." என்றான்.

வேர்வை லேசாகத் துளிர்த்து, அறைக்கு வெளியே வர மண்டப உஷ்ணக் காற்றிலே தெப்பலாய் அவளை நனைத்த. கமலாவிடம் சந்தியாவை அங்கு அனுப்பும்படி கூறினாள். கணங்களிலே முகத்தில் அச்சம் நிறைய அவனெதிரே சந்தியா வந்து நின்றாள். பேச்சற்றவளை சைகையால் அழைத்தபடி இந்திராணி ரஞ்சனின் அறைக்குள்ளே சென்றாள்.

ரஞ்சன், சந்தியாவை விழுங்குவது போலப் பார்த்தான்.

"மாலினியைப் பார்த்தியா?"

"பார்த்தேன் சேர்..."

லேசான நிம்மதியோடு சொன்னாள் அவள்.

"எங்கை இருக்கிறா?"

"ஆஸ்பத்திரியிலை சேர்..."

மனதுள் சட்டென்று அரும்பிய ஏமாற்றம் ரஞ்சனின் முகத்திலே சட்டென்று தெரிந்தது. மறுகணமே இயல்பிற்குத் தன்னை மாற்றியவனாக அவளை உறுத்துப் பார்த்தான்.

"எப்போ நீ அவளைப் பார்த்தாய்?"

"காலையில் நான் தான் மாலினி அம்மாவுக்கு சாப்பாடு கொண்டு போய் ஆஸ்பத்திரியிலை கொடுத்தனான் சேர்..."

"அவளுக்கு என்ன?"

"வயிற்றிலை கட்டி சேர்..."

"அடடா..." என்றான் பாசாங்குத் தனமாக.

"இந்திராணி..."

"என்ன சேர்..."

"நீ ஒன்று செய்ய வேணும்"

அவள் கேள்வியோடு அவனைப் பார்த்தாள்.

"உன் கம்பெனி வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு, கம்பனி வேனிலை நீ ஆஸ்பத்திரிக்குப் போ... எக்கவுண்ட் செக்ஷனிலை அவ ஏதாவது அட்வான்ஸ் வாங்கி இருக்கிறாவா என்று பார்.

வாங்காவிட்டால் ஐநூறு ரூபா வவுச்சர் போட்டு எடுத்துக் கொண்டு போய் மாலினி கையிலை கொடு. காசுக்குப் பற்றுச் சீட்டு வாங்கிக் கொள். இனி அவள் வேலைக்கு வரக்கூடிய உடல் நிலையிலே இருக்கிறாளா என்று டொக்டரிடம் தெளிவாகக் கேட்டு அறி. நன்றாக வேலை செய்யக் கூடிய தொழிலாளியை எமது கம்பெனி இழக்கக் கூடாது..."

சொல்லி விட்டு சந்தியாவைப் போகும்படி சைகை செய்துவிட்டு இந்திராணியைப் பார்த்தான்.

"இந்திராணி..."



"சேர்..." பணிவோடு அவனைப் பார்த்தாள்.

"உனக்கு இப்போது வயது என்ன?"

"இந்த ஆவணிமாதம் முப்பத்திரெண்டு வயது தொடங்குது..."

"முப்பத்திரெண்டு..." உதட்டைப் பிதுக்கிக் கொண்டே தொடர்ந்தான் ரஞ்சன்" அப்போ இனி மேல் கல்யாணம் ஆகாமலே இருந்து விடப் போகிறாயா?"

இந்திராணியின் மனமும் கால்களும் வலித்தன. குளிரூட்டப்பட்ட அறையினுள் நின்றபோதும் உடல் எரிந்தது.

"சொல்லு?"

"கலியாணம் முடிக்காத இரண்டு அக்காமார் எனக்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு முடிந்தபிறகு தான் எனக்கு... ஆனால்..." வார்த்தைகளை இழுத்தவளைக் கேள்வியோடு பார்த்தான். பிறகு கிசுகிசுக்கிற குரலிலே, "பிறகு...?" என்றான்.

"எனக்கு கலியாணம் முடிக்கிற ஆசையே விட்டுப் போச்சுது சேர்..."

சொன்னவளை நையாண்டியாகப் பார்த்தான் ரஞ்சன்.

"குமாருக்கு என்ன வயது?"

வெறுமையாக அவனைப் பார்த்தாள் இந்திராணி. ரஞ்சனின் முகத்திலே ஓங்கிக் குத்த வேண்டும் போல மனதினுள்ளே மூர்க்கம் சீறிற்று. தேவையில்லாதவற்றிலே இவன் ஏன் தலையிட வேண்டும். கேட்கலாமா என நினைத்தாள். கேட்கலாம். அவனது கன்னத்திலே பளாரென்று அறைகிறாள் போலக் கேட்டுவிடலாம். ஆனால் நிர்வாகிகள் இவன் சொல்வதைத் தான் கேட்பார்கள். நம்புவார்கள். ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி வெகு இலகுவாக வீட்டுக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். பிறகு இன்னொரு கம்பெனிக்கு வேலை தேடி அலைந்திட வேண்டும். ரஞ்சன் அங்கும் தொலைபேசி மூலம் இல்லாதது பொல்லாததெல்லாம் சொல்லி, அங்கிருந்தும் அவளை வேலை பார்க்க விடாமல் துரத்தியடிக்கலாம்.

"சொல்லு. எத்தனை வயது?"

தன்னை சமாளித்தவாறே சொன்னாள்.

"இருபது வயது இருக்கும். சேர்..."

"அவனையே நீ கல்யாணம் முடிச்சால் என்ன?"

அதிர்ந்தாற் போல ரஞ்சனைப் பார்த்தாள் அவள். உதடுகள் அவளையறியாமலே நடுங்கின. நெற்றி வியர்வையைத் துடைத்தவாறே சுவரில் தொங்கவிடப்பட்ட படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சொல்லு..."

"நான் அவனோடு அந்த மாதிரி எல்லாம் பழகவில்லை சேர்..."

சட்டென்று மேசையில் அடித்தவாறே குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். கண்களில் அரும்பிய நீரை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். பிறகு மூக்கை உறிஞ்சியவாறே கண்டிக்கிறான் போல அவளைப் பார்தான்.

"நீ டிவைன் லவ்வர் என்ற படம் பார்த்திருக்கிறாயா?"

தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

"பார்த்தியா?"

ஏதோ சொல்ல முயன்றாள் அவள். ரஞ்சன் சைகையினாலே அவளைத் தடுத்து நிறுத்தினான். பிறகு வலிந்த புன்னகையோடு, "நான் அந்தப்படத்தை ஆறுமுறை பார்த்திருக்கிறேன், ஆனால் உன்னைப் போல அல்ல. தனியாகத்தான்..."

"சேர்..." நொருங்கி ஒலித்தது அவளது குரல். முகமெங்கும் வேர்வை பொங்கிற்று. தடுமாறினாள்.

"நீயும் குமாரும் டிவைன் லவ்வர் பார்த்துக் கொண்டிருந்த போது நானும் பின் இருக்கையில் இருந்தேன்..."

அவளுக்கு தலை சுற்றியது.

"நான் படத்தை எங்கே பார்த்தேன்... உங்கள் இரண்டு பேரையுந்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் படத்தில் வந்தவளை விட நீ வேகமாகத்தான் இருந்தாய். அவனை என்ன பாடுபடுத்தினாய்..."

அவளையே தின்னுகிறாற் போலப் பார்த்தான். அவளின் தடுமாற்றம் அவனை மிகவும் சந்தோஷப்படுத்திற்று. இருகை விரல்களையும் கோர்த்தபடியே அவற்றுள்ளே தனது முகவாயை அமுக்கியபடியயே அவள் மேல் வைத்த பார்வையை எடுக்காதிருந்தான். கால்களை வேகமாக ஆட்டினான்.

"இந்தக் காதல் வித்தையை எல்லாம் எங்கே கற்றுக் கொண்டாய்?"

மீண்டும் அவனது குரல் கிசுகிசுத்தது.

"உன்னை அடுத்தநாளே நான் கூப்பிட்டு எச்சரிக்க நினைத்தேன். பிறகு அந்த முடிவை மாற்றிக் கொண்டேன்... ஏன் என்று கேளேன்..."

அரைகுறையாகத் தலையை நிமிர்த்தினாள்.

"கேளேன்..."

தயங்கியவாறே கேட்டாள்.

"சொல்லுங்க சேர்..."

"நான் சொல்லுறதைக் கேட்பியா?"

மனம் பரபரத்தது. கேட்டாள்.

"கேளுங்க சேர்..."

"அவனுக்கு எதையெல்லாம் செய்தியோ; எனக்கும் அதைச் செய்ய வேணும்..."

கண்கள் விரிய பதறிப் போனாள் அவள். தொண்டை அடைத்தது. கைகால்கள் நடுங்கின. பார்வையில் கோபம் பொருமிற்று. அவளைக் கவனியாமலே தொடர்ந்தான் அவன்.

"பிறகு இங்கு உனக்கு எல்லாவசதியும், சம்பள உயர்வும் நான் செய்து தருவேன். அடுத்த வெள்ளிக்கிழமை "காமசூத்ரா" படம். அன்றைக்கே போகலாம்... என்ன?"

சொல்லிவிட்டு ஆசனத்தில் இருந்து எழுந்த அவன் சட்டென்று அவளை வாரித்தழுவினான். அவள் மூர்க்கமாக அவனை உதற மேசையோடு நிலைதடுமாறி விழுந்தான் அவன்.

"ராஸ்கல்" என்றவாறு வெளியே வந்த அவள், வெகுசாதாரணமாக வெளியே போனதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா.

தொடரும்...

# தமிழர் வரலாற்றின் அழியாத மனித உரிமை மீறல்கள்

நடா

மனித உரிமைகள் சாசனம் ஐ.நா சபையில் பிரகடனப்படுத்தப்பட்டு, 52 வருடங்கள் ஆகின்றன. மனித உரிமை பிரகடனம் சகல மக்களுக்குமான மனித உரிமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பிரகடனமானது ஐரோப்பாவில் நடந்த இரண்டு பாரிய போர்களின் போது மனித உயிர்கள் துன்பப்படுத்தப்பட்டதை அடுத்து இவ்வாறான நிலைமைகளின் போது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வரையப்பட்டதே இப்பிரகடன்மாகும்.

மனித உரிமைகளை மீறும் அரசுகள் மீது நடவடிக்கை எடுக்கும் அமைப்புகளுக்கு இப்பிரகடனம் ஆதரவு தெரிவிக்கின்றது மனித உரிமைகளை மீறும் அரசுகள் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் ஊடாக சர்வதேச சமுகத்தின் முன் ஒரு எச்சரிக்கையான தன்மையுடன் நடந்து கொள்கிறது. ஆனால் இலங்கையை பொறுத்தவரை அந்நியரின் வருகையோடு 1505ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல் இலங்கையின் சுதந்திரத்தின் பின் மேலும் மோசமடைந்தது. தமிழர்களின் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு மிக கொடூரப்படுத்தப்பட்டு வருகின்றனர். மனித உரிமை சாசனம் சரத்து 3ல் சகலரும் சுதந்திர்மாகவும் பாதுகாப்பாகவும் வாழ உரிமையுடையவர் என சொல்லப்பட்டுள்ளது ஆனால் தமிழ் மக்களை பொறுத்தவரை அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

கடந்த 28 வருட காலமாக அவசரகால ஆட்சியின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர் யுவதிகள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டும் காணாமலும் போயுள்ளனர் அல்லது கொல்லப்பட்டுள்ளனர். 1500 தமிழ் இளைஞர்கள் இந்நாட்டின் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் கடந்த நான்கு ஐந்து வருடங்களுக்கு மேலாக எதுவித விசாரணையோ அல்லது விடுதலையோ இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து 1949, 1953, 1959 ஆகிய ஆண்டுகளில் சில காலங்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் ஆளப்பட்ட போதிலும் 1972ம் ஆண்டு முதல் இன்று வரை தொடர்ந்து அவசரகாலச் சட்டமும் இதற்கு வலுவூட்டுகிறது. இதே வேளை தேசிய பாதுகாப்புச் சட்டமும் கீழ் ஆளப்பட்டு வருகிறது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையின் அடிப்படையில்பாதுகாப்புச் சட்டத்தின் கீழே விசேட அவசரகால விதிகள் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டங்களில் ஒன்றே 1979ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைசட்டம் இன்று இச்சட்டத்தின் கீழே தமிழ் மக்கள் இன்று அடக்கப்பட்டு ஆளப்படுகின்றனர்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுகின்றது இவற்றை நிவர்த்தி செய்வதற்கு பல மனித உரிமை அமைப்புகள் இருந்தும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.



கடந்த 17 வருட ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் வடக்கு கிழக்கில் பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொண்டது, இனக் கலவரம் என்ற பெயரில் 1983 யூலை 23ம் திகதி முதல் இலங்கை அரசாங்கம் நாடு முழுவதும் தமிழ் இனப்படுகொலையை மேற்கொண்டது. நன்கு திட்டமிட்ட முறையில் தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய மனித உரிமைமீறலாகும். நூற்றுக்கணக்கான தமிழர்கள் வெட்டிக்கொல்லப்பட்டனர். பலரை நிர்வாணமாக்கி தாக்கிக் கொலை செய்தனர் இவைகளை விட அரசினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட 53 கைதிகள் இரண்டு கட்டமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் இலங்கை அரசை சர்வதேச மட்டத்தில் தலைகுனிய வைத்தது.

அதை தொடர்ந்தாற்போல் வந்தாறுமூலை பல்கலைக்கழக படுகொலைகள், சத்துருகொண்டான் படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை, சுதந்திரபுர படுகொலைகள். நவாலி படுகொலைச் சம்பவங்கள் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்றன. இதுபோன்ற சம்பவங்கள் அனைத்தும் வெறும் விசாரணைகளுடன் மறைக்கப்பட்டு விட்டது.

இத்தனை இன்னல்கள் மத்தியில் வாழ்ந்த தமிழ் மக்கள் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு அரசை ஆட்சிபீடமேற்றினர். தமது 6 வருட காலத்தில் நீதியுடனும் உள்ளத்தூய்மையுடனும் ஆரம்பம் முதல் இன்று வரை செயற்படுத்த தவறிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசானது போரை முன்னெடுத்துச் செல்வதிலே முனைப்பாக நின்றது. தமிழ் மக்களை கொடுமைப்படுத்தும் நிகழ்வுகளில் இறங்கியுள்ளதை நாம் அறிவோம். மக்கள் ஒதுங்கியிருக்கும் கோயில்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீது மோசமான குண்டுத்தாக்குதல்களையும் செல்தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியதோடு இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்ந்து புரிந்து வரும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தொடர்கதையாகவே உள்ளது. சந்திரிகா அரசு உணவு எரிபொருள் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழும் வன்னிப்பகுதிகளுக்கு தடைசெய்துள்ளது. இவ்வாறு தமிழ் மக்களை படிப்படியாக அழிப்பது ஒரு மனித உரிமை மீறலே ஆகும்.

இந்த வகையில் ஐக்கியநாட்டுச் சபையின் மனித உரிமைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கை உலகில் மனித உரிமை மீறலில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக பிரகடனப்படுத்தி உள்ளது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் இதனை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான சட்டங்களை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியது மனித உரிமை அமைப்புக்களின் கடமையாகும். போர்குற்றங்களை புரிந்தவர்களை கண்டுபிடிப்பதன் மூலம் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த முடியும். என்பதுடன் இன்று மலையகம் வாழ் தமிழ் மக்கள் தங்களுக்கெதிரான அடக்கு முறைக்கு எதிராக கறுப்புக் கொடி கட்டும் உரிமையையும் இழந்துள்ளனர்.

சந்தி



# தமிழ் மக்களின் இரத்தக் கண்ணீரும் மேற்குலகின் முதலைக் கண்ணீரும்

மக்கள் விடுதலை முன்னணியான நாம் எமது கருத்துக்களையும் அரசியல் நிலப்பாடுகளையும் இலங்கை வாழ் தமிழ் மக்களிடம் கொண்டு செல்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஏனென்றால் ஒரு புறம் முழு தமிழ் சமூகம், உக்கிரமடைந்திருக்கின்ற தேசிய பிரச்சினையினுள் முழுமையாக அமிழ்த்தப்பட்டிருக்கின்றனர், மறுபுறம் தீவிர இனவாத கருத்துக்கள், அம்மக்கள் அனைவரின் கருத்தாக மாற்றியமைப்பதற்கு யுத்த ரீதியில் பலம் வாய்ந்த இனவாத இயக்கத்துக்கு முடியுமாயிருக்கிறது. இது போல் மேலும் பல்வேறு காரணிகளின் ஊடாகவும், தமிழ் மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்ற இவ் வேளையில், சகல விதமான இனவாதத்திற்கும் எதிரான, உண்மையானதும், கௌரவமானதும் தேசிய ஒற்றுமையை வேண்டி நிற்கும் எமது கருத்துக்களை தமிழ் மக்களிடம் கொண்டு செல்வதற்கு பல இடர்களை சந்திக்க நேரிடுகிறது. ஆனால் அதை கட்டாயம் செய்தாக வேண்டும் செய்ய முடியும். இந்தக் கட்டுரையானது அதற்கான ஒரு அடிதளமாகும் என்பதை முதலில் சுட்டிக்காட்ட வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் ஊடாக நோர்வே அரசின் தலையீட்டை வரவேற்று யாழ். மாநகர சபையினால் (அதன் பிரதிநிதிகளால்) ஏகமனதாக பிரேரணையொன்றை நிறைவேற்றியதாக செய்தியொன்றை நான் கண்டேன். அதேபோல், தமிழர் விடுதலை கூட்டணி, இலங்கை தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமெரிக்காவை தலையிடும்படி கேட்கின்ற செய்தியையும் கண்டேன். அது மாத்திரமல்ல தமிழ் மக்களை மாத்திரம் அடித்தளமாக்க அமைப்புகளும் இதே கருத்தை கொண்டுள்ளனர். இதுபோன்ற தமிழ் மக்களின் தேவைகள் மீது மாத்திரம் அடித்தளமாகக் கொண்ட இயக்கங்கள் தமிழ் மக்களை எந்தப் பாதையில் இழுத்துச் செல்கின்றது? இவ்வாறான கேள்வி மேல் கண்டவற்றை அவதானிக்கின்ற பொழுது எமக்கு எழுவது தவிர்க்க முடியாது.

இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு, பொதுவான ஒடுக்கு முறைக்கு புறம்பாக தாம் சிறுபான்மை மக்கள் என்பதால் எதிர்கொள்கின்ற விஷேட ஒடுக்கு முறைக்கு உள்ளாகியிருப் பது உண்மையே. ஆயினும், அது ஒரு சில வெளிநாடுகளைப் போல் கண்ட இடத்தில் படுகொலை செய்து கொள் கின்ற நிலைக்கு உக்கிரமடையவில்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். எப்படியாயினும், பொதுவாக நாம் எதிர்கொள்ளும் பிரச்சினையானது, பொது சமூக அநீதியும் சமத்துவமின்மை யையுமே என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த பொதுவான சமூக அநீதியும் சமத்துவமின்மையும் சிறுபான்மையின மக்களுக்கு விஷேடமாக தென்படுகிறது. இலங்கையின் தேசியப் பிரச்சினையின் ஆரம்ப அடித்தளம் இதுவென்பதை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலங்கையின் முக்கியத்துவம் என்ன வெனில் தங்களது தந்திரோபாய நடவடிக்கை தேவைகளுக்காக விரும்பிய வாறு பயன்படுத்துவது மாத்திரமே. ஒரு புறம் தென்னாசிய பிராந்தியத்துக்குரிய தனது அரசியலை நடைமுறைப்படுத்தும் முன்னுரிமைக்காக மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலங்கை மிகவும் முக்கியத்துவமாகும். யுத்த தந்திரோபாய ரீதியிலும் இலங்கையானது அவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. அதேவேளையில், தற்கால உலகமயமாதல் சுரண்டலின் ஒரு வேட்டை நிலமாகவும் இலங்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது. குறிப்பாக, தென்னாசிய பிராந்தியத்தினுள் இரண்டு தடவை முக்கியத்துவமிக்க புரட்சிகர எழுச்சி தொடர்பான அனுபவங்களால் உயிரூட்டப்பட்டுள்ள நாடு இலங்கையென்பதால் இலங்கையை தாங்களது உலக ஓட்டத்துடன் கட்டிவைத்துக் கொள்வதும் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலங்கை மிக முக்கியத்துவமாகும். உலக வங்கியினது உலகமயமாதலைப் பற்றி மாத்திரம் பேசுவதில்லை. அவர்கள் இன்று அதிகாரத்தை "பூகோளமயமாக்கால்" பகிர்ந்தளிப்பது பற்றியும் பேசிவருகின்றனர். தனது கடன் மூலதனத்தின் ஊடாக நாடுகளை அடிமைப்படுத்துகின்ற அதேவேளை, அவைகளை அரசியல் ரீதியிலும் நீண்டநாள் அடிமையாக்குகின்ற இந்த "பூகோளமயமாக்கல்" என்பது உலகவங்கியின் தந்திரோபாயமாகவுள்ளது.

இன்று இலங்கை பொருளாதார ரீதியில் நவீனமடைந்துள்ளது. அதிலும் முறறாக அடிமையாக்கப்பட்டுள்ளது. இன்று மேற்குலக கனவான்களுக்கு தேவைப்படுவதெல்லாம் அரசியல் ரீதியிலும் அதை நலிவடையச் செய்வதேயாகும். அதன் அபிலாஷை களை நிறைவேற்ற முடிவது, அரசை நலிவடையச் செய்கின்ற மூலவளம் இலங்கையில் இருந்தால் மாத்திரம் தற்போது மேற்குலக நாடுகளின் மூலவளமாக மாறியிருப்பது, இலங்கை யில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலங்களாகும். அதனூடாக அவர்கள் ஒரு புறம், தனது யுத்த செல்லப் பிள்ளையின் மூலமாக இலங்கை அரசாங்கத்துக்கும், எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கும் ஆயுதங்களை விற்கின்றனர். மறுபுறம் அரசை நலிவடையச் செய்வதற்காக, தமிழ் மக்களின் அவல நிலையினை பிரதான மூலவளமாகக் கொண்டு போலி சமாதான நடவடிக்கைகளையும் கையிளுகின்றனர். யுத்தமும் அவர்களே, சமாதானமும் அவர்களே, எமக்கு மிச்சமிருப்பது வாயை திறந்து வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இக்காரணணங்களின் மத்தியில் நாம் இந்தப் பிரச்சினைக்கு இரண்டு காரணிகளின் அடிப்படையில் பிரவேசிக்க வேண்டியிருக்கின்றது. அதாவது; சமூக அநீதி, சமத்துவமின் மை, ஜனநாயகம் மறுத்தல் போன்று அடிப்படை காரணிகள் உருவான இந்நாட்டின் தேசியப் பிரச்சினை, தேசிய இனங்களை ஒற்றுமைப் படுத்தும் திசையை நோக்கிய தீர்வுகளுக்கான யோசனையை கோரிக்கை விடுவதேயாகும். மறுபுறம், தமிழ் மக்களின் துன்பநிலையை மூலதனமாகக் கொண்டு மேற்குலக ஏகாதிபத்தியமும் அவர்களின் அனைத்து செல்லப் பிள்ளைகள் மூலமாக வருகின்ற அரசை பலவீனமடையச் செய்கின்ற, (அதாவது, பிரிவினைவாத) திட்டத்தை தோற்கடிப்பதாகும். உண்மையாகவே, இந்த அடிப்படை இரண்டு காரணிகளை ஒன்றோடு ஒன்று பிணைத்துக் கொண்டால் கடைசியாக தமிழ் சமூகத்துக்கு, மேற்குலக ஏகாதிபத்திய அதிகாரிகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற கொத்தடிமைகளாக மாற வேண்டும்.

நாங்கள் கூறுகின்ற இக்கருத்துக்கள் தமிழ் மக்களின் பிரபல்யமான கருத்து இல்லையென்பது மாத்திரம் தெளிவு. ஆனால், ஒருவராயினும் சரி இந்தக் கட்டுரையின் எண்ணக் கருவை சரியாக புரிந்து கொள்ள முற்படுவாராயின், தாய்நாடும், அதில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழும் நாளைய தினத்தை உருவாக்குவதற்காக அது மிகவும் பிரயோசனமாக அமையும்.

**விமல் வீரவன்ச**
பிரச்சார செயலாளர்
மக்கள் விடுதலை முன்னணி

## அரவிந்தன்

14ம் பக்கத் தொடர்ச்சி...

பார்த்தா பெட்டை அந்த பெடியனோட எங்கயோ போயிற்றுதெண்டு சினேகிதி மூலமாக தெரிஞ்சுதாம். இது நடந்த மூன்று நாளுக்கு பின்னால் தானாம் பெட்டை வீட்டுக்கு வந்திச்சுதாம். நடந்தது நடந்து போயிற்றுதெண்டு பார்த்தா ரெண்டாவது பெட்டையும் டிஸ்கோவுக்கு போகப்போறன் என்டு சொல்லிக் கொண்டிருக்குதாம்.

எல்லாம் இந்த நாட்டு சட்டதிட்டங்கள் கொடுத்த இடம். பாவம் அரவிந்தன் இரவிரவாக நித்திரையில்லாமல் அழுது கொண்டு இருக்கிறாராம். ஏன் இந்த நாட்டுக்கு வந்தன் என்று அரவிந்தன் மனிசி அழுது கொண்டிருக்கிறத பார்த்தா பாவமாக இருக்கு...

சொல்லிக் கொண்டே என் மனைவி தலையணைக்கு வேறு உறை மாற்றிக் கொண்டிருந்தாள்.

என்ன செய்யிறது. இதுதான் இந்த நாடு. நாங்கள் தான் கண்டும் காணாததும் போல இருக்க வேணும். ஆனால் அரவிந்தன் இப்பதான் இந்த நாட்டுக்கு வந்தவன். பிள்ளைகளின்ர மாற்றத்துக்கு அவனால மாறமுடியாதென்றதால அவன் மனச போட்டு அலட்டிக் கொள்ளுறான் போல தெரியுது.

அரவிந்தனின் மாற்றத்துக்கான காரணத்தை கண்டுபிடித்ததின் அடையாளமாக நான் அப்படி சொன்னபோது எது மாற்றம். இதெல்லாம் மாற்றமில்லை. சந்தர்ப்பத்த பயன்படுத்திற விதம். பெற்ற பிள்ளைகள் அதுவும் பெண்பிள்ளைகள் யாரோ ஒருத்தனோட போயிற்று திரும்பவும் வீட்டுக்குள்ள வாறத என்னெண்டு தாய் தகப்பனால் பார்த்துக் கொண்டு இருக்கேலும். இதெல்லாம் கொழுப்பெடுத்த தனம். வந்தபுதிசில வெள்ளைக்கார பிள்ளைகளோடு நிண்டு பிடிக்கேலாம இருக்குது எங்களையெல்லாம் திரும்பவும் நாட்டுக்கே கூட்டிக்கொண்டு போங்க எண்டு சொன்னதுகள். இப்ப என்னடா எண்டால் வெள்ளைக்காரரையே மிஞ்சப் பார்க்குதுகள். இதெல்லாம் இடைநடுவுல வந்து காணாதத கண்ட குணம் தானே...

தன் மனதில் இருந்தவைகளை வார்த்தைகளாக கொட்டிய களைப்பில் தூங்கிப்போனாள் என் மனைவி.

அதற்குப் பின்பு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து அரவிந்தனோடு தொலைபேசியில் பேசினேன். ஆனால் எனக்கு தெரிந்தவைகள் எதையும் அவனிடம் காட்டிக் கொள்ளவில்லை. அவசியமில்லாமலேயே நான் எனது பள்ளிப்பருவ நாட்களை அவனிடம் பேசினேன். அவனை நேரில் சந்தித்த போது அவனாகவே அந்த பேச்சில் காட்டிய சுவாரஸ்சியம் நான் பேசும்போது அவனிடம் தெரியவில்லை. உன்னை நீயே ஏமாற்றுகிறாய் கோபாலா என்று சொல்வது போல் தெரிந்தது எனக்கு. அரவிந்தனோடு நான் பழகிய இந்த முப்பது வருடங்க்ளில் உண்மையாகவே அவன் தனது நட்பை தெரிவித்த சம்பவமாக அவனை நான் சந்தித்த அந்த கடைசி சந்தர்ப்பத்தையே நினைக்கின்றேன். கடைசியாக அவன் என்னைப் பார்த்து கண் கலங்கியது. என் கையைப் பிடித்து பேசியது. என்னோடு இருந்து சாப்பிட்டது. அவன் என்னிடத்தில் ஏதோ சொல்ல நினைக்கின்றான் என்பதை என் உள்மனம் உணர்த்தியதெல்லாம் இப்போதும் என் நினைவில் தெரிகின்றது.

அரவிந்தன் வீடு நெருங்குகின்றது. அரவிந்தன் வீடு நெருங்க நெருங்க பயமா பலவீனமா சோகமா என்று இனம்புரியா உணர்வில் என் உடல் எனது கட்டுப்பாட்டையும் மீறி நடுங்கத் தொடங்குகின்றது. நான் போன போது அரவிந்தன் வந்து என்னை வரவேற்று நான் கேள்விப்பட்டவைகளையெல்லாம் பொய்யாக்கி விடமாட்டானா என்ற நப்பாசையில் என் மனைவி பிள்ளைகளுக்குப் பின்னால் காரிலிருந்து இறங்கி நடந்து செல்லுகின்றேன்.

அரவிந்தன் வீட்டுக் கதவை தட்டியதும் யாரோ சொந்தக்கார பெண் வந்து கதவைத் திறந்துவிட நானும் மனைவி பிள்ளைகளும் உள்ளே செல்லுகின்றோம்.

எங்களுக்கு முன்பாக வந்து முன் அறையில் இருந்த ஒரு பெண்ணிடம் சென்று அரவிந்தன் மனைவி எங்கே என்று என் மனைவி விசாரிக்க உள் அறைக்குள் இருக்கின்றா என்று பதிலைத் தொடர்ந்து என் மனைவி உள் அறைக்குள் சென்ற சில நிமிடங்களுக்கு அரவிந்தன் மனைவியின் விசும்பல் சத்தம் என் காதுகளில் விழுகின்றது. பிள்ளைகள் வழமைபோல மேலே ஓடிவிட்டனர். நான் ஒரு ஓரத்தில் சுவரில் சாய்ந்து கொண்டு நிற்கின்றேன். எதிர்ச்சுவர் ஓரத்தில் நிலத்தில் குவிக்கப்பட்டிருக்கும் பூங்கொத்துக்களின் நடுவில் மரச்சட்டத்துக்குள்ளிருந்து சிரித்துக் கொண்டிருந்த அரவிந்தனையே பார்த்துக் கொண்டிருந்தேன். அரவிந்தனுக்கு பூக்கள் பிடிக்கும். தாவரங்களையும் நேசிப்பவன். இன்று பூக்களுக்கு நடுவில் அவன் போட்டோவாகி இருப்பதை பார்க்க பிடிக்காத நான் பின் வாசல்வழியே சென்று அரவிந்தன் வீட்டு பின் தோட்டத்தில் நின்கின்றேன்.

அரவிந்தனின் பிரிவில் சோகம் கொண்டது போல் தோட்டத்து ரோஜா மலர்கள் தலைகவிழ்ந்து நின்றது. நான் குந்தியிருந்து என் உள்ளங் கையில் ஒரு ரோஜாவை எடுத்து மெதுவாக தடவிக் கொண்டிருந்த போது என் பின்னால் என் மனைவி வந்து நிற்பது தெரிந்து எழுந்து அவளையே பார்க்கின்றேன்.

அரவிந்தன் போயிற்றான் தான் என்ன?... நான் சிறுபிள்ளை போல் கேட்கின்றேன்.

ம்... அரவிந்தன் போயிற்றார். ஒரு மனிசன சாகடிக்க கூரான கத்தியோ துப்பாக்கியோ தேவையில்லை ஒரு சொல்லே போதுமென்ற அரவிந்தன் நிரூபிச்சிற்று போயிருக்கிறார்.

நீ அரவிந்தன் மனிசியோட கதைச்சனியோ?...

கதைச்சனான்...

என்ன சொன்னா?...

ஒரு தகப்பனுக்கு மகள் சொல்லக் கூடாததை சொல்ல அரவிந்தன்ர மூத்தமகள் தகப்பனுக்கு சொல்லியிருக்கிறாள். ஒரு மகளின்ர வாயால கேட்கக் கூடாத வார்தைய தன் மகள் வாயாலயே அரவிந்தன் கேட்டிருக்கிறார். தாங்க முடியாத அவர் இதயம் நிண்டுபோயிருக்க எல்லாம் இந்த நாட்டு சதித்திட்டங்கள் கொடுத்த இடம். வேருக்கு விழுதுகள் விசமான கதை இந்த வெளிநாட்டுல தான் நடக்குது. பாவம் மனிசன் போய்ச் சேர்ந்திட்டார்.

என்ன நடந்ததாம்?...

அரவிந்தனின்ர மூத்த மகள் ஆரோ பெடியனோட சுத்தினாளாம் எண்டுறது பழைய கதை. இப்ப அந்த பெடியன விட்டுப் போட்டு இன்னுமொரு பெடியனோட சுத்துறாளாம் என்று அரவிந்தன் கேள்விப்பட்டு காதலிக்கிறதையும் கூட்டிக்கொண்டு ஓடுறதையும் ஒருத்தனோட நிறுத்திக் கொள்ளாமல் ஏன் இப்பிடி நாய்கள் மாதிரி நாளுக்கொருத்தனோட அலையுறாய் என்று மகளை கேட்டிருக்கிறார்.

அதுக்கு சுத்துறதும், ஓடிப்போறதும் என்ர சுதந்திரம். ஏன் நீங்கள் அதக்கேட்க வேணும் எண்டு தகப்பனையே கேள்வி கேட்டிருக்கிறாள். ஆத்திரத்தில் அரவிந்தன் மகள அடிச்சிருக்கிறார் போல... அதுக்கு அவள் இனிமேல் எனக்கு அடிச்சாலோ என்ர விசயத்தில் தலையிட்டாலோ என்னோட நீங்க தவறாக நடக்க முயற்சி செய்தீங்க என்று சொல்லி உங்கள பொலிசில மாட்டிவைப்பன் என்றாளாம். உலகத்தில் பெற்றமகளே தகப்பன பார்த்து இப்படியொரு சொல்லைச் சொல்லுவாளா?.... பாவி அவள். அரவிந்தன பார்த்து இப்படிச் சொன்னாளாம்.

சாகவேணும் போல இருக்கு இப்பவே மூச்சு நின்றால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும் என்று இரவிரவாக புலம்பிக் கொண்டே இருந்தாராம். தனிய விட்டுட்டுப் போக பயந்து புருஷனுக்குப் பக்கத்திலேயே அரவிந்தன் மனிசியும் இருந்திருக்கிறா. கண்ணயர்ந்து போய் முழிச்சுப் பார்த்தா மூச்சு நிண்டுபோய் செற்றியிலேயே சாய்ந்து கிடந்திருக்கிறார் அரவிந்தன். இது தான் நடந்ததெண்டு ஆரிட்டயும் சொல்லயில்லையாம். என்னட்ட மட்டும் தான் சொல்லுறன் எண்டு சொல்லி அழுதா அரவிந்தன் மனிசி. கேட்கக் கூடாத வார்த்தைய கேட்டு தாங்க முடியாத இதயம் நிண்டு போயிருக்கு...

எனது மனைவி சொன்னதை என்னாலேயே நம்பமுடியாமல் இருந்தது. அரவிந்தனுக்கு இப்படியொரு மகளா?.... என்னால் நம்ப முடியவில்லை. வார்த்தைகள் இதயத்தின் இயக்கத்தை நிறுத்தி விடாது என்பது எனக்கு தெரியாததல்ல. இருந்தும் அரவிந்தனின் சாவுக்கு அவனின் மகளே காரணப்பெயராக மாறிவிட்டாளே என்ற செய்தி என் மனதை வாட்ட நான் உள்ளே சென்று மேலே போய் குழந்தைகள் உள்ள அறைக்குள் சென்று எனது பிள்ளைகளைக் கீழே போகச் சொல்ல அவர்கள் மறுப்பேதும் சொல்லாமல் கீழே போகின்றார்கள்.

அரவிந்தனின் மூன்று பிள்ளைகளும் மூலைக்கொன்றாக நின்று கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் அரவிந்தனின் மூத்த மகளிடம் சென்று அவளின் தலையை தடவி விட்டபடி கேட்கிறேன்.

என்னைத் தெரியுமா உனக்கு?...

ம்....

நான் யார் சொல்லு....

கோபால் அங்கிள்....

நீ பிறந்து வளர்ந்த ஊர் எது என்று தெரியுமா உனக்கு?...

ம்...

உன் அம்மம்மா வீட்டு வாசலில் நின்ற மாமரத்தில் தொங்கிய மாங்காய்களை என் தோழில் நின்று பறிப்பாயே அது உனக்கு நினைவிருக்கா?...

ம்...

உன் கையைப் பிடித்துக் கொண்டு உன்னை எங்கள் வீட்டுக்கு கூட்டிவருவாரே உன் தாத்தா அவரை நினைவிருக்கா உனக்கு?....

ம்....

உன் தகப்பனை நினைவிருக்கா உனக்கு?.....

...

என்ன யோசிக்கிறாய்?...

கோபால் அங்கிள்,

நீ பிறந்து வளர்ந்த ஊர், அம்மம்மா வீட்டு வாசல், ஆறேழு வயதில் உன்கையைப் பிடித்து நடந்த தாத்தா, என் தோழில் ஏறிநின்று நீ மாங்காய் பறித்தது, இதெல்லாம் உனக்கு நினைவிருக்கு. என்னை வளர்த்த அப்பாவை மட்டும் நினைவில்லாமல் போய் விட்டதா?...

அங்கிள்...!

தேம்பித் தேம்பி அழுது அரவிந்தனின் மகளை ஒரு மகள் போல் அணைத்துக் கொண்டேன் நான்.

அங்கிள் அப்பாவை நானா அங்கிள் சாக்காட்டினன்? நான் தான் அப்பாவை சாக்காட்டினன் என்று அம்மா சொல்லிச் சொல்லி அழுறா.

இல்லையம்மா யாரும் யாரையும் சாக்காட்ட முடியாது. நீயும் உன் அப்பாவ சாக்காட்ட இல்ல. ஆனால் உன்னால் உன் அப்பா சந்தோசம் அடையவில்லை.

சொறி அங்கிள். நான் செய்ததெல்லாம் பிழை தான். நான் இனிமேல் அப்படியெல்லாம் நடக்கமாட்டன் அங்கிள். சொறி அங்கிள் என்றபடி தலைகுனிந்தபடியே நின்றாள் அரவிந்தனின் முத்த மகள். நான் அவளின் தலையை தடவிவிட்டுக் கொண்டேன்.

சந்தோஷமம்மா நீ இப்படி சொல்லறதைக் கேட்க. உன்னை என் நண்பனின் மகள் என்று சொல்லிக் கொள்ளுறதுல நான் பெருமைப் படுறன். உன்னை நீ அறிஞ்சு கொள்ளவும் நீ திருந்தி நடக்கவும் உன் தகப்பனை இழக்க வேண்டியிருந்திருக்கிறதே என்கிறத நினைக்கிற போது தான் கவலையாக இருக்கு... என்று சொல்லிவிட்டு கிழே வந்த போது என் மனைவியும் பிள்ளைகளும் புறப்பட காருக்குள் எனக்காக காத்திருந்தார்கள். என்னைக் கண்டதும் அரவிந்தனின் மனைவி வெளியே வர நான் எதுவும் பேசமுடியாதவனாய் வேறுபக்கம் என் பார்வையை பரவவிட்டபோது இது வரையில் எனக்குள் நான் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்ட சோகம் எல்லைமீறி என் கண்களிலிருந்து கண்ணீரை வரவழைக்க இனியும் அந்த இடத்தில் நிற்க முடியாதவனாய் வெளியில் வந்து காரில் ஏறியபோது கடந்த மாதத்தில் அந்த ஞாயிறில் அரவிந்தனை சந்தித்து விட்டு போனபோது வழியனுப்ப வந்த அரவிந்தனை இந்த இடத்தில் தான் கடைசியாக சந்தித்தேன் என்பதை நினைத்த போது அரவிந்தன் இறந்து விட்டான் என்பதையும் அவனை இனி காணமுடியாதென்பதையும் என்னால் நம்ப முடியாமல் தான் இருந்தது.

அடுத்த ஞாயிறு நான் அரவிந்தன் வீட்டுக்கு போவேன் அப்போது என்னை வழியனுப்பவோ வரவேற்கவோ அவன் இருக்க மாட்டான். இறுதி கிரியைகளை முடித்து அவனை நான் தான் வழியனுப்பி வைப்பேன்.

## பாரதியின் வரலாறு



### கவிராயனும் கொல்லனும்

"கதைக் கொத்து," "நவதந்திரக் கதைகள்" முதலிய நகைச்சுவைக் கதைகளும் இக்காலத்தில் தோன்றின. "கதைக்கொத்"தில் உள்ள "கவிராயனும் கொல்லனும்" என்ற கதையின் சுருக்கம் இது-

ஒரு நாள் ஒரு கவிராயன் தெரு வழியே செல்கிறான். அங்கே ஒரு கொல்லன் பட்டறை. அதிலுள்ள கொல்லன் பாடிக் கொண்டிருக்கிறான். அக்கவிராயன் பாடல் அது. மிக மகிழ்ச்சியுடன் கேட்கிறான் கவிஞன்; தன் பாடல்கள் மக்கள் வாயில் முழங்குகின்றனவே என உவகை கொள்கிறான். திடீரென்று அவன் முகம் சுளிக்கிறது. கொல்லன் கவிஞனுடைய பாடலின் சொற்களைச் சிதைத்துத் தப்பும் தவறுமாகப் பாடுகிறான்.

கவிஞன் உடனே பட்டறைக்குள் சென்று, கொல்லன் சாமான்களைத் தாறுமாறாக எடுத்தெறிகிறான்.

"யாரடா நீ பைத்தியம், என் சாமான்களை எடுத்தெறிகிறாய்! என் ஜீவனம் அவை!" என்கிறான் கொல்லன்.

"அப்பனே, சற்று முன் நீ பாடிய பாட்டை எழுதிய கவிஞன் நான். என் பாட்டைப் பிழைபடப் பாடிக் கொலை செய்தாயே! பாட்டின் சொற்கள் என் ஜீவனம் அப்பா!" என்று அவனுக்குப் பாடம் புகட்டுகிறான் கவிஞன்.

கவிதைகளை உருச் சிதைக்காமல் சரியானபடி பாட வேண்டியதை இவ்வாறு எடுத்துக் காட்டுகிறார் பாரதி.

### வாழ்க நீ எம்மான்!

1918 நவம்பரில் பாரதியின் புதுவை வாசம் முடிந்தது. பெருஞ்சிறை போன்ற புதுவையை விட்டு அவர் வெளியேறினார். அவரைக் கைது செய்து, 24 நாட்கள் சிறையில் வைத்திருந்து விடுதலை செய்தார்கள். பாரதி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தமது மனைவியின் ஊரான கடயம் கிராமத்தில் வசிக்கச் சென்றார்.

பத்து ஆண்டுகளுக்குப் பின் பிரிட்டிஷ் இந்தியாவில் சுதந்திரமாக இயங்க முடிந்த பாரதி, முதல் காரியமாகத் தமது நூல்கள் எல்லாவற்றையும் தொகுத்து 40 பகுதிகளாக வெளியிடத் தீர்மானித்தார். இதற்காக அவர் விரிவான திட்டமும் தயாரித்து, வட்டிக்குக் கடனாகப் பணம் கோரி நண்பர்களுக்கு எழுதினார். ஆனால் எதிர்பார்த்தபடி அவரால் பணம் திரட்ட இயலவில்லை. எனவே தமது நூல்களை வெளியிடும் திட்டத்தை அவர் கைவிட வேண்டியதாயிற்று.

பாரதி பிரிட்டிஷ் அரசை வெளிப்படையாக எதிர்த்து வந்த படியால், அவருக்கு உதவுவதால் தாமும் அரசின் அதிருப்திக்கு ஆளாக நேரிடுமோ என்று பலர் பயந்தனர்.

தொடரும்...

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

பேராசிரியர் சிவத்தம்பி காலத்துக்கு காலம் எழுதியுள்ள பதின்னான்கு கட்டுரைகளின் தொகுதி இந்த நூல். இவற்றோடு தனது வாக்கு மூலம் போன்ற முன்னுரையினை பேராரிசிரியர் எழுதியுள்ளார். அவரது முன்னுரையே திறந்த விவாதம் ஒன்றுக்கு பகிரங்க அழைப்பு விடுகின்றது. இப்படியான அழைப்புக்குப் பலகாரணங்கள் உள்ளன.

கடந்த இருபது ஆண்டு காலமாக பேராசிரியரை நோக்கி பல கேள்விகள், முறைப்பாடுகள், குறைப்பாடுகள் கூறப்பட்டு வருகின்றன. மார்க்சியம் தெரிந்தவர்கள் இவர் மார்க்சியத்தை கொச்சைப் படுத்துகிறார் என்றனர். அந்த ஞானமேயற்றவர்கள் இவரை அழுத்தமான மார்க்சிய வாதியென்று சொல்லால் அடித்தனர். இவராலே அறிவுத் தளத்திற்கு அறிமுகமான மதுசூதனன் போன்றோர், 1980க்குப் பின் இலக்கிய நிலைமையை அறியாதவர் என சிறுபிள்ளைத்தனமாக இவரைப் பற்றிக் கூறினார்கள். இவ்வளவையும் இவர் கேட்டுக்கொண்டார். எத்தனை நாட்களுக்கு இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பது? சிறுகச் சிறுக அளித்த பதில்கள்யாவையும் ஒன்றாகச் சேர்த்து இணைத்துப் பார்க்கிறபோது தத்துவார்த்த ரீதியான நிலைப்பாட்டுடனேயே போராசிரியர் இயங்கினார் என்ற சித்திரம், சிந்தனையாற்றலுள்ள எவரின் மனதிலும் தோன்றியே தீரும்.

பேராசிரியர், கைலாசபதியின் ஒரு சாலை மாணவர், படிப்பாளி, இடதுசாரி சிந்தனையோடு வளர்ந்தவர். கம்யூனிஸ இயக்க ஆதரவாளரென வெளிப்படையாகவே அறியப் பட்டவர். கம்யூனிஸ்ட் கட்சியின் கலாசார அமைப்பான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழுவில் இருந்து வழி நடத்தியவர்களில் ஒருவர். அறுபதுகளில் தேசிய இலக்கியக் கருத்தோட்டத்தைவலியுறுத்தி நிலைநாட்டிய இயக்கம் சார்ந்தவர். சர்வதேச கம்யூனிச சித்தாந்தப் பிரிவில் அவர் ருஷ்யசார்பு கம் யூனிஸ்ட் இயக்கத்தை முழுமையாக ஆதரித்தார். கிட்டத்தட்ட ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுஉறுப்பினருக்கு வழங்கப்படும் மதிப்பினை அவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பெற்றார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், நடைபெற்ற உலகத்தமிழராய்ச்சி மகாநாட்டில் பங்குபெற வந்த இவரை கேவலப்படுத்தி நாடுகடத்த முனைந்த போது இத்ற்கு எதிராக முழுமுனைப்போடு இயங்கியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

கம்யூனிச இயக்கப்பிரிவில் கைலாசபதி சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல், கலாசார இயக்கங்களைச் சார்ந்தார். புரட் சிகர இலக்கியக் கருத்தோட்டத்தை முன்வைத்து பாராளுமன்ற ஆசனங்களை நிராகரித்து அர சியல் தளங்களை கட்டி யெழுப்புவதை ஏற்றார். தேசிய முதலாளித்துவக் கட்சிகள் பற்றிய நிலைப்பாட்டை இயக்க சிந்தனையோடு




அழுத்தப்படுத்தினார்.

1970ன் பின் ஆளுங்கட்சிகளோடு இணைந்து செயல்படுவதில் ருஷ்யசார்பு கம்யூனிஸ்ட் கட்சி அக்கறை கொண்டது. தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபோது கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. அதன் இலக்கியத்தளமான முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சில வழிமுறை களை அறிக்கையாக முன்வைத்தது. அது செயலுருப்பெறாதபோது மௌனம் சாதித்தது. அப்போதைய தமிழ்த் தேசிய வாதத்தை மேனிலைப்படுத்திய தமிழ்க்கட்சிகள் என்ன வர்க்க இயல்பை, எவர்க்கான போர்க்குரலை வெளிப்படுத்தின என்பதை இவர்கள் வெளிப்படுத்தாமலே இருந்தனர். அப்போதெல்லாம் சிவத்தம்பி இந்தத்தளத்தின் ஞானவானாகவே இருந்தார்.

பின்னர் இலங்கையில் அரசி யல் மாற்றங்கள் ஏற்பட்டன. இளைஞர் போராட்டம், அரச பயங்கரவாதம் என்பவை வலுத்தன. இந்தக் கட்டுமானத்தில் கலைஇலக்கியங்கள் நிலைகொள்ளும் தன்மை உண்டாயிற்கு. இவற்றோடு முற்போக்கு அணி முன்னிடம் பெறாமைக்கு அரசியல்தளத்தின் சித்தாந்தக் குறைபாடு காரணமாக இருக்கவில்லை. நடை முறைக்கோளாறுகளே காரணமா அமைந்தன. இந்தவேளையிலும் பேராசிரியர் முற்போக்கு அணியையே சார்ந்திருதார். இந்த நிமிஷமும் தான் மார்க்சியவாதியே என்று அடித்துச் சொல்லுகின்றார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அரசியல் தளமின்றி அதற்குத் தொடர்பற்றவரின் பெயர்ப்பலகைக்குள் முடங்கிப்போய் இருப்பது உண்மைதான். அதன் சாதனைகள் இதனால் வரலாற்றில் பதிவு செய்யப்படாமல் இருக்கப்போவதில்லை. எனினும் முற்போக்கு இலக்கியம், வேறு அமைப்பாக சித்தாந்தத் தெளிவோடு

**ஈழத்துத் தமிழிலக்கியத்தடம்**
**1980-2000**
**பார்வையும் விமர்சனங்களும்**
**கார்த்திகேசு சிவத்தம்பி**
**மூன்றாவது மனிதன் பதிப்பகம்**
**37/4, வக்சோல் ஒழுங்கை,**
**கொழும்பு - 02.**
**விலை ரூபா. 210.00**

இயங்குவதையும் கவனத்தில் கொண்டே ஆக வேண்டும்.

தமிழ் கூறும் நல்லுலகிலே பேராசிரியர் சிவத்தம்பியைப்போல அறியப்பட்ட தமிழறிஞர் எவருமே இல்லையென்று கூறலாம். தன் இயக்க அறிஞர்களுக்கே முதன்மைப்படுத்தி வழங்கும் தி.வி.க.விருதை தமிழக முதல்வர் மு.கருணாநிதி பேராசிரியர் சிவத்தம்பிக்கு வழங்கியது இதை உறுதிசெய்யும்.

போராசிரியர் சிவத்தம்பியின் வாழ்வு இவ்விதமே அரசியலும் இலக்கிய இயக்கமும் இணைந்த ஒன்றாக ஆற்றுப்பட்டு வந்திருக் கிறது. எனவே இந்நூலை மேற்கூறிய பின்னணியோடு இணைத்துப் படிப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

1950 நடுக்கூற்றிலிருந்து அடுத்த 10,15 ஆண்டு காலத்து முற்போக்குச் செல்நெறியிலிருந்து 1980களில் ஐயந்திரிபறத்தெரிந்த தமிழ்ப்பிரக்ஞை நிலைக்கு கருத்து நிலைகளும் அரசியலும் அதனால் எழுத்துக்களும் எவ்வாறு மாறின என்பதற்கான போக்குகளையும் நியாயப்பாடுகளையும் இக்கட்டு ரைகள் சுட்டுகின்றன என்று சொல்லுகிறார் போராசிரியர்.

இதற்கூடே அவர் முற்போக்கு இயக்கத்தின் வளர்ச்சி பற்றியும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு காலகட்டத்திலும் புதிது புதிதாக எழுதுபவர்களை முற்போக்குக் குடைக்குக் கீழ்க் கொண்டு வருவதிலே காட்டப்பட்டசிரத்தை, முற்போக்குக் கொள்கைகளின் ஆழப்படுத்துகையில் காட்டப்பட்டிருக்குமேயால் முற்போக்கு இயக்கம் வளர்ந்திருக்கும். இந்த விடயத்தில் சீனச்சார்ப்பாகப் போனவர்கள் மொஸ்கோ சார்புப் பொதுவுட மைக்கட்சி மேல் வைத்த குற்றச் சாட்டுகள் நியாயமானவையே. அந்தக்கட்சிக்கு தமிழ்விடயங் களிலிருந்த பிடியின் தளர்ச்சி, அதன் நிறுவனமான எழுத்தாளர் சங்கத்திலும் தெரிய வந்துள்மை ஆச்சரியமன்று. ஆனால் வரலாறு எவருக்குமே காத்திருப்பதில்லை. அதன் முன்வண்டிகளில் இருப்பது மார்க்சியம்.

இந்த வாக்கு மூலத்தையும் முன்னே கூறிய போராசிரியரின் வாழ்க்கைப் போக்கையும் வைத்துப் பார்க்கின்ற போது பலகேள்விகள் எழுகின்றன.

1950 நடுக்கூற றிலிருந்து முற்போக்கு இயக்கத்தின் ஞானவானாகவும், இயக்கச்சக்திகளில் ஒருவராகவும் இருந்து வந்த பேராசியர் - தான் சார்ந் திருந்த அரசியல் கட்சியிலும் முற போக்கு இயக்கத்திலும் ஏன் மேற் கூறிய கருத்துக்களை முன்வைக்கவில்லை? இப்போது இவையெல்லாவற்றிற்கும் சம்பந்தப்படாதவராக, அப்பாற்பட் டவராக இந்தக்கருத்துக்களை முன்வைத்திடக்காரணம் என்ன?

ஈழத்திலே சாதிஒடுக்கு முறைக்கு எதிராக போராட்டம் கூர்மை பெற்றதும் பல இழிநிலைகள் அழிந்து போனதும் உண்மைதான் ஆனால் சாதி ஒடுக்குமுறை இன்னமும் உள்ளது. தமிழகத்தில் தலித் இயக்கம் சாதித்த பலவற்றை இங்கேயும் சாதிக்க வேண்டியுள்ளது. பிரா மண ஒடுக்குமுறைகளை தலித் இயக்கம் அடித்து நொருக்குகிறது. ஒடுக்கப்பட்டவனையெல்லாம் தகுதிவாய்ந்த நாற்காலிகளில் உட்காரவைக்கிறது. பல்கலைக்கழகங்களில் இந்த நிமிஷம் வரை மேல்சாதி ஒடுக்குமுறை வெளிப்படையாகவே காட்டப்படுகிறது. இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணப்பகுதிகுள் அரசாங்க அதிகாரிகளாக வர முடியாமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்தனர்.இன்று பல்கலைக்கழக விரிவுரையாளராக உயர்சாதித்தகைமையும் ஒன்றாய் வேண்டப்படுகிறது. அடிநிலையில் இன்னமும் ஒடுக்குமுறைகள் வலிமை பெற்றுள்ளனர். இந்த நிலையில் இந்த ஒடுக்குமுறைக்கான போராட்டம், தமிழக நிலையை அடியொற்றி விரிவடைவதை பேராசிரியர் எந்த அடிப்படை கொண்டு மறுக்கமுடியும்?

இருபதாண்டு கால ஈழத்துத் தமிழிலக்கியத்தடத்திலுள்ள கட்டுரைகள் ஆரோக்கியமான விவாதத்தினால் மேலும் பல கருத்துருவாக்கத்துக்கு அடிகோலும். மாக்சிய நெறிப்பாடு, அழகியல் இலங்கைத் தமிழ்த்தேசியம் என்பன பற்றிய பேராசிரியரின் கருத்துக்களுக்கு முரணானவாதங்களும் கருத்துக்களும் வைக்கப்படுகிற போது தெளிவு துலங்கும்.

இலக்கிய அரசியல் விஷயங்களில் விவாதந்தான் முக்கியம். விதிப்புகள் அல்ல. ஒருவர் சொல்லிவிட்டார் என்பதற்காக அல்லாமல் அவர் சொன்னதில் உள்ள நியாயத்துக் காகவே கருத்துக்கள் ஏற்கப்பட வேண்டும் என்கிறார் போராசிரியர்.

இப்போதுள்ள சூழலில் மிகுந்த விவாதத்துக்கு உரியது இந்தநூல். முற்போக்கு இலக்கியம் புதியதளத்தில் கால்பரப்பு இந்தநூலைப் பற்றிய தெளிவான கருத்தான விவாதங்கள் நிச்சயமாக அடியெடுத்துக்கொடுக்கும்.

செ.போ

**பலஸ்தீனக்கவிதைகள்**
**எம்.ஏ.நுஃமான்**
**மூன்றாவது மனிதன் பதிப்பகம்**
**37/14, வக்சோல் ஒழுங்கை**
**கொழும்பு - 02.**
**விலை ரூபா - 200.00**

பலஸதீனக் கவிதைகள் 1981 நவம்பரில் 30 கவிதைகளை உள்ளடக்கி வெளியாகிற்று. இப்போது 6 பெண்கவிஞர்கள் உட்பட 15 கவிஞர்களின் 71 கவிதைகளுடன் வெளியா கின்றது. பலஸ்தீன வாழ்வை சித்திரமாகப் பதிவுசெய்கிற கவிதைகள். மூன்று முன்னுரை கள் கவிதைக்குரலை உணர வைக்கின்றன. அழகிய பதிப்பு.



இன்றைய தென்னிந்திய தமிழ்த்திரைப் படங்களில் அதிகமானவைகளில் பற்றி கருணையுடன் பேசுமளவிற்கோ, விமர்சனம் செய்யுமளவிற்கோ அவைகளில் குறிப்பிடும் படியாக எதுவுமே இருப்பதில்லை. ஏனெனில், அவை வாழ்க்கைக்கும், யதார்த் தத்துக்கும் மிக, மிக தூரத்தே வைத்து உருவாக் கப்படுபவை.

தமிழ் திரைப்படங்கள் பற்றி இவ்வாறா னதொரு கருத்தியலைக் கொண்டனவாக, என்னை மேலுள்ள வரிகளில் வெளிப்படுத்திக் கொண்ட நான், இதற்கு அடுத்தடுத்த வரிகளில் ஒரு திரைப்படத்தைப் பற்றிப் பேசப் போகி றேன். அது "தெனாலி" எனும் தென்னிந்திய தமிழ் திரைப்படம்.

"தெனாலி" மீது கவனம் செலுத்தி, அது பற்றி இங்கு எழுத முனைவதற்கு, குறிப்பிடும் படியாக இரண்டு காரணங்கள் உள்ளன. அவை-

1. இத்திரைப்படத்தின் கதாநாயகன் ஒரு இலங்கையனாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதும், அவன் முழுக்க, முழுக்க யாழ்ப்பாண பேச்சு மொழி வழக்கை பின்பற்றியிருப்பதுமாகும்

2. பீ.எச். அப்துல் ஹமீது எனும் நமது தேச, சர்வதேச புகழ் தமிழ் ஒலிபரப்பாளர் ஒருவர் இத்திரைப்படத்தில் நடித்திருப்பது.

தெனாலி திரைப்படம் தயாரிப்பில் இருந்த போதே, அதைப்பற்றி புகழ்பாடலை நம் நாட்டின் அதிகமான தமிழ் ஊடகங்கள் ஆரம்பித்திருந்தன. தெனாலியைப் பார்ப்பது தமிழ் பேசும் ஒவ்வொரு இலங்கையனும் "தலையாய கடமை" என்பது போலவே செய்திகளையும், மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்களையும், அவைகள் ஆளாளுக்கு முந்திக் கொண்டு ஆரவாரத்துடன் வெளியிட்டிருந்தன.

கொண்டவர். இன்னும் சொன்னால், ஒரு அரைக்கிறுக்கு (அதையே யாழ்ப்பாண வழக்கில் கூறினால், "விசரன்") ஆக, ஒரு அரைக்கிறுக்கனின் பாத்திரத்தை கோமாளித்தனம் கலந்து, தத்ரூபமாக சித்தரிப்பதற்கு, மிகப் பொருத்தமான மொழி வழக்கென, கமலஹசனால் அடையாளம் காணப்பட்டதே; யாழ்ப்பாண பேச்சு வழக்கு!

அதிலும், யாழ்ப்பாண பேச்சு வழக்கு உச்சரிப்பில் இல்லாத "நீட்டல் முடக்கல்"களும், ஓசை வெளிப்பாடுகளும் மிக அதிகமாகவே படத்தில் கையாளப்பட்டிருக்கிறது. இடையிடையே கமல் பேசும் "யாழ்ப்பாண பாசை" யை, ஜெயராம்- முகத்தை கோணலாக அபிநயத்துக் காட்டி கேலி செய்வது கீழ்தரம்!

எப்படியோ, யாழ்ப்பாண தமிழ் வழக்கை தனது படத்தில் ஒரு பிரதான முதலீடாக வைத்து, கமல் காசு பண்ணியிருக் கிறார். அந்த வகையில் கமலுக்கு வெற்றி தான்! ஆனால்,

## "தெனாலி"



தன்மையும், சொரணையும் உள்ள ஒவ்வொருவருக்கும் நிச்சயம் கோபம் ஏற்பட்டே தீரும்.

இது இவ்வாறிருக்க, மறுபுறத்தே நமது பீ.எச்.அப்துல் ஹமீது அவர்களையும் இந்தப் படத்தில் மிகவும் வீணடித்திருக்கிறார்கள். தெனாலிக்காக, கமலுக்கு யாழ்ப்பாண தமிழை கற்றுக் கொடுத்தவர் பீ.எச். அவர்கள். எனவே- அந்த நன்றிக் கடனுக்காக அப்துல் ஹமீது அவர்களை ஏனோ தானோவென்று கமல் சற்றே நிமிடங்களுக்கு நடிக்க வைத்திருக்கிறார். ("நடிக்க" என்பதை விட "தோன்றி மறைய" என்பதே பொருத்தமாகும்.)

இப்படியான ஒரு பாத்திரத்துக்கு, பீ.எச். ஏன் ஒப்புக் கொண்டாரோ தெரியவில்லை. "கோமாளிகள்" மூலம் நான் அறிந்து வைத்திருந்த பீ.எச்.எனும் ஒரு நல்ல நடிகனைத்தான், தெனாலியிலும் எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றமே மிச்சம். பீ.எச். அப்துல் ஹமீதைப் பொறுத்தவரை, அவர் இதுபோன்ற "தோன்றி மறையும்" காட்சிகளில் நடித்துத்தான் புகழும், பிரபல்யமும் பெற வேண்டுமென்றில்லை. இன்று, உலககின் பல்வேறு நாடுகளிலுமுள்ள வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் ஆகக்குறைந்தது ஐந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை, ஒலி, ஒளி மூலமாக பீ.எச். மக்கள் முன் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்.

கமல் ஹாசன்; நமது பீ.எச். அப்துல் ஹமீது அவர்களின் திறமைகளையும், தகுதியினை யும் குறைவாக மதிப்பிட்டிருந்தமையின் காரண மாகவே அவரை இதுபோன்றதொரு காட்சியில் தோன்ற வைத்திருக்கிறார். ஏனெனில், அப்துல் ஹமீது அவர்களை, கமல் முழுமையாகப் புரிந்திருந்தால், இப்படியான ஒரு "இரண்டுங்

# கொச்சைப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண தமிழும் வீணடிக்கப்பட்ட பி.எச்.அப்துல் ஹமீதும்

ஆக, ஒருவகை ஆவல் மேலீட்டினால், படத்தை பார்த்தேன். ஆனால் துளிகூட ரசிக்கும் படியாக அமையவில்லை. படத்தில் கமல்ஹாசனை ரொம்பவும் விரயப்படுத் தியிருந்தார்கள். அத்தோடு விட்டார்களா? அந்த யாழ்ப்பாணத்து பேச்சு வழக்கை அவர்கள் பிர யோகித்த முறையும், வெளிப்படுத்தியிருந்த விதமும் உண்மையாகவே விசனத்தையும், கவலையையும் ஏற்படுத்தியது.

நம்நாட்டுத் தமிழ் பேசுவோர் எல்லோரும், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் பேசுவோர் அனைவரும்; கமல் ஏதோ பெரிதாக "கிழித்திருப்பதாக"வும், இலங்கை (யாழ்ப்பாண) தமிழை சர்வதேசப் படுத்தியிருப்பதாகவும் மகிழ்வோடு பீற்றிக் கொள்கிறார்களே... பாவம் நம்மவர்கள்! ஒரு பைத்தியக்காரனை, கிறுக்கனை, மன நோயாளியை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தக் கூடிய கோமாளித் தனமானதொரு பேச்சு மொழி வழக்காகவே, அங்கு யாழ்ப்பாணத் தமிழ் பிரயோகிக்கப் பட்டிருப்பதை ஏன் எவருமே கண்டு கொள்ள வில்லையா?

திரைப்படத்தின் கதைப் படி (கதை இல்லை என்பது வேறு விடயம்) கமல் ஒரு மன நோயாளி, எதைப் பார்த்தாலும் பயப்படும் சுபாவம்

> **ஒரு பைத்தியக்காரனை, கிறுக்கனை, மனநோயாளியை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்த கூடிய கோமாளித் தனமானதொரு பேச்சு மொழி வழக்க மாகவே, அங்கு யாழ்ப்பாணத் தமிழ் பிரயோகிக்கப்பட்டிருப்பதை ஏன் எவருமே கண்டு கொள்ளவில்லை?**

நாளை மட்டக்களப்பு தமிழ் பேசும் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, அவனை ஒரு திருடனாக, பயங்கரவாதியாக, ரௌடியாக காட்டப் போகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போதும், தென்னிந்தியக்காரர்கள் நம்மூர் தமிழை சர்வதேச மயப்படுத்தியிருப்பதாக கூறி, மீண்டும் நாம் அற்பத்தமாக சந்தோசித்துக் கொள்வதா?

தொலைக்காட்சிப் பெட்டியை ஆங்கிலேயர், "அழகான முட்டாள் பெட்டி" என்பார்கள். கேள்வி இது தான்; அழகு என்றதற்காய் அந்தப் பெட்டி சந்தோசப்பட்டுக் கொள்வதா? முட்டாள் என்றதற்காய் கோபித்துக் கொள்வதா? இதே நிலைதான் "தெனாலி" கதாபாத்திரமாக சித்தரிக் கப்பட்டிருக்கும் நம்மவரின் நிலையும் அதாவது, யாழ்ப்பாண தமிழ் சர்வதேச தரப்பட்டிருப்பதை நினைத்து சந்தோசப் படுவதா? அல்லது ஒரு பைத்தியக்காரனின், மன நோயாளியின் மொழியாக யாழ்ப்பாண தமிழ் சித்தரிக்கப் பட்டிருப்பதை நினைத்து விசனப்படுவதா? சிந்திக்கக் கூடிய

கொண்டான்", "நாடக" பாத்திரத்தில் "முகம் காட்ட" வைத்து வீணடித்திருக்க மாட்டார்.

எது எப்படியோ, கமல் எனும் ஒரு சகலகலா வல்லவன், "தெனாலி" எனும் ஒரு திரைப்ப டத்தின் மூலமாக, நமது யாழ்ப்பாண மக்களின் பேச்சு தமிழ் வழக்கினை கொச்சைப் படுத்தியமை, ஒரு சர்வதேச புகழ் தமிழ் (ஒலிப ரப்பாளர்) அறிவிப்பாளரை விரயம் செய்தமை தவிர, வேறெதனையும் "கிழித்து", "புரட் டியடித்திருப்ப"தாக தெரியவில்லை.

இரண்டே வரிகளில் சொல்வதென்றால், "தொனாலி" பற்றி இப்படிக் கூறலாம்;

**"முழு நீள நகைச்சுவை கலந்த**
**அறுவை நாடகம்"**

இறுதியாக, எமது ஆழ்ந்த அனுதாபங்கள் இதற்கும், இவர்களுக்கும் உரித்தாகுக;

யாழ்ப்பாண பேச்சுத் தமிழுக்கும்.

பீ.எச்.அப்துல் ஹமீது அவர்களுக்கும்

பெரிதாக எதிர்பார்த்து அறியாமை காரணமாக, தொனாலிக்கு மிகை விளம்பரங்களை "ஓசி"யாகப் பின்னித் தொலைத்த பத்திரிகைகளுக்கும், வானொலிகளுக்கும்.

**- யூயெல் மப்றாக்.**

இப் பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியன்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தில் 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.